Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 24 ரூபா 15/00

දිනමුරසු වාරමලර් ஜூலை 06-12, 2003

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 518

## சூடுபிடிக்கும் அதிகாரப் போட்டி!



## சான்றோர் பண்பு

வரட்சியினால் ஆற்றின் நீர் வற்றிய காலத்திலும் அதன் வழி சொல்லும் போது கடும் வெப்பத்தினால் அந்த ஆற்றின் மணல் நடந்து செல்வோரின் பாதங்களைச் சுடுகின்ற போதும், அவ்வாற்றின் மணலிடையே தோண்டும் போது அது நீரைத் தரக் கூடியது.

அவ்வாறே நற்குடியிற் பிறந்த பெரியோர்கள் வறுமை காரணமாகத் துன்பத்தை அநுபவிக்க நேர்ந்தபோதும் தம்மிடம் வந்து உதவும்படி இரந்து கேட்பவர்களுக்குத் தம்மாலானதைக் கொடுத்துவிடுவர்.

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா (று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து.

ஔவையார் அருளிய நல்வழி நூலில் இருந்து.

## ஆன்மீகம்

### இவ்வுலகில் குற்றமற்றவர் எவருமில்லை



இயேசு ஆலயத்தில் அமர்ந்து மக்களுக்குப் போதித்துக்கொண்டிருக்கையில் மறைநூல் அறிஞரும் பரிசேயரும் ஒரு பெண்ணை அவர் முன் கொண்டுவந்து நிறுத்தி, "விபசாரத்தில் இவள் ஈடுபட்டிருந்த வேளை கையும் மெய்யுமாகப் பிடித்தோம். மோசேயின் கட்டளைப்படி இவளை கல்லால் எறிந்து கொல்ல வேண்டும். நீர் என்ன சொல்கிறீர்" என்று அவரிடம் கேட்டனர். இயேசுவின் மீது குற்றம் சுமத்த நினைத்து அவரைச் சோதித்தனர். இதைக் கேட்டும் கேளாதவர் போன்று தரையில் குனிந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். பல முறை அவரை வருத்தினர். இயேசு நிமிர்ந்து அவர்களைப் பார்த்து "உங்களில் குற்றமற்றவன் இவள் மீது கல் எறியட்டும்" என்று கூறிவிட்டு மீண்டும் குனிந்து தரையில் எழுதிக்கொண்டிருந்தார். (யேசுவான் 8–4,5,6,7)

இதைக் கேட்ட அவர்கள் ஒருவர் பின் ஒருவராக அங்கிருந்து விலகிச் சென்றுவிட்டனர். இயேசு மட்டும் அங்கிருந்தார். அப் பெண்ணும் அங்கு நின்றுகொண்டிருந்தாள். இயேசு அப் பெண்ணிடம் "நீ குற்றவாளியென தீர்ப்பிடவில்லையா" என்று கேட்டார். அப் பெண் "இல்லை" என்று கூற "நானும் தீர்ப்பளிக்கவில்லை. நீ போகலாம் இனி பாவம் செய்யாதீர்" என்றார்.

அன்புச் சகோதரர்களே! எம்மில் குற்றமற்றவர்கள் யாருமே இவ்வுலகில் இல்லையென்பதை உணர்வீர்கள்தானே? பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை, பொறாமை இவைகள் நான்கும்தான் எல்லாப் பாவச் செயல்களுக்கும் தலைமையான காரணம். உண்மையான உள்ளத்துடன் இயேசுவின் பத்துக் கட்டளைகளை அனுசரித்து நடப்போமானால் அனைவருமே தூய உள்ளத்துடன் மட்டுமல்ல எம் வாழ்க்கையும் என்றும் மலர்ந்து பூத்துக் குலுங்கும் மலர்ச்சோலையாகத் திகழ்வது திண்ணம். இறைமகன் இயேசுவின் ஆசியும் என்றும் குறையாது.

ஜோசப் அருள்சாமி 'இராணி மகால்', இராஜவல்ல.

## தொழுகை மிக அவசியம்

இஸ்லாம் ஒரு மறுமலர்ச்சி இயக்கம். இவ்வியக்கத்தின் உள்ளார்ந்த கொள்கை, சட்டங்கள் இறைவனால் அருளப்பட்டன. மனித இனம் இப்படித்தான் வாழ வேண்டுமென அவை கோடிட்டுக் காட்டுகின்றன. இறைவனால் இயற்றப்பட்ட சட்டங்களைச் செயற்படுத்தும் பொறுப்பு மனிதனிடம் இருக்கிறது. கடமைகளில் தவறியவர்களை மறுமையில் தண்டிக்கும் அதிகாரம் எல்லாம் வல்ல இறைவனிடம் இருக்கிறது. இம்மையில் அவர்களைத் தண்டிக்கும் தகுதி இஸ்லாமிய அரசுக்கும் இருக்கிறது.

அந்தக் கடமைப் பணிகளை மனிதன் இறைவனுக்குச் செய்ய வேண்டிய பணிகள், மனிதன் மனித சமுதாயத்துக்குச் செய்ய வேண்டிய பணிகள் என இரு வகைப்படுத்தலாம். கடமை வகையில் இவ்விரண்டுமே இன்றியமையாதவை. முக்கியத்துவம் வாய்ந்தவை.

கடமைகளை எல்லாம் உணர்ந்து செயற்படுவதற்கு தொழுகை ஒரு தலையாய கடமையாகும். தொழுகையில் எல்லாப் பேறுகளும் உள்ளடங்கி இருக்கின்றன. அவற்றைப் பெற்று மகிழ வேண்டுமானால். தொழுகையின் மெய்ப் பொருள் காண்பதும். அதன் முறைமை தழுவலும் ஒழுங்கு விதிகளைப் பேணி நிற்றலும் அவசியமாகிறது.

அலாவுடீன் ஏ.எஸ்.ஏ.பாபு, திருகோணமலை.

## கவிதைப் போட்டி இல.515

### பரிசுக்குரிய கவிதை

### வஞ்சமில்லா நெஞ்சங்கள்

தஞ்சமடைந்த இடத்திலே
கிடைத்த கஞ்சி கொஞ்சமென்றாலும்
நெஞ்சினில் வஞ்சனை இல்லாமல்
பிஞ்சுகள் நாங்கள் ஒன்று சேர்ந்தே
உண்போம்.

என்.ஜெகதீஸ், ஹல்கிரனோயா

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### 'போஸ்'

வெள்ள நிவாரணத்தில்
கிடைத்த
வேகாத வெறும் சோற்றை
அள்ளியதன் அறுசுவை
காண முன்பு,
கொடுங்கடா
புகைப்படத்திற்கு 'போஸ்.'

அமுதா,
பொகவந்தலாவ.

### ஏழைகள்

உருக்குன்றி நிலைமறந்து, உணவின்றிக் கருவறுத்து
பசியேற்றுத் துடிதுடித்து, பருவமிழந்து பரிதவித்து
சிறகில்லாப் பறவையென, அனல்விழுந்த தளிர்கள் மூன்று
தவிக்கின்றதய்யா பசியென்ற கொடுமையினால்!
ஏழையென்ற வினாவிற்கு! விடையென்பது இதுதானோ?

பா.ஜெயப்பிரகாஷ், சித்தாண்டி.

### ஒரு பங்கு

இழப்பதற்கு ஒன்றுமில்லை,
உரிமை கூட மிச்சமில்லை,
பசியாறச் சோறில்லை
பார்த்தாறப் பானையுண்டு
அஞ்சாதே!
வெளிநாட்டு நிதி வருமாம்.
மிஞ்சினால்....
உனக்கு(ம்) ஒரு பங்கு.

புனிதசீலன் பிரதீபன்,
மட்டக்களப்பு.

### அமிர்தமாகும்!

பாழாய்ப் போன
யுத்தத்தால்
பாவிகள் இவர்களுக்கு
பழஞ்சோறு
அமிர்தமாச்சு!

ரீ.நவாஸ், புத்தளம்.

### பசிப் பிணி

பாலும் பழமும்
பகிர்ந்துண்ண வேண்டிய
பாலகர் இவர்கள்
பசிப் பிணி காரணத்தால்
பழஞ்சோற்றில்
மொய்க்கின்றனர்!

எச்.நுசாருதீன்,
மதுராங்குளி.

### யாருக்குத் தெரியும்?

ஏழ்மையைப் போக்கிட....
பெற்றவள் சென்றாள் வெளிநாடு!
அனுப்பிய பணத்தை...
குடித்தே அழித்தான் தந்தை...!
பச்சிளங் குழந்தைகள்
பசியைப் போக்கிட....
பானையில் கிண்டுவது
சோறா? கஞ்சியா?

மனோ கோபாலன்,
ஹப்புத்தளை.

### அரசியல் வாதிகளே...!

வாக்குறுதிகளை
வகை தொகையாய்
வழங்கிய அரசியல்வாதிகளே....
இந்தப் பிஞ்சுகள்
கஞ்சிக்கும் வழியின்றி
படும் துயர் பாருங்கள்!
'பென்ஸ்' காரில் நீங்கள்
சுற்றி வந்தால் இவர்கள்
துயர் தீருமா சொல்லுங்கள்?

சி.நாகேந்திரன், ஆரையம்பதி–03.

### தாக்கம்

இயற்கையின் சீற்றம்
யுத்தத்தின் கொடூரம்
இவற்றால் இன்று
அநாதைகளாய்
தள்ளப்பட்டோம்
இந்நிலைக்கு!

லோகநாதன்
சந்திரிக்கா,
மஸ்கெலியா.

## கவிதைப் போட்டி இல.518



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 12.07.2003

கவிதைப் போட்டி இல.518
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### கூட்டம் (ஞ்) சோறு

வெள்ளம் வேட்டையாடியதில்
எல்லாம் போய்ச்சேர்ந்ததில்
அங்கொன்றும் இங்கொன்றும்
மிச்சமாய்கிடந்து ஒன்றுசேர்ந்து
கூட்டம் சேர்த்து கூட்டம் (ஞ்) சோறு
சமைக்கின்றதோ?....

இராமச்சந்திரன் தவேந்திரன்
ஹாலி – எல.

### விடியலை நோக்கி

சமாதானக் கனவு
கானல் நீராகி
கால் வயிற்றுக் கஞ்சிக்கு
காக்கை போல் கூடும்
காலம் தான் மாறுமோ
கடல் கடந்து பெற்ற
'கரன்சி' நோட்டால்....?

ம.விதுஷினி, கொழும்பு–04.

## உங்கள் பக்கம்

### கதிரையின் தகுதி....?

புகழ் பூத்த ஒரு தொழில் நுட்ப நிறுவனம். அதன் அலுவலகத்தில் இயக்குநர் அறையில் ஒரு கதிரை. சுந்தரங்களும் நாயகங்களும் அமர்ந்து அறிவுச் சுடர் ஏற்றினார்கள். கதிரை இறுமாப்புடன் இருந்து வந்தது. கதிரைக்கு வெள்ளிதிசை முடிந்து சனி திசை ஆரம்பித்தது. இடையில் சிறு சிறு ஆட்டங்கள். திடீரென ஒரு நாள் ஒருவர் கூலாக அதில் குந்திியிருக்கிறார்! கதிரை வெலவெலத்து விட்டது. யார் இவர்? எங்கிருந்து வந்தார்? என்ன படித்தவர்? அநுபவம் என்ன? வேற்றுக் கண்டத்து மனிதரோ?

Charter இல்லாத Engineer ஐக் கூடத் தன்மேல் இந்தக் கதிரை குந்த விட்டதில்லை. பிறகு ஏன் இப்படி? மேலாளர்களுக்கெல்லாம் கதிரை முறைமையிட்டது. யாருமே கதிரையைத் திரும்பியும் பார்க்கவில்லை. சிங்கம் மாமாவின் சதி கதிரைக்குத் தெரியவில்லை. கதிரை குமுறிக் குமுறி அழ ஆரம்பித்தது. யாரும் அதற்கு ஆறுதல் சொல்லவில்லை. ஏன் இப்படி நடந்தது என்று அது போவோர் வருவோரையெல்லாம் கேட்டது. யாருக்குமே விடை தெரியவில்லை. உங்களுக்காவது தெரிந்தால் கதிரைக்குச் சொல்லுங்களேன், பாவம், கதிரை அழுதுகொண்டே இருக்கிறது!

அ.காண்டீபன்,
வட்டுக்கோட்டை.


மடல்கள் மற்றும் ஆக்கங்கள்– உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -074-514282
தொலை நகல் (Fax):–074-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk




எந்தன் இதயத்தில் அழியாத இடம் பிடித்துவிட்ட இனிய தினமுரசே.....

ஒவ்வொரு வாரமும் – உன் வரவை எதிர்பார்த்து வழி மேல் விழி வைத்துக் காத்திருக்கின்றேன்!

நீ சுமந்து வரும் ஒவ்வொரு அம்சமும் வெகு சிறப்பு.

உன் வளர்ச்சி மென்மேலும் வளர என் இனிய வாழ்த்துக்கள்.

செல்வி.சாந்தி சுப்பிரமணியம், பதுளை.

## வாசக[ர்] சாலை

### இனிய முரசே!

சூடு, சுவை, சுவாரசியத்துடன் செய்திகளை அள்ளித் தருவதில் முரசை மிஞ்சுவதற்கு வேறு எந்தப் பத்திரிகையாலும் முடியாது. இம்முறை முரசில் அரசியல் படுகொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற ஆசிரியர் கருத்து பல உண்மைகளை எமக்கு உணர்த்துகின்றது. தமிழனைத் தமிழன் கொல்வதால் நாட்டில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களுக்குமே பாதிப்புத்தான்.

பே.ஹர்சனா, கந்தளாய்–02.

### மதிப்புள்ள முரசே!

யாழ்ப்பாணத்தில் முரசு ஓரிரு தடவைகள் தாமதித்து வந்ததால் பெரும் கவலையடைந்தேன். அலசுவது–இராஜதந்திரி, எக்ஸ்ரே ரிப்போட், நெட்டிலிருந்து அனைத்தும் நன்றாக இருந்தது. தேண் கிண்ணம் பகுதிக்கு நல்ல ஆக்கம் சமர்ப்பித்தால் பிரசுரிப்பீர்களா? தரமானதாக எழுதி அனுப்புகிறேன்

முரசு என்றும் வாழ்க, எங்கும் வாழ்க.

ச.நிதிபன் – யாழ்ப்பாணம்.

எனது சோலையில்
ஒரு மலராகப் பூத்திருக்கும்
தினமுரசே! நீ எப்படிப் பிறந்தாய்
எப்படி வளர்ந்தாய் என்பது
தெரியாத வண்ணம்
உன்னுடைய வளர்ச்சி
வேகமெடுத்துவிட்டது. உன் வளர்ச்சிக்கு
உன் உழைப்பிலுள்ளது உன்
உயர்வு.
எங்கள் இதயச் சுவர்களின் சுவாச
நாளங்களாகி
அதிலே நீ ஓட்சிசனாய் எனக்கு
அறிவுரை கூறினாய்.
எனக்குள் உறங்கிக் கிடக்கும் வார்த்தைகளைத் தட்டி எழுப்புகிறாய் முரசே.
உன்னை வாழ்த்துவதற்குச் சந்தர்ப்பம்
அளித்த உனக்கு என் கோடானு கோடி
வாழ்த்துக்கள்.

ஆர்.நவாஸ், சாளம்பைபுரம்.

என்
மனமென்னும்
மலர்த் தடாகத்தில்
பூத்துக் குலுங்கும்
பூக்களெல்லாம்
தினம் தினம்
தினமுரசென்றே
உன் நாமம்
ஜெபிக்கிறது.
இன்று போல்
என்றும்
ஜெயித்து நிற்க
நங்கையிவழிதழ்கள்
நாவினாலே
வாழ்த்துப் பாமாலை
சூடுகிறது!

புஹாரி நபீஸா,
அனுராதபுரம்.

### வாழ்க வளர்க!

வாரம் தோறும்....
வண்ண மலராய்!
வானில் தோன்றும்...
விண்மீனாய்!
தமிழ் மொழியின்....
நாயகனாய்!
வண்ண முகத்துடன்....
வலம் வரும்...
தினமுரசே!
காலம் தோறும்.....
உன் சேவை.....
களைப்பின்றித் தொடர....
கலைமகள் ஆசியுடன்.....
வளர்க வாழ்கவென....
வாழ்த்தி நிற்கின்றேன்!

கலைப்பிரியன்
வேணு,
பெரியநீலாவணை–01.

### எழில் தரும் முரசே!

சின்னச் சின்ன எழுத்துக்களில் செய்திகளை வாராவாரம் வழங்கி வந்த முரசு இப்போது வாசகர் தேவை உணர்ந்து அதன் எழுத்துக்களைப் பெரிதாக அச்சிடுவது கண்டு ஆனந்தமடைகின்றேன். எழில் தரும் முரசு பக்க அமைப்பிலும் எம்மைச் சொக்க வைக்கிறது.

எம்.சி.கலீல், கல்முனை – 05.

# அரசியல் கொலைகளைக் கண்டித்து லண்டனில் இலங்கையர்கள் ஆர்ப்பாட்டம்!

ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி உறுப்பினர் சுபத்திரன் மற்றும் மாற்றுத் தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் புலிகளால் தொடர்ச்சியாகக் கொலை செய்யப்பட்டுவருவதைக் கண்டித்து லண்டனில் கடந்த 27ம் திகதி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடைபெற்றிருக்கிறது.

சமாதானத்துக்கும் ஜனநாயகத் துக்குமான அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்த ஊர்வலம் லண்டனில் ஹைட் பாக் கோணரில் உள்ள நோர்வே தூதரகத்துக்கு முன்பாக நடைபெற்றது.

ஊர்வலத்தில் பங்குகொண்ட லண்டன் வாழ் இலங்கை தமிழ்-சிங்கள-முஸ்லிம் பொது மக்கள் புலிகள் சமாதானத்தைப் பயன்படுத்தி ஜனநாயக அரசியலைக் குழிதோண்டிப் புதைக்க எடுக்கும் முயற்சியை வன்மையாகக் கண்டித்ததோடு இது விடயத்தில் நோர்வே மத்தியஸ்தர்கள் தலையிட்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

இதற்கிடையில் இலங்கையில் இத்தகைய ஜனநாயக விரோத கொலைகளைக் கண்டித்து தமது எதிர்ப்பைப் பதிவு செய்யும் முயற்சியை தமிழ் ஜனநாயக அமைப்பு மேற்கொண்டிருக்கிறது. Tamil Democracy@Yahoo.com என்ற இணையத்தள முகவரியில் கையொப்பம் இடுவதன் மூலம் உலகம் முழுவதிலும் உள்ள இலங்கை மக்கள் தங்களது எதிர்ப்பைப் பதிவுசெய்ய முடியும். தென்னிலங்கையில் உள்ள ஜனநாயகவாதிகள் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க வேண்டும் என்று இந்த அமைப்புக் கேட்டிருக்கிறது.

# பிந்துனுவெவ கொலை வழக்கில் 5 பேருக்கு மரண தண்டனை!

2000ம் ஆண்டு பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் 27 தமிழ் இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 5 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

இவர்களில் 3 பேர் பிந்துனுவெவ கிராமவாசிகள். இருவர் சம்பவ தினத்தன்று கடமையில் இருந்த பொலிஸார். போதிய சாட்சிகள் இல்லாமையினால் 13 பேர் விடுதலை பெற்றனர்.

மரண தண்டனை வழங்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் கண்ணீர்மல்கத் தமது ஆட்சேபனையைத் தெரிவித்தார்கள்.

புலி சந்தேக நபர்களெனப் பிடிக்கப்பட்டு புனர்வாழ்வு அளிப்பதற்காக மலைநாட்டின் பின்துனுவெவ என்ற இடத்தில் முகாமில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் மீது அக் கிராம வாசிகள் இரவு நேரத்தில் திடீரென மேற்கொண்ட கொடூரமான தாக்குதலில் 27 பேர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர்.

# படகில் இத்தாலி செல்ல முயன்ற 190 பேர் தங்காலையில் கைது!

சட்டவிரோதமான முறையில் இலங்கையின் தென்பகுதிக் கடல் வழியாக வெளிநாடு செல்ல முற்பட்ட படகு ஒன்றில் இருந்த 190 பேரை, தங்காலைக்கு மேற்காக 7 கடல் மைல் தூரத்தில் வைத்து இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். செவ்வாய்க் கிழமை அதிகாலை இவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந்தப் படகில் இருந்தோரில் 30 பேர் பாகிஸ்தானியர்கள், இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் மற்றும் தென்பகுதிச் சிங்கள இளைஞர்களும் அடங்குவர். வர்த்தகர் ஒருவருக்குப் பணம் செலுத்தி இத்தாலி செல்ல முற்பட்டதாக ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. தங்காலை கடற்படை முகாமில் இவர்கள் தற்போது தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

# இந்தியத் தலையீட்டை வலியுறுத்துகிறார் டக்ளஸ்

இலங்கையில் தற்போது உருவாகி வரும் ஆபத்தான நிலையைத் தவிர்ப்பதற்கு இந்தியா உடனடியாகத் தலையிட வேண்டும் என்று ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா புதுடில்லியில் வைத்து இந்திய அரசாங்கத்தை கோரியிருக்கிறார்.

இந்திய அரசியல் தலைவர்களையும் முக்கிய தலைவர்களையும் சந்தித்த டக்ளஸ் புலிகளின் தன்னிச்சையான செயற்பாடுகளால் ஏனைய அரசியல் கட்சிகளின் உரிமைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஆபத்தான கொலைக் கலாசாரம் ஒன்று உருவாகியுள்ளதாகத் தெரிவித்தார். இந்தியாவின் பாதுகாப்பு நலன் மோசமாகப் புறந்தள்ளப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டியிருக்கும் அவர் இந்திய அரசின் உடனடித் தலையீட்டை வலியுறுத்தியுள்ளார்.

# வன்னி திரும்பும் புலி உறுப்பினர்களுக்குப் பதிலாக புதியவர்கள் வருகை

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட ஆரம்ப நாட்களில் யாழ் குடாநாட்டிற்கு அரசியல் பணிகளுக்காக வந்து தங்களைப் பதிவு செய்து கொண்ட புலி உறுப்பினர்களில் பெரும்பாலானோர் தற்போது படிப்படியாக வன்னிக்கு திரும்பிச் செல்லும் அதே வேளை, சாதாரண பொது மக்கள் போன்று புலி உறுப்பினர்கள் குடாநாட்டிற்குள் வருவது கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளது. தற்போது யாழ்ப்பாணத்தில் மீதமுள்ள குறிப்பிட்ட அளவு புலி உறுப்பினர்களும் திரும்பிச் சென்றால் ஒரு நிலையில் அரசியல் பணிகளுக்காகக் குடாநாட்டிற்குள் வந்த தமது சகல உறுப்பினர்களும் வன்னிக்குத் திரும்பிவிட்டதாகப் புலிகள் கூறக்கூடிய சூழ்நிலை உருவாகி வருகிறது. இவ்வாறு உறுப்பினர்களை மாற்றும் புலிகளின் திட்டம் பாதுகாப்புத் தரப்பினரால் சந்தேகத்தோடு பார்க்கப் படுவதாகத் தெரிகிறது.

# சயனைட் அருந்திய புலி உறுப்பினர் மருத்துவமனையில் மரணம்!

கடந்த மாதம் வெள்ளவத்தைப் பாலத்துக்கருகில் பொலிஸாரினால் தடுத்து நிறுத்தப்பட்டபோது சயனைட் அருந்தித் தற்கொலை செய்துகொள்ள முயற்சித்த மட்டக்களப்பைச் சேர்ந்த செல்வராசா என்ற புலிகள் இயக்க பிஸ்டல் குழு உறுப்பினர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடந்த 26ந் திகதி உயிரிழந்தார். சயனைட் அருந்தி பாதிப்புக்குள்ளான இவர் முதலில் கொழும்பு தெற்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கே 43வது வாட்டில் அவர் உயிரிழந்தார். இவரது சடலத்தைப் பொறுப்பேற்க எவரும் முன்வராததினால் தொடர்ந்து 7 நாட்கள் பொலிஸ் சவச்சாலையில் வைத்திருந்து பின்னர் தகனம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சாட்சி சொல்லும் முஸ்லிம் இளைஞர்களுக்கு எச்சரிக்கை

## கைக்குண்டு, மண்டையோட்டுப் படங்களுடன் சுவரொட்டிகள்

உடதலவின்னை முஸ்லிம் இளைஞர்கள் கொலை வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கும் முன்னாள் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த மற்றும் அவரது மகன்மாருக்கு எதிராக நீதிமன்றத்தில் சாட்சி சொல்வோர் கொலை செய்யப்படுவார்கள் என்று எச்சரிக்கும் சுவரொட்டிகள் வத்தேகம, மடவளைப் பகுதிகளில் ஒட்டப்பட்டுள்ளதாக வத்தேகம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த போஸ்டர்களில் எச்சரிக்கை வாசகங்களோடு கைக்குண்டு ஒன்றும் மண்டை ஓட்டுச் சின்னமும் காணப்படுகிறது. இது விஷமிகளின் வேலையாக இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த வழக்கில் அனுருத்த ரத்வத்தைக்கும் ரோகான், சானுக்க ரத்வத்த உள்ளிட்டோருக்குத் தொடர்ந்து பிணை அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. சம்பவத்தை நேரில் பார்த்த மடவளைப் பகுதி இளைஞர்களின் சாட்சியங்கள் பலமான ஆதாரங்களாக இருக்கும் நிலையில் இந்த வழக்கில் சாட்சி சொன்ன பலர் மறைமுகமாக எச்சரிக்கப் பட்டுள்ளனர் என்று தெரிய வருகிறது.

# வெளிநாடுகளிலிருந்து வரும் புலி உறுப்பினர்களும் கொழும்பில் கண்காணிப்பு

கொழும்பில் தேடுதல்கள், சுற்றிவளைப்புகள் அதிகரித்து வரும் நிலையில் வெளிநாடுகளிலிருந்து வரும் சில முன்னாள் புலி உறுப்பினர்களும் கொழும்பில் சி.ஐ.டியினரால் விசாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

நீண்ட காலம் வெளிநாடொன்றில் இருந்துவிட்டு இங்கு வந்து கின்ரோஸ் அவனியூவில் உள்ள லொட்ஜ் ஒன்றில் தங்கியிருந்த மாறன் என்று அழைக்கப்படும் முன்னாள் புலி உறுப்பினர் ஒருவர் சி.ஐ.டியினரால் விசாரிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. வேறு சிலரும் இவ்வாறான விசாரணைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதற்கிடையில் சுற்றிவளைப்புகள், தேடுதல்கள் என்பன பாதாள உலகத் தினரையும் குற்றவாளிகளையும் குறிவைத்தே நடத்தப்படுவதாகத் தெரிவித்திருக்கும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தமிழ் மக்கள் இது குறித்து அஞ்சத் தேவையில்லை எனக் கூறியிருக்கிறார்.

# தமிழ் காங்கிரஸுக்குள் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிப்பதாக சம்பந்தன் மீது குற்றச்சாட்டு

தமிழ்க் கூட்டமைப்புக்குள்ளும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸுக்குள்ளும் குழப்பங்களை ஏற்படுத்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் இரா.சம்பந்தன் சதி செய்து வருவதாக தமிழ்க் காங்கிரஸ் வட்டாரங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார், குமரகுருபரன் போன்ற தமிழ்க் காங்கிரஸ் முக்கியஸ்தர்களை தனித்தனியாகப் பிரித்து அக் கட்சியைப் பலவீனப்படுத்த முயற்சித்து வருவதாக மூத்த தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் செயற் குழுவுக்கு கஜேந்திரகுமாரை உள்வாங்குவதற்காகவே ஒரு கட்சியில் இருந்து இக் குழுவில் இரண்டு பேர் இடம் பெறுவார்கள் என்ற பொது விதியை மாற்றியமைத்து ஒரு கட்சியிலிருந்து தலா மூன்று பேரைச் சேர்த்துக்கொள்ளும் பிரேரணையைச் சம்பந்தன் அண்மைய செயற்குழுக் கூட்டத்தின்போது முன்வைத்ததாகத் தெரிய வருகிறது. கஜேந்திரகுமாரை தனிப்பட்ட ரீதியில் முக்கிய பொறுப்புகளுக்கு நியமித்து கட்சியின் ஏனையவர்கள் மத்தியிலிருந்து அவரைப் பிரித்து வைக்கவும் இதன் மூலம் தமிழ்க் காங்கிரஸின் பலத்தை சிதைக்கவும் சம்பந்தன் முயற்சி செய்கின்றார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

# மாளிகாவத்தையில் கோயில் திருவிழா

மாளிகாவத்தை சித்திவிநாயகர் கோயிலின் பதினாறாவது வருசாபிஷேக திருவிழா இம் மாதம் 1ம் திகதி முதல் 9ம் திகதி வரை நடைபெறும். தினமும் விசேட பூஜைகளும், வசந்த மண்டப பூஜைகளும், சுவாமி உள்வீதி வலம் வருதலும் நடைபெறும். 10.07.2003 அன்று காலை 8.00 மணிக்கு சங்காபிஷேகமும். 11ந் திகதி அன்னதானமும் 15ந் திகதி வைரவர் மடையும் நடைபெறும்.

# யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கூட்டத்தை நடத்த நிர்வாகிகளை நிர்ப்பந்திக்குமாறு உறுப்பினர்கள் கொழும்பு, வெளிநாட்டு கிளைகளிடம் வேண்டுகோள்

## வெளிநாட்டிலிருந்து சங்கத்துக்கு பணம் அனுப்புவதை நிறுத்துமாறும் கோரிக்கை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பெருமளவு நிதி மோசடிகள் இடம் பெற்றுள்ளதாகவும், இந்தக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் நான்கு ஆண்டுகள் கூட்டப்படாமல் இருப்பது குறித்தும் இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் அதன் நிருவாகிகள் மீது கடுமையான குற்றச்சாட்டுகளைத் தெரிவிக்கின்றனர்.

இந்துக் கல்லூரியில் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக முன்னாள் யாழ் அரச அதிபர் சண்முகநாதனும், செயலாளராக உதயன் பத்திரிகையின் நிறைவேற்று அதிகாரியான வித்தியாதரனும் தொடர்ந்து இருந்து வருகின்றனர். கல்லூரிக்காகப் புதிய கட்டட நிர்மாண வேலை ஒன்றை உதயன் பத்திரிகை நிறுவனம் பொறுப்பேற்று சுமார் இரண்டு ஆண்டு காலமாக மேற்கொண்டு வருகிறது. இந்தக் கட்டட நிர்மாணப் பணி பூர்த்தியான பின்னரே சங்கத்தின் பொதுக் குழு கூட்டப்படும் என்றும், கணக்கு வழக்குகள் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவித்து வருகின்றனர். இது தொடர்பாக இக் கல்லூரியின் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அதன் கொழும்புக் கிளையில் முறைப்பாடு செய்துள்ளதோடு இனிமேல் இச்சங்கத்தின் பெயரில் பணம் அனுப்புவதை நிறுத்துமாறு வெளிநாட்டுக் கிளைகளையும் கோரி வருகின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளைக் கூட்டம் நடைபெற்றபோது அங்கு வருகை தந்த யாழ் கிளை உறுப்பினர்கள் தமது கல்லூரியின் பழைய மாணவர் சங்க நிர்வாகிகளின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்ததோடு உதயன் பத்திரிகை நிறுவன குடும்பத்தினரின் பொருளீட்டும் இடமாகப் பழைய மாணவர் சங்கம் ஆகிவிட்டதை எடுத்துக் கூறினர். எதிர்காலத்தில் வெளிநாட்டுக் கிளைகள் இந்தச் சங்கத்துக்கு பணம் அனுப்புவதை நிறுத்த வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டனர். இதே வேளை இந்தக் கல்லூரியின் அதிபர் பழைய மாணவ சங்க நிர்வாகிகளின் செயற்பாடுகள் தொடர்பாக கையறுநிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாகவும் பாடசாலையின் ஒழுக்கக் கோட்பாட்டை முற்றிலுமாக மீறும் வகையில் சில பழைய மாணவர்கள் நடந்துகொள்வதாகவும் தெரிவித்தனர். பாடசாலையின் குமாரசுவாமி மண்டபத்திற்கு முன்பாக பழைய மாணவ சங்க முக்கியஸ்தர்கள் மது அருந்தி கூத்தாடும் நிலை உருவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சங்கத்தின் பொதுக் குழுவைக் கூட்ட கொழும்பு மற்றும் வெளிநாட்டுக் கிளைகள் உதவ வேண்டும் என்று யாழ் கிளை உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டனர். இதன்போது உதயன் பத்திரிகை நிறுவனத்தின் செயற்பாடுகள் கடுமையாக விமர்சிக்கப்பட்டதுடன் அந்த நிறுவனத்தாரின் முன்னைய காப்புறுதித் திட்ட நிதி மோசடிகள் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

# முரசம்

## மனிதப் புதைகுழிகள்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

யாழ்ப்பாணத்தில் கண்ணிவெடி அகற்றும் பணியிலீடுபட்டுள்ளவர்கள், அரியாலை நெடுங்குளம் சந்தியினருகில் மனித உடல் எச்சங்கள் சிலவற்றைக் கண்டெடுத்துள்ளனரென்றும், இதையடுத்து யாழ் நீதவான் விக்னராஜா அப் பகுதியில் மனிதப் புதைகுழிகள் ஏதும் உள்ளனவாவென அறிய, நிலத்தைத் தோண்டும்படி உத்தரவிட்டுள்ளதாகவும் சில நாட்களின் முன்னர் வெளிவந்த செய்தி மீண்டும் ஒரு துர்க்குறி பற்றிய கவலையை ஏற்படுத்தியுள்ளது.

சுமார் ஐந்து வருடங்களுக்கு முன்னரும் இவ்வாறான தடயங்களை அடையாளம் கண்டதன் விளைவாக, யாழ். செம்மணிப் பகுதியில் நிலம் தோண்டப்பட்டபோது அங்கு மனிதப் புதைகுழி ஒன்று இருந்தது பற்றிய உண்மைகள் வெளி வந்தன.

அப்போது நிகழ்ந்த விசாரணைகளில் இராணுவ வீரர்கள் இருவர் இராணுவத்திற்கு எதிராகச் சாட்சியமளித்ததில் அப் படுகொலை பற்றிய விபரங்கள் பரபரப்புடன் தெரியவந்தன. அப் படைவீரர்கள் மற்றொரு கொலை வழக்கில் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்ட நிலையில் இவற்றை வெளிக் கொணர முன்வந்தனர்.

தற்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் மனித எச்சங்கள் பற்றிய தகவல்களை ஆராய்வதற்கு அப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகள் தடைகளாக உள்ளன. இப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் இங்கு நிகழ்ந்திருக்கக் கூடிய படுகொலைகள் பற்றிய உண்மைகள் எவ்வளவு தூரம் வெளியாகுமென்பது சந்தேகமே.

இலங்கையில் இது போல் இன்னும் எத்தனை புதைகுழிகள் உள்ளன. அவை யாரால் ஏற்படுத்தப்பட்டன என்று யாருக்கும் தெரியாது. யாழ் துரையப்பா விளையாட்டரங்கிலும் மனிதப் புதைகுழிகள் உள்ளதாக முன்னர் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அது பற்றிய விசாரணைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறான புதைகுழிகள் வடக்குக் கிழக்கில் மட்டுமன்றி தெற்கிலும் கண்டறியப்பட்டுள்ளன. சூரியகந்த படுகொலைகள் தெற்கில் ஜே.வி.பி.யினரை அடக்கியொடுக்கும் கோதாவில் பாடசாலை மாணவர்களைக் கொன்று புதைத்த கொடூரத்தின் சாட்சியங்களாக வெளிவந்திருந்தன.

இப் புதைகுழிகள் பறைசாற்றும் உண்மை என்னவென்றால், மனிதத்தைச் சகித்துக்கொள்ள முடியாத மனோபாவம் இந் நாட்டில் கோலோச்சியிருந்ததென்ற வரலாற்றுக் கறையை நாம் இன்னும் சுமந்துகொண்டிருக்கிறோம் என்பதையே.

எனினும் இப் புதைக்குழிக் கலாசாரம் இலங்கையின் வன்முறை அரசியலில் இனியும் தொடராதென்பதை யாரும் உறுதி கூற முடியாத துர்ப்பாக்கிய நிலையே இன்னும் நிலவுகிறது. அதேவேளை காணாமற் போதல் என்பது இங்கு மிகச் சாதாரண விடயமாக ஆகிவிட்டது. இவற்றுக்கு நிரந்தரமான முற்றுப்புள்ளி இல்லாத நிலையில் இயல்பு வாழ்க்கை பற்றிக் குரலெழுப்புவது அர்த்தமில்லாததாகத் தொனிக்கிறது.

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# ரணில் போடும் ‘காலக் கணக்கு’

இன்றைய இலங்கையின் நாட்கள் எண்ணப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இரண்டு பாரிய நிகழ்வுகள் எப்போதும் நிகழலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒன்று, ஆட்சி மாற்றம்.

மற்றையது யுத்தம்!

சமகால நிகழ்வுகள் பலவும் இவற்றுக்கான சாத்தியங்களை வலுப்படுத்திச் செல்வதாகவே இருக்கின்றன. யுத்தம் மூழுமா என்ற கேள்வி குறித்து யாவரும் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளனர். தமிழ் ஊடகங்களின் போக்கும் மாறி வருகிறது.

அரசாங்கத்துக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்பத்தில் இவ் வூடகங்கள் சமாதானத்தையே பிரசாரம் செய்தன. சமாதானத்தையே நாட்டின் சகல இன மக்களும் விரும்புகின்றனர் என்றும் சமாதானத்தை யாரும் குழப்பிவிடக் கூடாதென்றும் கூறின.

ஆனால் தற்போது அந்தத் தொனி மாறிவிட்டது. யுத்தமொன்று ஏற்பட்டால் அதற்கு அரசாங்கம் புலிகளின் கோரிக்கைகளுக்கு இணங்காமையே காரணம் என்று காட்டும் வகையில் தமது பிரசாரங்களை மாற்றியமைக்கத் தலைப்பட்டுவிட்டன.

இவ் அறிகுறிகள் தற்போது புலிகள் தரப்பில் காணப்படும் உணர்வலைகளின் எதிரொலியாகவே புலப்படுகின்றன. அண்மையில் பி.பி.சி.க்குப் பேட்டி கொடுத்த கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார், 'இந்த யுத்த நிறுத்தம் இனியும் தேவையா' என்ற தொனியில் கேள்வி எழுப்புமளவுக்குச் சென்றிருந்தார். இந்தக் கேள்வியின் மறுபக்கம் யுத்தத்துக்குச் செல்ல வேண்டுமென்று விதந்துரைப்பதாகவே அமைகிறது.

இது ஒரு புறமிருக்க, மறுபுறம் பாதுகாப்புச் சூழ்நிலை படுமோசமாக மாறி வருகிறது. யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம் எல்லாவற்றையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு மாற்றுத் தரப்பினர் மீதான அரசியல் படுகொலைகள் மிக மோசமாக நிகழ்ந்தேறி வருவதுடன், இப் படுகொலைகள் பற்றிய அதிர்ச்சிகர விழிப்புணர்வை ஏற்படுத்திய சுபத்திரன் படுகொலைக்குப் பின்னரும், இதற்கு எதிரான எந்த உணர்வலைகளையும் சட்டை செய்யாமல் இக் கொலைகள் தொடர்ந்து செல்கின்றன.

சுபத்திரனுக்குப் பின்னர் ஒரு பொலிஸ் அதிகாரி உட்பட மேலும் மூவர் இக் கட்டுரை வரையப்படும் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

இதே வேளை பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் இறங்கத் தலைப்பட்டுள்ளனர்.

கொழும்பில் கொட்டாஞ்சேனை, மொறட்டுவ பகுதிகளில் ஆரம்பித்து வெள்ளவத்தை, தெகிவளைப் பகுதிகளிலும் சோதனை நடவடிக்கைகளில் பொலிஸார் இறங்கியுள்ளனர். பஸ்களையும், ஓட்டோக்களையும் மறித்துப் பயணிகள் இறக்கப்பட்டுச் சோதனையிடப்படுகிறார்கள்.

இத்தகைய சோதனைகள் மேலும் தீவிரமடையலாம். முன்னைய கெடுபிடி நடைமுறைகள் மீளவும் அமுலாகலாம் என்பதற்கும் சாத்தியங்கள் உள்ளன.

தெகிவளை பொலிஸ் நிலையத்தில் பிரவேசித்து விடுதியில் துயின்றுகொண்டிருந்த பொலிஸ் உளவுத்துறை பொறுப்பதிகாரியொருவர் சுட்டுக் கொல்லப்பட்ட அண்மைய சம்பவம், புலிகள் சமாதானத்தில் உண்மையில் நம்பிக்கை வைக்கவில்லையெனக் காட்டுவதாக ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார். அதேவேளை தமிழ்ப் பத்திரிகைகள் சில இச் சம்பவத்தைத் துணிகரச் செயல் என்று செய்தி வெளியிட்டன.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும் அண்மையில் இராணுவத்தை எப்போதும் யுத்தத்துக்குத் தயாராக இருக்கும்படியும், புலிகள் உடன்படிக்கைகளை மீறி திடீரென யுத்தத்தில் இறங்கிய சம்பவங்கள் கடந்த காலங்களிலும் நிகழ்ந்துள்ளனவெனவும் எச்சரித்துள்ளார்.

ஜனாதிபதி புலிகள் யுத்தத்துக்குத் தயாராகி வருகிறார்களென நேரடியாகச் சொல்கிறார். ஆனால் அரசாங்கம் அதை வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும், நம்புகிறது. நம்புவது மட்டுமல்ல, பரபரப்பற்ற வகையில் இதனை எதிர்கொள்வதற்கான தயாரிப்புக்களையும் மேற்கொண்டு வருகிறது.

ரணில் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் புலிகளை யுத்தத்தில் இறங்காமல் தடுப்பதற்கு, அல்லது யுத்தத்தை இயன்றவரை பிற்போடுவதற்குத் தனது அரசியல் எத்தனங்களை முயன்று பார்க்கிறது.

யுத்தம் உடனடியாக ஆரம்பித்தால் ரணிலின் அரசாங்கம் கவிழ்ந்துவிடும் என்ற அச்சம் அவர்களுக்கு உண்டு.

இது ரணிலின் மனக்கணக்கான ஜனாதிபதியின் கதிரையைப் பிடிக்கும் வகையில், ஜனாதிபதித் தேர்தல் வரை- இன்னும் இரண்டு வருட காலம் நிலைமையை இப்படியே பேணிக்கொள்ளும் திட்டத்தை முழ்கடித்துவிடும்.

இதை விட யுத்தத்தைப் பிற்போடுவதற்கான மற்றொரு காரணமும் உள்ளது. யுத்தமேற்பட்டால் ரணிலின் அரசாங்கத்துக்கு உடனடியாக உதவிக்கரம் கிடைக்குமா என்பதுதான் அது.

இன்று அமெரிக்கா ரணில் அரசாங்கத்துக்கு ஆதரவாகப் பேசி வந்தாலும், புலிகளைச் சற்றுக் காட்டமான குரலில் கண்டிக்க விளைந்தாலும், ஒரு யுத்தம் ஏற்படுகின்ற நிலையில் அது நேரடியாக இலங்கைக்கு உதவும் வாய்ப்பு இல்லை. ஒரு சில யுத்த தளபாட உதவிகளை வழங்கலாமேயன்றி நேரடியாக இங்கு தன் படைகளை அனுப்பப்போவதில்லை.

அத்தகைய பெரும் ஈடுபாடு அதற்குக் கிடையாதென்பது ஒருபுறம், மறுபுறம் இலங்கையில் அமெரிக்கா நேரடியாகச் செயற்பட்டு, பாரிய துணைக்கண்டமும் தென்கிழக்காசிய வல்லரசுமான இந்தியாவுடனான நல்லுறவைக் கெடுத்துக்கொள்வது அமெரிக்காவுக்கு அரசியல் இலாபமுடையதல்ல. எனவே யுத்தத்தில் நேரடி உதவி தேவைப்பட்டால் கைகொடுக்கக்கூடிய ஒரே நாடாக உள்ளது இந்தியாவே.

எனினும் தற்போதைய இந்திய அரசியல் நிலையில் இத்தகைய பாரிய முடிவொன்றுக்குச் செல்ல இன்றைய இந்திய அரசாங்கம் விரும்பாது. காரணம், எதிர்வரும் மார்ச் மாதத்தில் இந்தியாவில் பொதுத் தேர்தல் நிகழவுள்ளது.

இவ்வாறான செயலில் கடந்த காலத்தில் காங்கிரஸ் அரசாங்கம் இறங்கியதன் எதிர் விழைவே அடுத்து வந்த தேர்தலில் அதன் தோல்விக்கு வழி சமைத்தது.

இதை நன்கறிந்த தற்போதைய அரசாங்கம், தானும் அத்தகைய ஒரு விஷப் பரீட்சையில் அதுவும் தேர்தல் சமீபித்து வரும் இக் காலத்தில் இறங்கத் துணியுமென எதிர்பார்க்க முடியாது.

அதனால் இப்போது யுத்தம் ஆரம்பித்தால் ரணில் அரசாங்கத்துக்குக் கைகொடுக்க யாருமற்ற நிலையில் அந்தரிக்க நேரலாம்.

எனவே, எதிர்வரும் மார்ச்சில் நிகழவுள்ள இந்தியத் தேர்தலுக்குப் பின்னர் யுத்தத்தை எதிர்கொள்ளக் கூடியவராகவாவது அதனைப் பின்தள்ளிச் செய்வது ரணில் அரசாங்கத்துக்கு அவசியமானதாகவுள்ளது.

தற்போதைய கருத்துக் கணிப்பின்படி இந்தியத் தேர்தலில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியமைக்கக் கூடிய வாய்ப்பே அதிகம் தென்படுகிறது. அவ்வாறாக ஆட்சியமைக்கும் பட்சத்தில் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தி பிரதமராக வரும் சாத்தியம் அதிகமுள்ளது.

காங்கிரஸ் ஆட்சியமைப்பதும், சோனியா பிரதமராவதும் புலிகள் தொடர்பான கடும்போக்கை இந்தியா கடைப்பிடிக்க வழிகோலலாம் என்பதுடன், அந் நிலைமையில் இலங்கை அரசாங்கம் புலிகளிடமிருந்து யுத்தமொன்றை எதிர்கொண்டால் இந்தியா தயக்கமின்றி புலிகளை முறியடிக்க இலங்கை அரசாங்கத்துக்குத் துணைபுரியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



இதனால், ரணிலைப் பொறுத்தவரை முதலில் தான் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளும்வரை 2 வருடங்களுக்கு யுத்தத்தை ஒத்திப்போட முனைவது, அது முடியாவிட்டால் தனக்குப் பலமான துணை கிடைக்கும் வரை, இந்தியப் பொதுத் தேர்தல் வரையாவது யுத்தத்தை ஒத்திப்போடுவது என்ற அடிப்படையிலேயே சிந்திப்பார்.

மேலும், புலிகளின் கடும் பகிஷ்கரிப்புக்கு மத்தியிலும் உலக நாடுகளின் நிதியுதவிகளை ரணில் மிகவும் சாமர்த்தியமாக ஈட்டிக்கொண்டுள்ளார். எனினும், அவை நடைமுறையில் இலங்கைக்குக் கிடைக்க ஆரம்பிக்க குறைந்தது 6 மாதங்கள் முதல் 1 வருடம் வரை செல்லலாம். அதற்கிடையில் யுத்தம் வெடித்து, இவ் உதவிகளை அதற்கான திட்டங்களுக்குப் பயன்படுத்த முடியாது போகலாமென அந் நாடுகள் கருத நேரிட்டால், உதவிகள் தாமதிக்கவோ, குறையவோ வாய்ப்புண்டு. இதைத் தவிர்க்கும் அவசியம் கருதியும் யுத்தத்தைப் பிற்போடுவது ரணிலுக்கு அவசியம்.

ஆயினும் நெருக்கடிகள் மிக வேகமாக வளர்ந்து வருகின்றன. அண்மையில் தாக்கப்பட்ட புலிகளின் கப்பல் தொடர்பான சர்ச்சை ஒரு முறுகல் நிலையை உள்ளூர ஏற்படுத்தியுள்ளது. புலிகளின் கப்பல், சர்வதேசக் கடற்பரப்புக்குள் நின்றதாகவும், இலங்கைக் கடற்படை அதைத் தாக்கி மூழ்கடித்ததுடன் அதிலிருந்த 12 புலி உறுப்பினர்களைக் கைது செய்துள்ளதாகவும், அவர்களை உடன் விடுவிக்க வேண்டும், அல்லது பாரதூரமான பின் விளைவுகளுக்குக் கடற்படையே பொறுப்பேற்க வேண்டுமெனவும் புலிகள் கூறியுள்ளனர்.

ஆயினும் அண்மையில் வெளியிடப்பட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தீர்ப்பு புலிகளின் இக் குற்றச்சாட்டை நிராகரிப்பதாகவும் அரசாங்கத்துக்குச் சாதகமாகவுமே அமைந்துள்ளது.

சர்வதேச கடற்பரப்பிலென்றாலும் புலிகளின் கப்பல் எந்த வித அங்கீகரிக்கப்பட்ட கொடி, சின்னம் ஆகியவற்றைக் கொண்டிராத நிலையில் இலங்கைக் கடற்படைக்கு அதைத் தாக்கியழிக்கும் உரிமை உண்டெனவும், அதே வேளை புலிகளின் உறுப்பினர் 12 பேரைக் கடற்படை கைது செய்தற்கான ஆதாரம் இல்லையெனவும் கண்காணிப்புக் குழு தீர்ப்புச் சொல்லியுள்ளது.

அண்மைக் காலங்களில் கண்காணிப்புக் குழு புலிகளுக்கு எதிராகக் கூறிய முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பாக இதுவே உள்ளது. இத் தீர்ப்பையிட்டுப் புலிகள் கண்காணிப்புக் குழுவினர் மீது விசனம் கொள்ளவும் கூடும். இது எத்தகைய அபாயத்துக்கு வழிவகுக்கலாமென்றால், எதிர்காலத்தில் கண்காணிப்புக் குழுவைச் சட்டை செய்யாது புலிகள் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு செல்ல உந்திவிடக்கூடும்.

இவை மென்மேலும் புரிந்துணர்வினைப் பாழாக்கி, ஏட்டிக்குப் போட்டியான, ஒருவரையொருவர் நம்பாத நிலைமையைத் தோற்றுவித்து பகைமையும் வெறுப்பும் மேலோங்க வழிசமைத்துவிடலாம்.

இத்தகைய பதற்றம் ஒருபுறம் வளர்ந்துகொண்டிருக்க, மறுபுறம் அரசியலில் பெரும் மாற்றங்கள் ஏற்படலாமென்ற சூழ்நிலை தோன்றியுள்ளது.

புதிய அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றிய ஒரு வருட காலத்துள் ஜனாதிபதியின் அதிகாரச் சிறகுகளை வெட்டும் முயற்சி தோல்விகண்ட நிலையில் ஜனாதிபதியின் கரத்தில் ஆட்சியை நிர்ணயிக்கும் கடிவாளம் சேர்ந்துள்ளது.

ஜனாதிபதியைப் பொறுத்தவரை இது அவரது இரண்டாவதும் இறுதியுமான ஜனாதிபதிப் பதவிக் காலமாகையால் மற்றொரு ஜனாதிபதிக்கான தேர்தலில் அவர் போட்டியிட முடியாது.

ஆகையால் ஜனாதிபதி முறையை மாற்றி, தன்னை நிறைவேற்று அதிகாரமுள்ள பிரதமராக ஆக்கிக்கொள்வதானால் அதனை இன்னும் எஞ்சியுள்ள இரு வருடங்களுள் செய்தாக வேண்டும்.

இதே வேளை தனது கட்சியை மீள ஆட்சிபீடம் ஏற்றுவதற்கும் அவர் கட்சித் தலைவியென்ற வகையில் வழிசமைக்க வேண்டும்.

சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து ரணில் அரசாங்கத்தின் மீதிருந்த ஆரம்பகால நம்பிக்கை வெகுவாகத் தளர்ந்துள்ள இன்றைய சூழ்நிலையை அவர் இதற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென அவரது பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் அவர் மீது அழுத்தம் அதிகரித்து வருகிறது.

இதேவேளை மாற்று அரசாங்கமொன்றை அமைக்கவும், தேர்தலை எதிர்கொள்ளவும் தயாரான நிலையில் பொ.ஐ.மு.வுக்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் உடன்படிக்கை ஒன்று தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. மிக விரைவில் கைச்சாத்திடப்படவும் உள்ளது.

தேர்தலொன்றுக்கு உடனடியாகச் செல்லாமல், ஐ.தே.மு.விலிருந்து சிலரைத் தம் பக்கம் சேர்த்து ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு பொ.ஐ.மு. தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது.

இதே வேளை தற்போது பாதுகாப்பு நிலைவரங்களைப் பொறுப்புடன் கையாளவில்லையென்ற குற்றச்சாட்டை முன்னிறுத்தி, அமைச்சர் ஜோன் அமரதுங்க வசமுள்ள அமைச்சையும் பொலிஸ் நிர்வாகத்தையும் ஊடக அமைச்சையும் ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டியுமெனவும் அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது. அண்மையில் நிகழ்ந்த தெகிவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொலை, மாகாண அமைச்சரொருவர் உளவுத்துறை தலைமையகத்துக்கு முன்னால் அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் கொலை, மேலும் கட்டுக்கடங்காது நிகழ்ந்தேறி வரும் அரசியற் படுகொலைகள் என்பன ஜனாதிபதியின் இத்தகைய நடவடிக்கைக்குச் சாதகமான காரணங்களாகக் காட்டப்படலாம்.

இவ்வாறான முன் முயற்சியொன்றை அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதன் மூலம் ஏற்கனவே செய்துதம் உள்ளார்.

இவ்வாறாக ஜனாதிபதி தன் நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகிக்க முனையும்போது ஆட்சியைக் கொண்டு நடத்த முடியாத நிலைமை அரசாங்கத்துக்கு ஏற்படும்.

இந் நிலையில் அரசாங்கத்தைக் கலைத்துவிட்டுப் புதிய தேர்தலொன்றுக்குச் செல்ல ஆளும் கட்சியினர் முனையலாம்.

எனினும் அரசாங்கத்தைக் கலைக்கும் அதிகாரமும், பொதுத் தேர்தலை நடத்த உத்தரவிடும் அதிகாரமும் ஜனாதிபதியிடமே உள்ளது. அவர் இந் நிலையில் தேர்தலுக்குச் செல்லாமலே மாற்று அரசாங்கமொன்றை ஸ்தாபிக்க முனையலாம்.

இதற்கான கால அவகாசத்தை அவர் பாராளுமன்றத்தைப் பின்தள்ளிப் பெற்றுக்கொள்ளலாம்.

எவ்வாறாயினும் அவ்வாறு அமையும் அரசாங்கம் கூடக் குறுகிய காலமே நிலைக்கும் வாய்ப்புண்டு. எனினும் இதில் ஜனாதிபதிக்குள்ள அனுகூலம் யாதென்றால் தனது அமைச்சரவையின் காபந்து அரசாங்கத்தின் கீழேயே தேர்தலுக்குச் செல்லக் கூடியதாக அமையுமென்பதே.

ஆனால் இவற்றுக்கு மத்தியில் உள்ள பாரிய கேள்வி என்னவென்றால் ஆட்சி மாற்றம் யுத்த நிலைமையை எவ்வாறு சமாளிக்கப் போகிறது என்பதுதான்.

அதற்கும் வழிவகை உண்டா எனத் தேடும் முயற்சிகளும் நடக்கிறது. பொ.ஐ.மு.வும் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முனைகிறது.

யாருடைய கயிற்றை யார் விழுங்கப் போகிறார்களோ?

பார்க்கலாம்!

அலசுவது-இராஜதந்திரி

# வடக்கிலும் – தெற்கிலும் வெவ்வேறு கோணங்களில் உணர்வலைகள்!

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான அரசியல் பேச்சுவார்த்தை ஸ்தம்பித்த நிலையில் வடக்கிலும் தெற்கிலும் சமரச நடவடிக்கைகள் குறித்த நாட்டு மக்களின் உணர்வலைகள் போரா? சமாதானமா? என்ற ஏக்கத்துக்குள்ளாகியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான நாட்டுமக்களின் அங்கீகாரத்தைப் பெற்றதாக இருக்கின்றது.

இரு தசாப்த கால யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து விடுபட்டு எதிர்காலத்துச் சந்ததியினராவது அமைதியாகவும், சுபீட்சமாகவும் வாழ வேண்டுமென்பதே நாடளாவிய ரீதியில் மக்களின் பிரார்த்தனையாகும்.

கடந்த ஒரு வருட கால யுத்த நிறுத்தத்தினால் எத்தனையோ ஆயிரம் உயிர்கள் வீணாகப் பலியாவதும், பல கோடி பணம் யுத்த அரக்கனுக்குச் செலவாகுவதும் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இத்தகைய நிலை நீடிப்பதன் மூலம் நாட்டில் அவல வாழ்க்கைக்கு இடமில்லாமல் போகும் என்பதை எந்தவொரு சிறுபிள்ளையும் நன்கறியும்.

ஆனால் கடந்த ஒரு வருட காலத்தின் யுத்தமற்ற சூழலைக் கூட சகிக்க முடியாது மீளவும் மோதல் நிலையைத் தோற்றுவிக்கும் இயல்பையே காணமுடிகிறது.

அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமரசப் பேச்சுவார்த்தை வடக்கு–கிழக்குக்கான இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கை தொடர்பாக ஸ்தம்பித நிலைக்கு வந்துள்ளது.

இந் நிலையில் தடங்கலுற்ற பேச்சுவார்த்தை மீளவும் ஆரம்பமாகுமா? அல்லது மீளவும் ஒரு யுத்தம் தொடங்குமா? என்பதே அனைவரிடத்திலும் எழுந்துள்ள கேள்வியாக இருக்கின்றது.

சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்புடன் பிரதமர் ரணில் அரசு இடைக்கால நிர்வாக சபை சம்பந்தமாக சுமுகத் தீர்வை எட்டி பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிக்கப் பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொண்டு வருகிறது.

அதே சமயம் எதிர்க்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஒரு மூன்றாவது அரசியல் சக்தியாக வளர்ந்துள்ள ஜே.வி.பி. என்ற மக்கள் விடுதலை முன்னணியும் மீளவும் ஒரு கலவரத்தை நோக்கியதாகவே தமது கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றன.



கடந்த காலங்களில் அரசியல் தீர்வு குறித்த சமரச முயற்சிகள் நொண்டிக் காரணங்களுக்காக முறிவடைந்ததையும் நன்கறிய முடியும்.

ஆனால் தற்போதைய தீர்வு முயற்சிகளில் அரச தரப்பும், புலிகளும் வெளிப்படையாகவே மீளவும் ஒரு யுத்தம் ஏற்படும் சூழலை நிராகரித்து வருகின்றபோதிலும், இன்னொரு புறம் சந்தேகங்களும் நிலவவே செய்கின்றன.

இலங்கை இனப் பிரச்சினை ஒரு பூதாகர நிலையை எட்டி இந்த வருடம் ஜூலை மாதத்துடன் இருபது ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

1983ம் ஆண்டு ஜூலை இனக் கலவரம் வெடித்ததையடுத்தே வடக்கு – கிழக்கின் மிதவாத அரசியல் தீவிரவாதப் போக்குடன் ஒரு புதிய பரிமாணத்தைப் பெற்றது.

கடந்த இருபது வருட காலத்தில் தென்னிலங்கையில் பதவிக்கு வந்த அனைத்து அரசியல் கட்சிகளுமே அரசியல் ரீதியாகவோ, அல்லது இராணுவ ரீதியாகவோ வடக்கு – கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண எடுத்த முயற்சிகள் தோல்விகளையே தழுவியிருந்தன.

பயங்கரவாதம் என்ற நிலையில் நிராகரிக்கப்பட்டு வந்த வடக்கு – கிழக்கின் ஆயுதப் போராட்டம், தமிழ் மக்களின் உணர்வுகள், உரிமைகள் என்பவற்றோடு சம்பந்தப்பட்டதொன்றென்பதை இன்றைய தலைமுறைத் தென்னிலங்கை அரசியல்வாதிகள் உட்பட சர்வதேச சமூகமும் தற்போது ஏற்றுக் கொண்டுள்ளதையே அவதானிக்க முடிகிறது.

1983ம் ஆண்டு ஆடிக் கலவரம் வெடித்தபோது சர்வ அதிகாரம் படைத்த ஜனாதிபதியாகவிருந்த ஜே.ஆர்.ஜயவர்த்தன, 'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' என்று சூளுரைத்திருந்தார்.

அப்போது அவர் அப்படிக் கூறியபடி அரசியல் அணுகுமுறைகளை முன்னெடுத்தபோதிலும், இராணுவ நடவடிக்கைகளில் அவரது அரசுக்கிருந்த அதீத நாட்டமும் நன்றாகவே வெளிப்பட்டியிருந்தது.

ஜே.ஆர்.ஜயவர்த்தனவும், அவருக்குப் பின்னால் நாட்டின் தலைமையை ஏற்றவர்களும் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு களைத்துப் போயுள்ளதையே அவதானிக்க முடிகிறது.

இந் நிலையில் இன்றைய தலைவர்கள் இருபது வருடங்களுக்கு முன்னர் ஜே.ஆர்.ஜயவர்த்தனவைப் போல சூளுரைப்பார்களேயானால் அதன் பிரதிபலன்கள் பாரதூரமானவையாகவே இருக்கும்.

தென்னிலங்கை அரசியல் தரப்பும், வடக்கு – கிழக்கின் தமிழ் அரசியல் தரப்பும் அரசியல், இராணுவ நிலைப்பாடுகளில் ஒரு சமபலத் தன்மையைப் பேணும் போக்கே தற்போது காணப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் தற்போதைய சமரச நடவடிக்கைகளைக் கையாளும் முறையை ஏனைய அரசியல் சக்திகள் கடுமையாக விமர்சிக்கலாம்.

ஆனால் இத் தடவை அரசியல் தீர்வு நடவடிக்கைகளில் சகித்துக்கொள்ளல், விட்டுக் கொடுத்தல் போன்றவற்றை முதன்மைப்படுத்தியே பிரதமர் ரணில் தமது சவால்களை எதிர்கொண்டு வருகின்றார்.

இதன் காரணமாகப் புலிகளும் அரசியல் அணுகுமுறைகளை அனுசரித்துப் போக வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்திற்குள்ளாகியுள்ளதையே அவதானிக்க முடிகிறது.

ஒரு வருடத்துக்கு முன்பதாக ஒரு யுத்த பூமியாக இருந்த வன்னியின் மையப் பகுதியான கிளிநொச்சி, தற்சமயம் சர்வதேச அரங்கில் உச்சரிக்கப்படும் ஒரு பெயராக மாறியிருக்கின்றது.

சர்வதேச அரசியல் முக்கியஸ்தர்கள், இராஜதந்திரிகள் ஆகியோர் வன்னியில் புலிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, சமரச முயற்சிகளின் தொய்வு நிலையைத் தவிர்ப்பதில் ஆர்வங்காட்டி வருகின்றனர்.


எனவே ஒரு புதிய பரிமாணத்தை எட்டியுள்ள இனப் பிரச்சினைத் தீர்வு முயற்சிகளை எதிர்காலத்திலும் அரசியல் சார்ந்ததாகத் தொடருவதற்கு வழியமைப்பதா? அல்லது கெடுபிடி நிலைக்கு இடமளித்து யுத்தச் சூழலை மீளவும் ஏற்படுத்துவதா? என்பது பற்றி அனைத்து அரசியல் தரப்பும் சிந்திக்க வேண்டிய நிலையே தற்போது உருவாகியுள்ளது.

சமரச முயற்சிகளை விமர்சித்து தென்னிலங்கையில் பொது ஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி. ஆகியவை நிறையவே கோஷங்களைப் போட்டு வருகின்றன.

சமாதான நடவடிக்கைகளில் நம்பிக்கை கொண்டுள்ள மக்களின் மனதில் பல்வேறு வகையான சந்தேகங்களை ஏற்படுத்துபவையாகவும் எதிர்க் கட்சிகளின் பிரசாரங்கள் காணப்படுகின்றன.

அதே சமயம் வடக்கே இடம் பெற்ற பொங்குதமிழ் நிகழ்வு புலிகளின் கோரிக்கைகளைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்திருந்தது.

இந் நிலையில் எதிர்ப்பலைகள் தணிவதும், அரசியல் தீர்வு முயற்சிகள் சாத்தியமாவதும் எதிர்காலப் பேச்சுக்களின் ஆரம்பம், அதன் காத்திரத் தன்மை என்பவற்றிலேயே பெரிதும் தங்கியுள்ளதெனக் கொள்ளலாம்.



## அதிரடி அய்யாத்துரை

**இன்று** மழை வந்தாலும் வரலாம் என்று வானத்தைப் பார்ப்பதற்குப் பதில், இன்றும் ஒரு கொலை விழுந்தாலும் விழலாம் என்று பேப்பரைப் பாக்கிற அளவுக்கு எங்கயாவது ஒரு 'டப்புச்' சத்தம் கேட்டபடி தான் இருக்கு. யாரிட்டப் போய்க் கேக்கிறது? பொலிஸைக் கேட்டால், புரிந்துணர்வு ஒப்பந்தம் தங்கட சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளைக் கட்டிப்போட்டு வைச்சிருக்கெண்டினம். இங்கால செய்துபோட்டு அங்கால மாறினால் தாங்கள் ஒண்டுஞ் செய்ய ஏலாதெண்டு சட்டமா அதிபரே கைவிரிக்கிறார். ஆனால் அமைச்சர் பீரிஸ், புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கும் இந்தக் கொலைகளுக்கும் 'சம்'மும் இல்லை 'பந்தமும்' இல்லை. இது சட்டம் ஒழுங்குக்குக் கீழே வாற விஷயம் எண்டிறார். சரி. கண்காணிப்புக் குழுவைக் கேப்பமெண்டு கேட்டால், சனநாயகத்திலை குற்றம் நிரூபிக்கப்படும் வரை யாரும் குற்றவாளியில்லையெண்டதால ஒருவருமே கொலை செய்யேல்லையெண்டும் அவரவர் தாங்களே தற்கொலை செய்து கொண்டதாயும் எடுத்துக்கொள்ளச் சொல்லினம். உந்த நியாயப்படி இனிமேல், கள்ளனைத் தன்னும், நீதிபதி தீர்ப்புச் சொன்ன பிறகுதான் பொலிஸ் பிடிக்கும் போல ம்... எங்க போய் முட்டுறதோ?

**யாழ்** கச்சேரியிலயிருந்து பழைய பைல்கட்டுகளெல்லாம் வாகனத்தில ஏத்துப்பட்டு புதிய அரச அதிபதியார் வீட்ட பத்திரமாக் கொண்டுபோய்ச் சேர்படுகுதாம். கணக்குகள் எதையும் சரிக்கட்டவே இல்ல. ஆட்சி மாறி எக்கணம் பழைய அதிபதி திரும்பக் கதிரைக்கு வந்திடாமலிருக்க அவருக்கெதிரா மோசடிப் பட்டியல் தயார் பண்ணவோ எண்டு தெரியாமல் கிடக்காம். என்னத்தைச் செய்தென்ன, இப்பத்தைய விளையாட்டெல்லாம் விலாவாரியா வெளியால வரத்தான் போகுது. எவருக்குமேல பழிபோட்டும் உவர் தப்பேலாதெண்டினம் தகவலறிஞ்சவை. என்னவோ ஆடும் வரை ஆடட்டும். ஓய்ஞ்ச பிறகு பார்ப்பம்.

**கூட்டணிக்காறருக்கு** இந்தக் கிழமை கடும் டென்ஷனான கிழமை பாருங்கோ. சோதினைக்கு முதல் கிழமை போல நித்திரையில்லாத நாட்களாக் கழியுதாம். ஜூலியஸ் சீசரை விழுத்தின மாதிரி சங்கரியாரைத் தலைமையிலயிருந்து விழுத்தப் பெருத்த பிரயத்தனம் நடக்குதாம். வாற ஆறாந் திகதி பொதுக்குழுக் கூட்டத்தில பெரும் குழப்பந்தான் நடக்கும் போல கிடக்கு. புருட்டஸ் மாரைச் சேர்க்கிறதுக்கு சேனாதிபதிகள் ஓடித் திரியினம். விஷயம் தெரிஞ்ச சங்கரியார் மார்க் அன்ரனியின்ர பேச்சை சீசரே பேசுமாப் போல பேச ஆரம்பிச்சிட்டாராம். ஒரு வித்தியாசம்! சீசருக்கு முதுகில குத்தின பிறகுதான் துரோகிகளைத் தெரிஞ்சுது. தனக்கு அவைய முன்னமே தெரிஞ்சிட்டுதெண்டிறார் சங்கரியார்.

வெற்றி யார் பக்கமோ?

**ஈராக்கில** அழிவாயுதங்கள் கிடக்கிறதாகக் கதைகட்டி விட்டிட்டு அதுக்கு மேல படையெடுக்க ஆதரவு திரட்டினதா பிரிட்டன் ஆட்சியாளர்களுக்கு மேல இப்ப குற்றச்சாட்டுக்கள் கிளம்பியிருக்கு. பொய்களை இட்டுக் கட்டி உளவறிக்கை தயாரிக்க உத்தரவு குடுத்ததாகக் கதைகள் வெளிவருகுது. ஒரு நாட்டைத் தன்னிச்சையாய்ப் போய் அடிச்சு முடிச்சாச்சு. இனி நியாயம் விசாரிச்சு என்ன பிரயோசனம்? ஈராக்கைப் பிடிச்சு இத்தனை நாளாச்சு, நீங்கள் ஒப்பாரி வைச்ச அழிவாயுதங்கள் எங்கயெண்டு யாராயினும் உவையக் கேட்டிச்சினமோ? இப்ப சதாமைப் பிடிக்கிறதுக்குத் தேடினமாம். ஏன், சதாமின்ர இடுப்பிலயே அழிவாயுதம் கட்டி வைச்சிருக்கு? எல்லாம், வல்லவன் செய்தால் வேதம்?

**போதைப்பொருள்** ஒழிப்பு வாரம் போன கிழமை நடந்துச்சுது. நல்ல விஷயம். ஒரே வாரத்தைப் போதைப்பொருளை ஒழிக்கிறதுக்காக ஒதுக்கிபோட்டு, மிச்ச வாரமெல்லாம், ஜமாயுங்கடா என்டு விட்டால் போதைப்பொருள் ஆசாமிகளுக்கு வலு குஷியாகத்தான் இருக்கும். அது போல போதைப் பொருள் எண்டால் எங்கட கஞ்சா, அபின் மட்டுமில்லை கண்டியளோ. அது தனி மனிசருக்குத்தான் போதையூட்டும் ஆனா இத விட மோசமான போதைப்பொருள் எங்கட பேப்பர்கள் தானுங்கோ. அது முழுச் சமுதாயத்துக்கே இனத்தின்ர பெயரில போதையூட்டி, யுத்தத்துக்குத் தள்ளுறதை யாராம் ஒழிக்கிறது?

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் குளியலறை உபகரணங்களை

Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்




Naveen Ceramic No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

எமது பதிய காட்சியறை

184-A, Havelock Road, Colombo-05.

Tel :01-507334

500க்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.


# வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள இலங்கை நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்புவது எப்போது?

நீண்ட காலமாக வடக்கு கிழக்கு மாகாணத்தில், இலங்கை நிர்வாக சேவையில் அதிக வெற்றிடங்கள் இருந்துவருவது யாவரும் அறிந்ததே. இவ் வெற்றிடங்களை வடக்கு கிழக்கு மாகாண மட்டத்தில் பரீட்சை நடாத்தப்பட்டு நிரப்பப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்கு, முன்னாள் வடக்கு புனர்வாழ்வு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள், மந்திரி சபையின் அங்கீகாரம் பெற்றுத் தந்தது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆனால் பரீட்சை நடாத்தப்பட்டு நேர்முகத் தேர்வும் நடாத்தப்பட்டு, திறைசேரி உட்பட சகல அங்கீகாரமும் பெறப்பட்ட பின்னரும் வெற்றிடங்கள் நிரப்பப்படாததற்குக் காரணம் என்ன? வடக்கு கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளுக்கே முக்கியத்துவம் கொடுப்பதாகக் கூறும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், வடக்கு கிழக்கு அபிவிருத்திப் பணிக்கென வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகைப் பணத்தைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்ட பிறகும், ஆளணிக் குறைபாட்டை நிவர்த்தி செய்யாமல் இழுத்தடிப்புச் செய்து வருகிறது.

அவசியமில்லாத அறிக்கைகள் விடுத்துக்கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்த அடிப்படைப் பிரச்சினையை ஏன் பிரதமரிடம் இடித்துரைக்க முனையவில்லை. வடக்கு கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் தற்போதைய தலையாய கடமையாக இப் பிரச்சினையை எடுத்துக்கொள்ள வேண்டும்.

நீண்ட காலமாக வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் கைவிடப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபை அலுவலகங்களிலும், மாவட்டச் செயலகங்களிலும் உள்ள உயர் அதிகாரிகளில் பெரும்பான்மையினர் ஓய்வு பெறும் காலத்தின் பின்பு சேவை நீடிப்புப் பெற்றும், ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஒட்டிக் கொண்டும் இருக்கும் நிலை ஏற்பட்டதால் திருகோணமலையிலுள்ள மாகாணசபை அலுவலகங்களும், மாவட்டச் செயலகங்களும் முதியோர் விடுதி போல் காணப்படுகிறது. அடுத்து ஒரு நிர்வாக சேவை அதிகாரி பல பொறுப்புக்களைச் சுமந்துகொண்டு மக்களுக்குப் பயனில்லாதவர்களாக இருந்து வருகிறார்கள். உதாரணமாக மன்னார் மாவட்டத்தில் திட்டப் பணிப்பாளராக இருக்கும் திரு.பத்திநாதன் அவர்கள் நானாட்டான் பிரதேச செயலாளராகவும், நானாட்டான் பிரதேச சபை விசேட ஆணையாளராகவுமிருப்பதால் சேவையைப் பெற வேண்டியுள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள்.

இவ்விதமான இழி நிலையைப் போக்க உடனடியாக வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள இலங்கை நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்பும்படி அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டியது வடக்கு கிழக்கு மக்களின் வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றம் சென்ற ஒவ்வொரு உறுப்பினர்களினதும் கடமையாகும்.

எஸ்.பி.லெம்பட்.


## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோசமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S.Mani 142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை,கொழும்பு-06.

சந்தைக்கு எதிர்ப்பக்கமாக Tel: 074-519754



## லண்டன், பாரிஸ்
### இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்

மாறாத நோய்களை எல்லாம் ஹோமியோபதி மருத்துவத்தின் மூலம் தீர்த்து வைக்கும் இந்திய ஹோமியோபதி சிகிச்சை நிபுணர்

டாக்டர் ஆர். தியாகராஜன் DHMS, AMRSH (LON.)

28-06-2003 முதல் லண்டன், பாரிஸ் நகரங்களுக்கு விஜயம் செய்து நீண்டகால நோயினால் பாதிக்கப்பட்டவர்களை நேரில் பார்வையிட்டு சிகிச்சை அளிக்கவுள்ளார்.

மாறி மாறி வரும் ஆஸ்துமா (Asthuma) சர்க்கரை வியாதி என்ற டையபற்றிக்ஸ் (Diabetes) எக்சிமா (Eczema) மலட்டுத்தன்மை - பேரின்மை (Sterility) ஆண்மைக் குறைபாடுகள் (Impotency) போன்ற வியாதிகளுக்கு சிறந்த முறையில் நிவாரணம் அளிக்கப்படும். ஹோமியோபதி மருத்துவம் மனிதனை முழுமையாகக் கருத்திற் கொண்டும் மனம், மற்றும் உடலில் உண்டாகும் மாற்றங்களை உற்று நோக்கி ஒரு முழுமையான சிகிச்சையை பாதுகாப்பான, பக்க விளைவுகளற்ற (Side effects) முறையில் அனைத்து வியாதிகளுக்கும் அளிக்க வல்லது.

முன்கூட்டி பதிவுக்கு :
லண்டன் தொலைபேசி: 07984803488 - 07833341693
பாரிஸ் தொலைபேசி: 0611401882
E-mail : homoeocare@rediffmail.com
தொடர்பு : 0091-9843051098 (இந்தியா) 0094-777602513 (இலங்கை)
ஜூன் மாதம் : இலங்கை விஜயம் : 23-06-2003 முதல்



## திருக்கேதீஸ்வரப் பெருமான் திருக்கோயில் கும்பாபிஷேகப் பெருவிழா


இலங்கையில் மன்னார் மாவட்டத்தில் எழுந்தருளியிருக்கும் மிகப் புராதனமானதும் கேதீஸ்வர மூர்த்தியால் பூஜிக்கப்பட்டதும் பாடல் பெற்றதுமான கௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சரப் பெருமானுடைய திருக்கோவில் திருக்குடமுழுக்குப் பெருஞ்சாந்திப் பெருவிழா 06.07.2003ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறவிருக்கிறது.

நாட்டில் நிலவிய அமைதியின்மை காரணமாகக் கடந்த 12 ஆண்டுகள் இத் திருத்தலத்தில் பூசைகள் எதுவும் நடைபெறவில்லை. மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து தினசரி பூசைகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இருபத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர் 1977ம் ஆண்டில்தான் இவ்வாலயத்தில் திருக்குடமுழுக்கு வைபவம் இடம்பெற்றது. இவ்வாலயத்தில் தினசரி மூன்று வேளைப் பூசையுடன் ஏனைய சைவப் பெருவிழாக்களும் வருடாவருடம் இடம்பெறும். மஹா சிவராத்திரி உற்சவம் மிக விமரிசையாக நடைபெறும் விழாவாகும். இத் திருவிழாவில் கலந்துகொள்ள நாட்டின் பல பாகங்களிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் கூடப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து சேர்வார்கள்.

பல மாதங்களாக ஆலயத் திருப்பணி நடைபெற்றுப் பூர்த்தியடைந்த நிலையில் திருக்குடமுழுக்குப் பெருஞ் சாந்திவிழா நடைபெறவிருக்கிறது. பெருஞ்சாந்திப் பெருவிழாவினை ஒட்டிப் பல்லாயிரக்கணக்கில் இங்கு குழுமவிருக்கும் பக்தர்களின் வசதிக்காக ஆலயத் திருப்பணிச் சபையும் மன்னார் மாவட்ட அரச அலுவலக அதிகாரிகளும் ஊழியர்களும் பலவிதமான வசதிகளையும் செய்து கொடுக்க முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருட கால தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணிய வாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்**
"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**
"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**
"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்.**
"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், 39 வயதில் அதிசயத் திருமணம்**
"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல்; "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**
"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்தால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டேம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி**
"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்த என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**
"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**
"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால்தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**
"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**
"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**
"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், அதிசய அக்னி குண்டல பூஜை**
"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

**கொழும்பு அன்பரின் மடல், அச்சொட்டான கைரேகை பலன்**
"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**
"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?
வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?
இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.

உலக மாந்திரீக சக்கரவர்த்தி
பேராசிரியர் டாக்டர். பி.கே.சாமி (J.D.G.AN) J.P.

PROT. DR. P.K SAMY (J.D.G.AN) J.P.
SRI. DURGADEVI. MANTHARIKA UTCHADA PEEDAM,
162. KOTAHENA STREET. COLOMBO-13.
T.P. 342464, 342463, 431137.
FAX: 0094-1-344831.
E.MAIL: drpk samy . @ sttnet.lk.

HOT LINE: 344832, 470615



## தெய்வீக மருத்துவம்



National Theiveega Sakthy Foundation
International Interregious Traditional & Medical & Divine Service
சர்வதேச சமூக மாந்திரீக மருத்துவ தெய்வீக சேவை
Government Approved Charity Regd No: - HA/4/BT/219

டாக்டர் பாலுசோதிடர் S.A.M.P. J.P. (SL)

கிரக தோஷம் காலப்பகையால் பிரிந்த, காதலர்கள் கணவன் மனைவி ஒன்று சேர, வெறுக்த உறவினர்கள், வேண்டியவர்கள் அன்பாக இருக்க, காதல் திருமணம் எல்லோருடைய சம்மதத்துடன் நிறைவேற மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனநோய், தாழ்வு மனப்பான்மை, கல்வி, தொழில், விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, குடும்ப வாழ்க்கையில் சந்தோஷமின்மை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சினைகள், தீயபழக்கம், மனிதத் தீமை, மருந்திடு போன்ற தீமைகளில் இருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ பிரச்சினைகளுக்குரிய காரணத்தை காண்டம் இறைச்சக்தியால் கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மஹா மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தி அளிக்கப்படுகிறது

நேரில் வரமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சினையை எழுதினால் அல்லது தொலைபேசி பக்ஸ் மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். (இரகசியம் பாதுகாக்கப்படும்)

Theiveegam SriLanka Head Office Batticaloa.
Tele / Fax:065-24825, 078 610098
வெளிநாட்டவர்களுக்கு, Tele / Fax: - 0094 78610098

மட்டக்களப்பிலும் சந்திக்கலாம்

"வாழ்விருளை நீக்கிஒளியையேற்றுவோம்"
" DISPEL DARKNESS LIFE AND LET LIGHT SHINE "



விளம்பரப் பகுதி

உங்கள் வியாபாரத்தின் விருத்திக்கு முரசில் விளம்பரம் செய்யுங்கள்

விளம்பரப் பகுதி


## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3000 | ரூ.1500 | ரூ.750 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3650 | ரூ.1800 | ரூ.900 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2600 | ரூ.1300 | ரூ.650 |
| உள்ளூர் | ரூ. 1000 | ரூ.500 | ரூ.300 |

தினமுரசு வாரமலரை சந்தா செலுத்தித் தபாலில் பெற விரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளைகளை முகாமையாளர், தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.

ஈ-மெயில்: (E-mail):- murasu@sltnet.lk

# இன்னொருவர் பார்வையில்

**இலங்கை அரசியல் தொடர்பாக எழுதிவரும் பிரபல பத்திரிகையாளர்களின் கண்ணோட்டங்களை முரசு வாசகர்களுக்குத் தரும் முயற்சியாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பகுதியிது. இவ்வாரம் சண்டே லீடர் பத்திரிகையில் அரசியல் ஆய்வாளராக கட்டுரை வரையும் கனடா வாழ் பத்திரிகையாளர் டி.பி.எஸ்.ஜெயராஜின் கடந்த வாரக் கட்டுரையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு பகுதியின் தமிழாக்கம் இடம்பெறுகிறது.**

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் புலிகளின் அறுவடை

அரசியல் படுகொலைகள், கொலை முயற்சிகள், ஆட்கடத்தல்கள் என்பன புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் ஒரு சீரான முறையில் புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவர்களில் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். இத்தகைய சம்பவங்களில் மிகப் பல வடக்கு-கிழக்கில் இடம் பெற்றுள்ளன. கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் கூடச் சில சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. போர் நிறுத்தமும், புரிந்துணர்வு ஒப்பந்தமும் அமுலில் இருப்பதாகச் சொல்லப்படும் சூழ்நிலையிலேயே இக் கொடூரச் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன என்பதுதான் மிகுந்த வேதனையைத் தருவதாகும். புலிகளுக்கும் படையினருக்கும் இடையே மோதல் சம்பவங்கள் இல்லை என்பதால் நாடு நிம்மதிப் பெருமூச்சை இழுத்து விட்டுக் கொண்டிருக்கிறது.

ஆனால் மாற்றுத் தமிழ்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அல்லது அக் கட்சிகளின் ஆதரவாளர்கள் மீதான புலிகளின் தாக்குதல்கள் தொடர்கிறது. திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஈ.பி.ஆர்.எல்.எப். பின் வரதர் அணி போன்றன புலிகளின் இத் தாக்குதல்களால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இக் கட்சிகளின் பிரதேச மட்டத் தலைவர்கள், உறுப்பினர்கள் மட்டுமன்றி ஆதரவாளர்களும், கட்சி நடவடிக்கைகளிலிருந்து விலகியிருக்கும் முன்னாள் உறுப்பினர்களும் கூடப் பெரும் பாதிப்புக்களைக் கண்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக ரெலோவின் வரதன் குழுவைச் சேர்ந்தவர்களும், புளொட் அமைப்பினர்களும் பாதிப்புக்களைச் சந்தித்து உள்ளனர். இது தவிர அரசியல் சார்பற்ற பொதுமக்களும், சிறு குழந்தையும் கூடக் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

கடந்த வருடம் பெப்ரவரி 22 முதல் இவ் வருடம் மே 22ம் திகதி வரையிலான பதினைந்து மாத காலப் பகுதிக்குள் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிராகப் புலிகளால் சமார் 251 வன்முறைச் சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஊடகத் தகவல்கள் மூலம் மதிப்பிட முடிகிறது. வாள் வெட்டு, கைக்குண்டு வீச்சுத் தாக்குதல்கள், படுகாயம் ஏற்படுத்துதல், ஆட்கடத்தல், கொலை முயற்சிகள், கொலைகள் ஆகிய சம்பவங்களாக இவை இருக்கின்றன. எனினும் இந்தப் பட்டியலுக்குள் உள்ளடக்கப்படாத பல சம்பவங்களும் கூட இடம் பெற்றிருக்கலாம். மே 2ம் திகதி முதல் புலிகளால் படுகொலை செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதும் குறிப்பிடத் தக்கது. கடத்தப்பட்டவர்களில் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என முடிவு செய்தால் 100 முதல் 110 பேர் வரை புலிகளால் கொலையுண்டுள்ளனர். நிச்சயமான கொலைச் சம்பவங்கள் நாற்பதும், கடத்திச் செல்லப்பட்டவர்களாக இருபது பேரும் இனங்காணப்பட்டு உள்ளது. ஈ.பி.டி.பி. மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். என்பன போன்றவையே இத்தகைய பாதிப்புக்களைச் சந்தித்துள்ளன. படையணிகளை இலக்கு வைத்துத் தாக்குதல் செய்யாமல், புலிகள் தமது அரசியல் எதிரிகளையே இச் சமாதான காலத்தில் குறிவைத்துக் கொல்கின்றனர். இதனால் அரச உயர்பீடத்தினர் மட்டுமன்றிப் படைத்துறைகளின் சிரேஷ்ட தலைவர்களும் வாய் மூடி மௌனிகளாகி நிற்கின்றனர். உத்தியோகப் பற்றற்ற முறையில் மாற்றுத் தமிழ்க் கட்சிகள் மீது தாக்குதல் நடத்த அங்கீகாரம் வழங்கப்பட்ட நிலைமை போல இது காணப்படுகிறது. ஆனால் இது நிச்சயமாக ஒரு நேர்மையான சண்டையல்ல. ஏனெனில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் காட்டித் தமிழ் அரசியல் கட்சிகளை நிராயுதபாணிகளாக்கிய அரசு, அவர்களைப் புலிகளின் துப்பாக்கிக்கு முன் இலக்குகளாக நிறுத்தியுள்ளது.

மாற்றுத் தமிழ் அரசியல் கட்சிகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் செயற்பட அனுமதிக்கப்படவில்லை. இவர்கள் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மட்டுமே செயற்பட வேண்டியுள்ளது. ஆனால் புலிகள் இப் பிரதேசங்களுக்குள் ஊடுருவ முடிந்திருந்தது. எனினும் 2002 பெப்ரவரி 23 முதல் அமுலுக்கு வந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்த நிலைமையை மாற்றிவிட்டது. அரசியல் வேலைகளுக்காக என்ற போர்வையில் புலிகள் பெருமளவில் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் நுழைந்தனர். இவர்கள் வெளிப்படையாக ஆயுதங்கள் எதனையும் வைத்திருக்கவில்லைத்தான். ஆனால் புலிகள் பெருமளவு ஆயுதங்களை மறைவாகக் கொண்டு வந்து சேர்த்துள்ளனர் என்பதைத் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள்.

பெருமளவிலான புலிகளின் நடமாட்டம் ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தியுள்ளது. இதற்குப் புரிந்துணர்வு ஒப்பந்தம் இவர்களை நிராயுதபாணிகளாக்கியுள்ளது ஒரு காரணம். இந்த ஒப்பந்தத்தில் கூட இவ் அரசியல் கட்சிகள் பற்றிக் குறிப்பிடும்போது துணை இராணுவ அமைப்புகள் என்னும் சொற்பதமே காணப்படுகிறது. நிராயுதபாணிகளாக்கப்பட்டதும், இக் கட்சிகள் தமது அலுவலகங்களை மூடிவிட்டுச் சொந்த



கடந்த மாதம் 6ம் திகதி மட்டக்களப்பு ஆரயம்பதியில் வைத்து புலிகளின் கிரனைட் வீச்சுக்கு இலக்கான ஈ.பி.டி.பி. உறுப்பினர் வேலுசாமி சாமுவேல் (வினோத்–வயது 30) அவரது சிவஞானம் நவீனா என்ற 1 வயதுக் குழந்தையும், பரிதாபமாய் இறந்துகிடக்கிறார்கள்.

மண்ணிலிருந்து வெளியேறிப் போய்விடுவார்கள் என்றுதான் பலராலும் எதிர்பார்க்கப்பட்டது. எனினும் புத்தி சாதுரியமான வகையில் இக் கட்சிகள் தம்மை நிலைநிறுத்திக் கொண்டன. இதே நிலைமையைச் சமாளித்துக் கொள்ளப் புலிகள் பெரும் சங்கடப்படுகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலுக்கு வருவதற்குப் பல மாதங்களுக்கு முன்பாகவே புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் லண்டனில் ஒரு கூட்டத்தில் பேசும்போது, ஈ.பி.டி.பி.யையும், டக்ளஸ் தேவானந்தா அவர்களையும் மண்ணிலிருந்து அப்புறப்படுத்துவது பற்றிக் குறிப்பிட்டிருந்தது நினைவுகூரத் தக்கது. எனினும் புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலில் இருப்பதன் காரணமாக ஈ.பி.டி.பி.க்கு எதிராகக் கண்மூடித்தனமான முறையில் வன்முறைகளைப் பிரயோகிப்பது புலிகளுக்கு சாத்தியமில்லாமல் பண்ணியுள்ளது. இதே ஒப்பந்தத்தின் 2.1 சரத்து பின்வருமாறு விபரிக்கிறது. சர்வதேச சட்டப் பிரமாணங்களின் கீழ் பொது மக்களுக்கு எதிரான பகைமையைத் தூண்டும் செயற்பாடுகள் மற்றும் சித்திரவதைகள், மிரட்டல், கடத்தல், கப்பம் பெறுதல், துன்புறுத்தல்கள் அனைத்தும் தவிர்க்கப்பட வேண்டும்.

இவ் வகையில் தமிழ் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் பொது மக்கள் என்ற வகையிலாவது பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும். தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்களின் பாதுகாப்புத் தொடர்பாக ஆரம்பத்தில் நோர்வே நாட்டினருக்குச் சிறிது அக்கறை இருந்தது. ஆனால் புலிகள் இதனைக் கடுமையாக எதிர்த்தனர். புலிகளின் பார்வையில் மாற்றுத் தமிழ்க்கட்சிகள் சந்தேகத்திற்குரிய எதிரிகள். இவர்களைப் புலிகள் துரோகிகளென முத்திரை குத்தினர். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எப்., (வரதர் அணி), மற்றும் புளொட் போன்ற கட்சிகள் விலக்கி வைக்கப்படுவதில் தீவிர கவனம் செலுத்தப்பட்டதையும் கவனிக்க வேண்டும்.

புலிகள் எதை விரும்புகின்றனர்? இக் கேள்விக்கான பதில் சுலபமானது. வடக்கு-கிழக்கு மாகாணத்தில் எந்தவொரு கட்சியும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்பதுதான் அது. இதற்கு மாறாக அங்கிருக்க விரும்பினால் மரண அச்சுறுத்தல்களை எதிர்நோக்க வேண்டும். இதற்காக அவர்கள் பல்வேறு செயற்பாடுகளை முடுக்கிவிடுகின்றனர்.

அரசியல் கருத்து வேறுபாடு கொண்டவர்களுக்கு எதிராகச் சில சமயங்களில் சமூக விரோத சக்திகள் ஏவிவிடப்படுகின்றன. சமூகத்தின் சில பிரிவு மக்கள் புலிகளின் அலுவலகங்களுக்கு முன்பாகக் கூடி மாற்று அரசியல் கட்சிகளை வெளியேற்றக் கோருவது போன்ற தோற்றப்பாடு காண்பிக்கப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகளுக்குப் பெருமளவு மக்கள் ஒத்துழைப்பு வழங்குவதில்லை. இதனால் புலிகள் வன்முறையை ஏவிவிடுகின்றனர். இந்த வன்முறையின் அளவு படிப்படியாகவும், தீவிரமாகவும் அதிகரித்து வருகிறது. இவை பெரும்பாலும் இரவு நேரங்களில் இனங் காட்டாதவர்களின் செயலாகவே இருக்கிறது.

எனினும் ஈ.பி.டி.பி.மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சி அலுவலகங்கள் மீதான தாக்குதல்கள், அவற்றின் உறுப்பினர்கள் தாக்கப்படுவது, கொல்லப்படுவது போன்ற சம்பவங்கள் வழமைப் பிரகாரம் தொடர்கிறது. அதிலும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பாங்கொக் பேச்சுவார்த்தைகளின் இறுதியில் புலிகள், மாற்றுத் தமிழ் அரசியல் கட்சிகளின் ஜனநாயக பூர்வமான செயற்பாடுகளுக்கு இடையூறு செய்ய மாட்டார்களென அறிவித்த பின்னரே இத்தகைய தாக்குதல்கள் வேகம் பெற்றன.

ஈ.பி.டி.பி. யும், ஈ.பி.ஆர்.எல்.எப். பும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் பல தடவை முறைப்பாடுகள் செய்தன. அரச உயர் மட்டத் தலைவர்களிடம் புகார்களைத் தெரிவித்தன. பாதுகாப்பு ஏற்பாடுகளில் கவனம் தேவையென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பகிரங்கமாகவே அறிக்கை வெளியிட்டார். பல்வேறு நாடுகளின் தூதுவர்களுக்கும், இராஜதந்திரிகளுக்கும் நிலைமையின் பாரதூரத் தன்மைகள் எடுத்து விளக்கப்பட்டன. புலிகள் மீது அழுத்தம் கொடுக்கப்பட வேண்டுமென்பதே இக் கட்சிகளின் வேண்டுகோளாகும். ஆனால் எதுவித மாற்றமும் தென்படுவதாக இல்லை.

இக் கொலைகள் தொடர்பாக நோர்வே தரப்பினர் புலிகளை அணுகி வினா எழுப்பினால், தமக்கு எதுவித தொடர்பும் இல்லையென தமிழ்ச் செல்வன் கைகளை அகல விரித்துச் சிரிக்கிறார். அத்துடன் இக் கொலைகள் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில்தானே நடைபெறுகிறது, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இல்லை எனப் பதில் கேள்வியும் தொடுக்கிறார். அதாவது சட்டம், ஒழுங்கைப் பேணுவதில் அரச தரப்பின் பலவீனத்தைக் காட்டுகிறது என்கிறார். அரச தரப்புப் பேச்சாளரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் பிரச்சினையோடு நேரடித் தொடர்பற்ற வகையில் பல்வேறு விளக்கங்களை வழங்க முனைகிறார். புலிகளின் மறுப்புக்கு மத்தியிலும் இச் சம்பவங்களோடு புலிகளுக்கு நேரடித் தொடர்பு இருப்பதை வெளிக்காட்டும் மூன்று சம்பவங்கள் அம்பலமாகியுள்ளன.

ஆரையம்பதி மத்திய சந்தைப் பகுதியில் ஏப்ரல் 12ம் திகதியன்று வரதன் என்னும் சின்னத்தம்பி ரஞ்சன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தின் சூத்திரதாரியாகப் புலி உறுப்பினரான மயில்வாகனம் சிவகுமார் இனங் காணப்பட்டார். பட்டப் பகலில் இடம் பெற்ற இச் சம்பவத்திற்கு ஒரு பொலிஸ் அதிகாரி கண்கண்ட சாட்சியமாகவுள்ளார்.

இந்த மயில்வாகனம் சிவகுமார் பல படுகொலைகளுக்குப் பொறுப்பானவர். எனினும் மட்டக்களப்பு நகரில் அவர் சுதந்திரமாக நடமாடித் திரிவதைப் பொதுமக்கள் கண்டுள்ளனர்.

ஈ.பி.ஆர்.எல்.எப்.பைச் சேர்ந்த பூபாலபிள்ளை அழகுதுரை கடத்தப்பட்ட சம்பவம் மற்றுமொரு உதாரணம். இவர் கடந்த டிசம்பர் 16ந் திகதியன்று புலி உறுப்பினர்களான இராமையா இராசகுட்டி மற்றும் மயில்வாகனம் பரமநாதன் ஆகியோரால் கடத்தப்பட்டிருந்தார். போரதீவுப் பற்று பிரதேச சபையின் உப தலைவரான இவரது சடலம் சித்திரவதைக்குள்ளான தடயங்களுடன் பின்னர் கண்டெடுக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளை நடத்திய மாவட்ட நீதவான் இக் கொலைக்குப் புலிகளே பொறுப்பு எனத் தீர்ப்பு வழங்கியதோடு புலிகளின் உறுப்பினர் இருவரையும் நீதிமன்றில் ஆஜராக்கும்படி பொலிஸாருக்குப் பணித்தார். ஆனால் இது வரையில் இவ்விருவரும் நீதிமன்றில் ஆஜராக்கப்படவில்லை.

மே 19ம் திகதியன்று மட்டக்களப்பின் புதூர் கிராமத்தில் வைத்து கதிர்காமத்தம்பி நவசூரியம் என்பவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் மற்றுமொரு எடுத்துக்காட்டு. இச் சம்பவம் தொடர்பாக சத்தியராஜ் என்பவர் கைதானார். ஆனால் இவரை விடுவிக்கப் புலிகள் பெரும் அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றனர். இந்த சத்தியராஜின் விடுதலைக்காக இரு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் புலிகளால் பணயக் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

இந்தக் கொலைச் சம்பவங்கள் தொடர்பாகப் புலிகள் மறுப்பறிக்கைகளை வெளியிடுகின்றனர். எனினும் உயிரிழந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் சொற்களையோ, கொலைகளைக் கண்டிக்கும் வார்த்தைகளையோ புலிகளின் அறிக்கைகளில் காண முடியவில்லை. இந்த அரசியல் படுகொலைகள் தொடர்பாக அரசியல்வாதிகளால் கடைப்பிடிக்கப்படும் மௌனம் மிக மோசமானது. இவை இதே அரசியல் படுகொலைகளின் சூத்திரதாரிகள் புலிகளே என்பதற்கு மறைமுகமான ஒரு ஒப்புதல் வாக்குமூலமாகும்.

புலிகளால் கொல்லப்படும் மாற்றுத் தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் முன்னாள் போராளிகள் என்பது ஒரு புறமிருக்க, பலர் தற்போது அரசியல் பொது வாழ்விலிருந்து விடுபட்டுச் சாதாரண குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டிருப்பவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. ஆலையடிவேம்பு பிரதேச சபையின் தலைவரான மாரிமுத்து இராசலிங்கம் (ஜெகதீஸ்), கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் ஜெயராசா போன்றோர் இதற்கு விதிவிலக்கு. இந்தச் சம்பவங்களின்போது ஒன்றரை வயதுக் குழந்தையொன்று கூட உயிரிழந்துள்ளது. ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரைக் குறிவைத்து வீசப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலின்போது இக் குழந்தை கொல்லப்பட்டது. அண்மைக் காலத்தில் புலிகளால் கொல்லப்பட்ட பலர் அரசியல் கட்சிகளிலிருந்து நீண்ட காலத்துக்கு முன்பே விலகியவர்களாகவும் உள்ளனர். அப்படியாயின் இயல்பு வாழ்வுக்குத் திரும்பும்படி புலிகள் அழைப்பு விடுவதாகக் கூறப்படுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

**டி.பி.எஸ். ஜெயராஜ்**
நன்றி: 'சண்டே லீடர்'





தருவது - ஆச்சர்சா

## நமது மூதாதையர்

நடைபெற்ற ஒரு ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித மூதாதையர்களின் தோற்றமே இது. ஆரம்பத்தில் மனிதர்கள் இப்படித்தான் தோற்றமளித்தனராம். மனித உருவத்தின் தோற்றம் நாளுக்கு நாள் மாறியே வருகிறது. நமது மூதாதையர்கள் இப்படித்தான் தோற்றமளித்தனர் எனும்போது, அதற்கான ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்படும்போது மனிதன் சற்று ஆடித்தான் போகின்றானாம்.

இந்த அரிய ஆதாரமான கண்டுபிடிப்பு ஐரோப்பாவில் நடந்தபோது ஐரோப்பிய உலகம் தமது மூதாதையர் பற்றிய அதீத மயக்கத்தில் இருந்தது. 1953 வரை இம் மனித உருவம் தொடர்பான ஆராய்ச்சிகளும் தேடல்களும் நடைபெற்றதாம். 41 வருடங்களுக்குப் பிறகு இக் கண்டுபிடிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு இவ்வுருவம் பாதுகாக்கப்படுவதற்காக சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் வைக்கப்பட்டுள்ளதாம்.

சசெக்ஸ் பல்கலைக்கழக வரலாற்று ஆராய்ச்சித் துறையைப் பார்வையிட வரும் அதிகமானவர்கள் ஒரு முறை தமது முன்னோர்களைப் பார்த்துவிட அதிக ஆவல் காட்டுகிறார்கள்.



## இரவையும் பகலையும் காட்டும் மிகப் பெரும் கடிகாரம்

சூரியனே நமக்கு இரவையும் பகலையும் காட்டுகின்றது. சூரியனை ஆதாரமாக வைத்தே நாம் நேரத்தை மதிப்பிடுகிறோம். இப்போதும் கூட கைக்கடிகாரத்தின் உதவியுடன். கடிகாரமே இரவையும் பகலையும் காட்டும் அதிசயத்தை இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். சூரிய ஒளி வெளியே தெரியாத நாடுகளில் இக் கடிகாரத்திற்கு இன்று அதிக மவுசு.

1925ம் ஆண்டு பாரிஸ் நகரில் நடைபெற்ற ஒரு கண்காட்சியில் இக் கடிகாரத்தின் மாதிரியை உருவாக்கி பார்வைக்கு வைத்திருக்கிறார்கள். இப் படத்திலுள்ள நேரம் 6 மணி 25 நிமிடமாகும். இந் நேரத்தில் உலகம் இப்படித்தான் இருக்கும். அதிக இருள், கொஞ்சம் வெளிச்சம்.

இரவு என்றால் அதிக இருள் இரு பக்க மனித உருவத்தை மறைத்துவிடும். பகல் என்றால் ஒரு பக்க மனித உடல் வெளிச்சத்தால் நிரம்பிவிடும். ஆற்றல் மிகு இக் கடிகாரத்தை வாங்குவதில் இப்போது அதிக மக்கள் ஆர்வம் கொண்டுள்ளனர்.



## சந்திரனுக்கு மனிதன் போனானா?

உலகத்தையே வெற்றி கொள்ள வல்லரசுகள் பலத்த போட்டி போடுகின்றன. இந்தப் போட்டியில் பல இலட்சக்கணக்கான மனித உயிர்கள் அழிந்து போயுள்ளன. உலகை வெற்றி கொள்ள வேண்டுமென்ற இந்த ஆசை இன்னும் ஒரு படி மேல் போய்விட்டது.

1960களிலேயே உலகை மட்டுமல்ல முழு பிரபஞ்சத்தையே வெல்ல வேண்டுமென ஆசை வல்லரசுக்கு ஏற்பட்டுவிட்டது. இந்தப் போட்டியில் சந்திரனுக்கு மனிதனை அனுப்பும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 1961ல் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோன் எப் கெனடி இந்தப் போட்டியில் அமெரிக்காவே முதலில் ஜெயிக்கும் எனச் சூளுரைத்தார்.

அவர் சூளுரைத்தது போல் 1969 ஜூலை 20ம் திகதி 'அப்பலோ 11' என்ற விண்வெளி ஓடம் சந்திரனை அடைந்தது. முதன் முதலில் சந்திரனில் காலடி வைத்த மனிதன் என்ற பெருமையை




நீல் ஆம்ஸ்ரோங் பெற்றார். இரண்டாவது காலடி வைத்த மனிதன் எட்வின் ஆல்ரன் ஆவார். அமெரிக்காவின் இந்த அகில சாதனையை உலகமே வியந்தது.

21ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தச் சாதனையைச் சந்தேகிக்கும் வகையில் பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன. அமெரிக்க விண்வெளி ஓடம் மட்டுமே இது வரை சந்திரனுக்குப் போய் வந்திருக்கிறது. மனிதன் 21ம் நூற்றாண்டில் சந்திரனுக்கு போய் வாழலாம் என்ற பிரமை அமெரிக்காவால் உலகம் முழுதும் ஏற்படுத்தப்பட்டது. இதுவரை வேறு எந்த மனிதனும் சந்திரனுக்குப் போகவே இல்லை. பல்வேறு வல்லரசுகள் சந்திரனுக்குத் தங்களது விண்வெளி ஓடத்தை அனுப்பப் பலத்த முயற்சி எடுத்திருக்கின்றன. அனைத்தும் பலத்த தோல்வியையே தழுவின. அதன் பின்தான் சந்திரனுக்கு மனிதன் போன சரித்திரத்தை ஆராய்ந்தார்கள். அவர்களுக்கு மிகப் பெரும் அதிர்ச்சி!

சந்திரனில் நிழலே விழ முடியாது! அப்படி இருக்கும்போது சந்திரனுக்கு நீல் ஆம்ஸ்ரோங் போய் அமெரிக்கக் கொடியை நாட்டும் போது எடுக்கப்பட்ட ஒளிப் படத்தில் எப்படி நிழல் வர முடியும். ஆகவே இது உலகில் ஒரு மூலையில் நடாத்தப்பெற்ற நாடகம் என்கிறார்கள். அமெரிக்கா இதற்கு இன்னும் பதில் சொல்லவே இல்லை.



## அழிவை நோக்கி....

1960களில் நைஜீரியாவில் பயா.'.பிரா மக்கள் நைஜீரிய இராணுவ அரசுக்கு எதிராகப் போராட்டத்தைத் தொடங்கினர். 1969களில் இப் போராட்டத்தை நைஜீரிய இராணுவ அரசு கொடூர கரம் கொண்டு நசுக்கியது. தங்களது சுயநலத்திற்காக வல்லரசு நாடுகளும் பிற காலனித்துவ நாடுகளும் இப் போரை மிக மோசமாகப் பாவித்தன. இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டனர்.

இப்போதும் கூட இக்போ எனும் அவ்வினத்தில் வயதானவர்களை விட 19 வயது இளைஞர்கள் நான்கு மடங்கு அதிகமாம். காரணம், போர் மிக மோசமாக நடைபெற்ற 1960 தொடக்கம் 1969 வரையான காலப் பகுதியில் பெருமளவான இளைஞர், யுவதிகள் படுகொலை செய்யப்பட்டனராம்.

வறுமை, இன அழிப்பு, பொருளாதார அழிப்பு போன்றவற்றிலிருந்து அந்த மக்கள் இன்னுமே விடுதலை பெறவில்லை. அன்றாட உணவுக்காக ஏங்கித் தவிக்கும் மக்கள் கூட்டமாகவே அவர்கள் இன்றும் உள்ளனர். போர் மனித குலத்தை அழித்துவிடும் என்பதற்கு சோற்றுப் பருக்கைக்காக ஏங்கும் இவ் அவல உருவமே சாட்சி. இன்னுமொரு தகவல், எந்த இராணுவ ஆட்சியை வீழ்த்த வேண்டுமென்று மக்கள் போராடினரோ அவ் இராணுவ ஆட்சியே இன்று வரை தொடர்கிறது.

## இந்த முத்தத்திற்கு என்ன பரிசு?



உலகம் வியக்குளவுக்கு நடந்த திருமணம். உலகம் கண்ணீர் விடுமளவுக்கு நடந்த மரணம். காதலிப்பதற்கும் காதலிக்கப்படுவதற்கும் ஏங்கிய ஒரு நட்சத்திரப் பெண்ணின் வாழ்வுதான் பிரிட்டிஷ் இளவரசி டயானாவின் வாழ்வு.

திருமண வாழ்வில் அனைத்தும் கிடைத்தன. பணம், பதவி, அந்தஸ்து ஆடம்பரமான வாழ்க்கை, ஆனால் அன்பு மட்டும் கிடைக்கவேயில்லை எனத் துணிச்சலாக, பெண்களின் மன ஏக்கத்தை பகிரங்கமாகவே வெளிப்படுத்தியவர் டயானா. பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் பாரம்பரியங்களையும் மீறித் தனது கண்ணீரை உலகிற்குத் தெரியப்படுத்தியவர்.

1981ம் ஆண்டு ஜூலை 29ந் திகதி நடைபெற்ற டயானாவின் திருமணத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படம்தான் இது.

உலகமெல்லாம் உள்ள 750 மில்லியன் மக்கள் இத் திருமணத்தைக் கண்டு களித்தனர். இத் திருமணம் பிரிட்டிஷில் பகிரங்க விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டது. டயானா உயிருடன் இருக்கும் வரை இத் திருமணத்தில் பெரும் விழாவாகக் கொண்டாடப்பட்டது. இப்போது உலகிலுள்ள மக்களை டயானாவின் திருமணத் தினம் சந்தோசப்படுத்துவதில்லை, அவரது மரணம் பாதித்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் உலகிலுள்ள மக்கள் விடுபடவேயில்லை.

1981ம்ஆண்டின் திருமணத்தினத்தில் டயானா தனக்கு இப்படியொரு கண்ணீர் நிறைந்த வாழ்வும், அவலமும் அதிர்ச்சியும் நிறைந்த மரணமும் பரிசாகக் கிடைக்கும் எனக் கனவிலும் எண்ணியிருக்க மாட்டார்!

# ஜனாதிபதியின் புதிய நகர்வு! புலிகளுடன் பேச பொ.ஐ.மு. முயற்சிக்கிறதா?

**அ**டுத்து என்ன செய்யலாம் என்று தீவிரமாக யோசிக்கத் தொடங்கியிருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா



குமாரதுங்க. ஜே.வி.பி.யுடனான கூட்டு ஒப்பந்தம் ஏதேனும் ஒரு காரணத்தின் அடிப்படையில் பின்தள்ளிக்கொண்டே போகிறது. இம் மாதம் 15ந் திகதியளவில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படலாம் என்பது இறுதியாகக் கூறப்பட்ட திகதி நிர்ணயிப்பு. இதற்கு முன்னர் பல திகதிகள் அறிவிக்கப்பட்டு ஒன்றிலும் அது ஒப்பந்தம் ஆகவில்லை.

ஜனாதிபதி அமைச்சுக்களை இன்று பொறுப்பேற்பார், நாளை பொறுப்பேற்பார் என்றெல்லாம் தினசரி செய்திகள் வந்துகொண்டிருந்தன. இப்போது கூட அவற்றுக்கு ஒன்றும் குறைவில்லை. உள்துறை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, ஊடகத்துறை அமைச்சு என்று ஜனாதிபதி பொறுப்பேற்கப் போவதாகக் கூறப்படும் அமைச்சுக்களின் பட்டியல் தினசரி செய்திகளாகக் கசிந்து கொண்டிருக்கின்றன. ஆனால் தான் பொறுப்பேற்றதாக அவராலேயே அறிவிக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் முழுமையான கட்டுப்பாடு கூட இன்னமும் ஜனாதிபதியின் வசம் வரவில்லை என்பதுதான் யதார்த்தம்.

இந் நிலையில் ஜனாதிபதியின் பாதுகாப்பு



அதிகாரங்களைக் களையும் புதிய சட்ட மூலம் ஒன்றை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. பாதுகாப்புக் கவுன்சில் ஒன்றை அமைத்து அதற்குப் பாதுகாப்பு அமைச்சரைத் தலைவராகப் போடுவதன் மூலம் ஜனாதிபதிக்கு ஆயுதப் படைகளின் மீதிருக்கும் கட்டுப்பாட்டைச் சட்டரீதியாக அகற்றுவதே அரசாங்கத்தின் உத்தேச சட்டமூலத்தின் நோக்கமாகும்.

இந்த சட்டமூலத்தை அரசாங்கத்தினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியுமா என்பதெல்லாம் வேறு பிரச்சினை. இப்படியொரு திட்டத்தை அரசு கொண்டிருக்கிறது என்பதிலிருந்தே ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான புரிந்துணர்வு கிட்டத்தட்ட இறுதிக் கட்டத்தை நோக்கி நகருகிறது என்பதை உணர முடிகிறது. அரசாங்கம் நல்லிணக்கம், கூட்டுறவு என்று பேசிக்கொண்டே தனக்கெதிராகச் செயற்பட்டு வருகிறது என்பது திருமதி குமாரதுங்கவின் தொடர்ச்சியான குற்றச்சாட்டு. அரசாங்கம் சிரித்துச் சிரித்துக் கழுத்தை அறுக்கிறது என அவர் இதனைப் பொதுக் கூட்டம் ஒன்றில் கடந்த வாரம் விமர்சித்திருந்தார். எப்படியிருந்தாலும் இனிமேல் அவசர நகர்வுகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் ஜனாதிபதி இருக்கிறார். ஏனெனில் அவரது பதவிக் காலம் வேகமாக

முடிந்துகொண்டு போகிறது. ஜனாதிபதி இன்னும் சில மாதங்கள்தான் பதவியிலிருப்பார் என்ற நிலை உருவாகிவிட்டால் தனது கட்சி உறுப்பினர்களை முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பது சிரமமாகும். அதே வேளை அரச தரப்பிலிருந்து எம்.பி.க்களைத் தம் பக்கம் இழுக்கும் முயற்சி சாத்தியப்படாமல் போகவும் வாய்ப்பு இருக்கிறது. எனவே அவசரமாகச் செயற்பட்டாக வேண்டிய கட்டாயத்தை நோக்கி அவர் தள்ளப்படுகிறார். இந் நிலையில் அவரது அடுத்த நகர்வு எதுவாக இருக்கும் என்பது பரவலான எதிர்பார்ப்பு. அமைச்சுக்களைப் பொறுப்பேற்பது, தடாலடியாக அரசாங்கத்தை கவிழ்ப்பது, பாராளுமன்றத்தை ஒத்திப் போடுவது என்று பல திட்டங்கள் குறித்துப் பேசப்பட்டாலும் யாரும் எதிர்பாராத ஒரு நகர்வு கூட நடக்க வாய்ப்பு இருக்கிறது. பொ.ஐ.மு. புலிகளுடன் பேச முயற்சிக்கிறது எனச் செய்திகள் கசிந்துள்ளன. அந்தக் கட்சி இதனை உத்தியோக பூர்வமாக மறுத்திருக்கிறது. ஆனால் அரசியல் கட்சிகளின் எல்லா மறுப்புகளையும் மெய்யெனக் கொள்ளும் நிலை இங்கில்லை. இந்தத் திசை நோக்கியும் இலங்கையின் அரசியல் நகரலாம். ▫

# கமலின் அரசியல் பிரவேசத்தை இலக்கு வைத்து அவர் மீது சேறு பூசும் முயற்சியா?

**'சண்டியர்'** படத்தின் பெயரை கமலஹாசன் மாற்றுவதாகச் சொன்னாலும் கூட இன்னும் 'சண்டியர்' குறித்த சர்ச்சைகள் ஓய்ந்தபாடில்லை. இன்னும் திட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். கமல் சாதி வெறியைத் தூண்டிப் பணம் சம்பாதிக்கப் பார்க்கிறார் என்று பரவலான குற்றச்சாட்டு. ஜெயலலிதாவைச் சந்தித்த பின்னர் படத்தின் பெயரை மாற்றுவதாகவும் சில காட்சிகளை மாற்றி அமைப்பதாகவும் கமல் கடந்த வாரம் அறிவித்திருந்தார். என்றாலும் அவரது எதிரணியினர் அதனை ஏற்றுக்கொள்வதாக இல்லை. தொடர்ந்து பத்திரிகைகளிலும் அறிக்கைகளிலும் கமல் மீது வசை பாடிக்கொண்டே இருக்கிறார்கள். இவற்றுக்கு கமலஹாசன் எப்போதும் சொல்லும் பதில் "நல்ல சினிமா செய்ய முயற்சிக்கிறேன். இதில் சாதி வெறியெல்லாம் கிடையாது" என்பதுதான். ஆனால் கமலை விமர்சிப்பவர்கள் அதனை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. 'சண்டியர்' படப்பிடிப்பு தற்பொழுது வெவ்வேறு இடங்களில் மிகுந்த பாதுகாப்புக்கு மத்தியில் நடந்து வருகிறது. இதற்கிடையில் இந்திய ஊடகங்களில் கமல் தொடர்பாக இரு வேறுபட்ட கருத்துக்கள் வேகமாகப் பரப்பப்படுகின்றன. ஒன்று அவர் ஒரு சிறந்த கலைஞர், சினிமாவில் தன் கருத்தைச் சொல்ல அவருக்கு இருக்கும்



உரிமையை யாரும் மறுதலிக்கலாகாது என்பது. மற்றையது கமல் மீது சேறு பூசும் முயற்சி. இந்தப் பட்டியலில் உள்ள அநேக ஊடகங்கள் கமலின் எதிர்கால அரசியல் பிரவேசத்தைப் பயத்தோடு பார்ப்பவை. அதற்கு முன்பாகவே அவரது இமேஜை தாழ்த்தப்பட்ட சமூகங்களுக்கு மத்தியில் இருந்து அகற்றிவிட வேண்டும் என்று துடிப்பவை. கமல் 'சண்டியர்' மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் உணர்வுகளைப் புண்படுத்த முயற்சிக்கிறார் என இவை கூறி வருகின்றன. தலித் சார்பு ஊடகங்கள் கமல் மீது சமீப காலமாகப் பலத்த தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றன. ஆனால் அவர் அசைவதாக இல்லை. கமலின் மற்றொரு பாரிய சினிமா முயற்சியான 'மருதநாயகம்' நிதி நெருக்கடி காரணமாக இடையில் நின்று போயிருக்க, சண்டியரும் நிறுத்தப்படுவது சினிமாவின் போக்கைப் பாழடித்துவிடும் என்ற வகையில் ஆரோக்கியமான விமர்சனங்களும் வரவே செய்கின்றன.

# சுபத்திரன்

## ஒரு பத்திரிகையாளரின் குறிப்பு

சுபத்திரன் கொலை பற்றித் தமிழ்ப் பத்திரிகைக் கட்டுரையாளர்கள் சிலர் எழுதுவது மிக விநோதமாக இருக்கிறது. 'தாங்கள் உயிர் வாழ்வதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மற்றவர்கள் யார் சாகடிக்கப்பட்டாலும் பரவாயில்லை' என்ற பரந்த மனதையும் புதிய மானுடப் பண்பையும் இவர்கள் இந்த சமூகத்திற்கு விநியோகிக்கிறார்கள்.

'சுபத்திரனுடைய உயிர் தமிழர் நலன்களுக்கு விரோதமானது. ஆதலால் அதை யாரோ இனந்தெரியாதவர்கள் அழித்து முடித்துவிட்டது தமிழ் மக்கள் சந்தோஷப்படக்கூடிய செயல்தான்' என்பது போல மனங் கூசாமல் நிறுவ முற்படுகிறார்கள்.

கொல்லப்படுவதற்கு முன், சுபத்திரன் என்ற நபர் தமிழர்களுக்கு விரோதமான காரியங்களைச் செய்து வருகிறார் என்ற ஒரு சிறு குறிப்பைதன்னும் இந்தப் பத்திரிகைகள் எழுதியதாகத் தெரியவில்லை. தேர்தலில் யாழ் மாநகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுப் பல காரியங்களை




எல்லோருக்கும் தெரியச் செய்து வந்தவர்தான் அவர்.

சுட்டுக் கொல்லப்பட்ட பிறகு, அவர் இந்தியாவுக்கு நெருக்கமாக இருந்திருக்கலாம் அல்லது இராணுவத்துக்கு நெருக்கமாக இருந்திருக்கலாம் என்று கண்டுபிடிப்புச் செய்திருக்கிறார்கள். இப்படிச் சொல்லிவிட்டால் போதும், தமிழ் மக்கள் அந்த உயிர் அழிக்கப்பட்டதற்கு நியாயம் கண்டு திருப்தியடைந்துவிடுவார்கள் என்பதே இவர்களது சமூகப் பொறுப்பாகவும் ஆய்வுமுறை எழுத்தாகவும் இருக்கிறது. இப்படி எழுதுகிறவர்கள் யாராவது சுபத்திரனை நேரில் பார்த்து, கதைத்துப் பழகியிருக்கிறார்களா அல்லது அப்படிப் பழகிய பத்திரிகையாளர்களிடமாவது கேட்டறிந்தார்களா? என்பதையும் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். தன்னுடைய மக்களுக்காக அவர் என்னவெல்லாம் செய்துகொண்டிருந்தார், அவருடைய அரசியல் நோக்கமும் தெளிவும் எவ்வாறாக இருந்தது? 1983ல் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு 4 வருடங்கள் சிறையில் சித்திரவதைக்குள்ளாகி, சொத்தையும் சொந்தங்களையும் துறந்து மக்களுக்குத் துரோகம் செய்யவா அவர் கஷ்டங்களைச் சுமந்து வாழ்ந்தார் என்பதையெல்லாம், எந்த நோவுமின்றிக் கொழும்பிலிருந்து எழுதும் இவர்களிடம் கேட்க வேண்டும். போர் வாங்குவதற்காக இருட்டறைக்குள் கறுப்புப் பூனையைத் தேடி அடித்துக் கொண்டிருக்கும் இவர்களின் பாசிச விசுவாசம் அப்போதாவது யாருக்கேனும் புலப்படக்கூடும்.

**–சுபத்திரனுடன் கொஞ்சக் காலம் பழகிய யாழ்ப்பாணப் பத்திரிகையாளன்.**



சித்தத்தி லேநின்று சேர்வ துணரும்
சிவசக்தி தன்புகழ் செப்பு கின்றோம்.
இத்தரை மீதினில் இன்பங்கள் யாவும்
எமக்குத் தெரிந்திடல் வேண்டு மென்றே.
சுப்பிரமணிய பாரதியார்-



## தன் கையே தனக்குதவி

### பாப்பா முரசு சிறுகதை



ஒரு நெல் வயலில் பயிர்கள் பசுமையாக வளர்ந்திருந்தன. கதிர்கள் தலை சாய்த்துக் காற்றில் ஊசலாடிக்கொண்டிருந்தன. அந்த வயலுக்குள் ஒரு சிட்டுக் குருவி கூடு கட்டியிருந்தது. அது முட்டையிட்டுக் குஞ்சு பொரித்திருந்தது. குஞ்சுகள் வளர்ந்து, இறகு முளைக்கத் தொடங்கிய சமயம் ஒரு நாள் தாய்க்குருவி இரை தேடுவதற்காக வெளியே சென்றிருந்தது.

அந்தச் சமயத்தில் அந்த வயலின் சொந்தக்காரர் வயலைச் சுற்றி வந்து பார்த்தார்.

"கதிர் நல்லா முத்திடுச்சு. நாளைக்கு ஆட்களை வச்சு அறுவடை செய்திடணும். இல்லாட்டா கதிர் உதிர்ந்து கொட்டிப்போய், நெல் பழாகி விடும்!" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டார். பிறகு போய்விட்டார்.

சற்று நேரம் கழித்துத் தாய்க்குருவி தன் கூட்டுக்குத் திரும்பியது. திகிலுடன் உட்கார்ந்திருந்த தன் குஞ்சுகளைப் பார்த்து, "ஏன் பயந்து போய் இருக்கீங்க? என்ன நடந்துச்சு?" என்று கேட்டது.

"அம்மா! வயலுக்குச் சொந்தக்காரர் வந்திருந்தாரம்மா. நாளைக்கே அறுவடை செய்யணும்னு சொல்லிட்டிருந்தாரு.... அவர் அறுவடை செய்தாருன்னா நமக்கு ஆபத்து இல்லையா? இன்னிக்கு ராத்திரியே நாம எங்கயாவது போயிடலாம்மா" என்று குருவிகள் கூறின.

"கவலைப்படாதீங்க, செல்வங்களே! இன்னும் ரெண்டு நாள் பாக்கலாம்.... அப்புறமா தீர்மானிச்சுக்கலாம்!" என்றது தாய்க் குருவி.

இரண்டு நாள்கள் கழிந்தன. மீண்டும் வயலுக்குச் சொந்தக்காரர் வயலைப் பார்க்க வந்தார். மிகவும் கவலை தோய்ந்த குரலில்,

"நம்ம ஊர்ல அறுப்புக்குச் சரியா ஆள் கிடைக்க மாட்டேங்குது. நாள் வேற தள்ளிட்டே போகுது. இப்படியே போனா நெல்லு வீணாப் போயிடுமே! நாளைக்கு கூலி கூடக் கொடுத்தாவது ஆள் பிடிச்சிடணும்" என்று தனக்குத் தானே கூறியவாறு சென்றார்.

அடுத்து, இரண்டு நாள் களுக்குப் பிறகு திரும்ப வந்தார். "இனிமே வேலைக்காரர்களை நம்பிப் பிரயோசனமில்ல. நாமளே நம்ம புள்ளை, பயலுகளைக் கூட்டிட்டு வந்தாவது அறுவடை செய்திட வேண்டியதுதான்" என்று சொல்லிக்கொண்டு சென்றார்.

அன்று இரவு தாய்க்குருவி வந்ததும், வழக்கம் போல் குஞ்சுகள் நடந்ததைக் கூறின.

"குழந்தைகளே! நாளைக்கு விடியக் காலைல நாம இங்கேருந்து கிளம்பிடலாம்!" என்றது தாய்க்குருவி.

"ஏம்மா? இத்தனை நாள் பாக்கலாம், பாக்கலாம்னு சொன்னீங்க?" என்றன குஞ்சுகள்.

"வயலுக்குச் சொந்தக்காரர் முதலில் வேலைக்காரர்களை நம்பிக்கொண்டிருந்தார்... ஆனா இப்போ பிறரை நம்பாம, தன் சொந்த சக்தியையும் உழைப்பையும் நம்பி, அறுவடை செய்யணும்னு முடிவெடுத்திட்டார்..... அதனால் நாளைக்கு நிச்சயம் வந்து அறுப்பை ஆரம்பிச்சிடுவாரு...." என்று கூறியது.

அதிகாலையில் தன் குஞ்சுகளையும் அழைத்துக் கொண்டு பத்திரமான இடம் நோக்கிப் பறந்தது. ஆம், பிள்ளைகளே! பார்த்தீர்களா? இன்னொருவருடைய உதவியும் சொத்துக்களும் எமக்கு என்றும் நிலையானது அல்ல. ஆகவே தன்கையே தனக்கு உதவி என்ற மந்திரத்தை உணர்ந்து நாமும் வாழ்க்கையில் முயற்சி செய்து வெற்றிபெறுவோம்.

## விடுகதைகளும் விடைகளும்


1. பார்வைக்குக் கல்லானவன் பல் பட்டால் நீரானவன் அவன் யார்?
2. கட்டையைக் கடித்தால் கனிச்சாறு அது என்ன?
3. இவனின் சுத்தம் பார்க்கத் தீயில் போட்டார்கள் அவன் யார்?
4. அவள் மெல்ல நடந்தாள் நான் தள்ளிக் கடந்தேன் அவள் யார்?
5. விளக்கைச் சுமந்துகொண்டு விடிய விடியப் பறப்பான் அவன் யார்?
6. ஓட்டம் நின்றால் ஆட்டம் போச்சு அவன் யார்?
7. காலையில் ஓரிடம் மாலையில் வேறிடம் அவன் யார்?
8. முதுகில் மூட்டை சுமக்காமலே இந்தப் பூச்சிக்கு அந்தப் பெயர் அது என்ன?
9. கோபம் கொண்டால் மட்டுமே படமெடுப்பான் அவன் யார்?
10. சுமக்கத் தயங்க மாட்டான் ஆனால் நகர மாட்டான் அவன் யார்?

### விடைகள்

1. பனிக்கட்டி 2. கரும்பு
3. தங்கம் 4. நத்தை
5. மின்மினிப்பூச்சி 6. இதயம்
7. சூரியன் 8. மூட்டைப்பூச்சி
9. நல்லபாம்பு 10. சுமைதாங்கிக் கல்

## அதிசய உலகம் !


### வேரில்லாத தாவரம் !



கடற்பாசிகளில் ஆயிரக்கணக்கான வகைகள் உள்ளன. அவற்றில் ஒரு வகைக் கடற்பாசியைத்தான் பார்க்கிறீர்கள். இவருக்கு வேர் கிடையாது. பின், எப்படித்தான் கடல் அலைகளால் அடித்துச் செல்லப்படாமல் ஒரே இடத்தில் இருக்கிறார் என்பதுதான் ஆச்சரியமான விஷயம்.


இவை பெரிய பாறைகள், பெரும் கூழாங்கல் அல்லது பெரிய சிப்பிகளை தனது வேர் போன்ற அமைப்பைக் கொண்ட 'ஹோல்ட் பாஸ்ட்' எனப்படும் பகுதியால் இறுகப் பற்றிக் கொள்ளும். அதனால்தான் இவை அலைகளால் அடித்துச் செல்லப்படாமல் ஒரே இடத்தில் இருக்கின்றன. ஆனா இந்த 'ஹோல்ட் பாஸ்ட்' பகுதியால் தண்ணீர் மற்றும் உணவுப் பொருட்களை உறிஞ்சி உண்மையான வேர்கள் செய்யும் பணியைப் போல் செயற்பட முடியாது. இறுகப் பற்றிக் கொள்ளத்தான் முடியும்!

### ஆபிரிக்க நாரை!



ஆபிரிக்க நாரைகள் உருவத்தில் பெரியவை. வெள்ளை, றோஸ் கலந்த நிறத்தில் பார்க்க மிக அழகாய் இருக்கும். கூட்டம் கூட்டமாக ஏரிகள், குளங்களை முற்றுகையிட்டு, மீன்களை நீளமான வளைந்த சொண்டுகளால் கொத்தி உண்ணும். இவை பறக்கும்போது கழுத்தை நீட்டி வைத்துக்கொண்டு பறக்கும். சேறு, செடி, கொடிகள் உள்ள குழம்பிய நீரில் தடை இன்றி நடப்பதற்கு ஏற்ப இவற்றின் கால்கள் நீளமாக அமைந்துள்ளது.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 12.07.2003.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 503
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 500

**பரிசுக்குரியவர்:**

எம்.எல்.எம்.ரிஸ்வான், எம்.எல்.எம்.ரியாஸ்,
211/12 2/4 ஜும்மா மஸ்ஜித் வீதி, கொழும்பு - 10.


**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கரிஸ்கா முரளிதரன், 101 அருணகிரி வீதி, திருகோணமலை. | ரி.கவிபிரியா, 3டி, பதுலபிட்டிய ரோட், பதுளை. |
| எம்.பிரியங்கா, 84, டிலாசால் வீதி, மோதரை, கொழும்பு - 15. | ஜயதீப் விஜயகுமாரன், இந்துக் கல்லூரி, கொழும்பு - 04. |
| பா.வினிதா, 68/2 ஜோசப் டயல் ஒழுங்கை, கொழும்பு-15. | எஸ்.மார்ஸ் தயன்ஸ், ஆஸ்பத்திரி வீதி, மன்றாசியூர், அக்கரப்பத்தனை. |
| கிருஷ்ணராஜா டர்ஷிகா, 109/1,அருணகிரி வீதி, திருகோணமலை. | செல்வி. சி.ரஜீத்தா, சேச் லேன், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. |
| மேனகா, கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை, வெள்ளவத்தை. | செல்வி.ஞா.ஸர்வீனா, தி/கலைமகள் வித்., அன்புவழிபுரம், திருகோணமலை. |

## உங்கள் பொது அறிவு எப்படி?

1. சந்திர ஒளியில் வானவில் தோன்றுவதை பூமியில் எங்கு பார்க்கலாம். விக்டோரியா நீர் வீழ்ச்சியில் (தென்அமெரிக்கா)
2. ஈரிதழ் வால்வு இதயத்தின் எந்தப் பாகத்தில் உள்ளது. இடது பக்கம்
3. மனிதனின் முகத்திலும் தலையிலும் எத்தனை எலும்புகள் இருக்கின்றன 22 எலும்புகள்
4. பாசிசக் கொள்கையின் சிற்பி என்று வர்ணிக்கப்படுபவர் யார்? முசோலினி
5. சூரியனுக்கு மிக அருகில் இருக்கும் கிரகம் எது? புதன்
6. பட்டு நெசவுக்கு உலகில் புகழ் பெற்ற நகரம் எது? காஞ்சிபுரம்.
7. மனித உடலில் உள்ள கண், காது, கை, கால், நுரையீரல், சிறுநீரகம் இந்த உறுப்புகளுக்கு உள்ள பொதுவான ஒற்றுமை என்ன? இந்த உறுப்புகள் எல்லாமே உடலில் இரண்டு உள்ளன.
8. பெற்றோலியப் பொருட்கள் ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு எந்த ஆண்டு நிறுவப்பட்டது? 1960 ம் ஆண்டு
9. மண் புழு எதன் மூலம் சுவாசிக்கிறது. தோல் மூலம்
10. முதல் கம்பியூட்டர் மொழியின் பெயர் என்ன? பிளான் கால்கள்


## இந்த வாரப் புதிர்

1


2


1 ஆவது பகுதியிலிருக்கும் டிசைனை மூன்று நேர்கோடுகளால் இணைத்தால், 2 ஆவது பகுதியிலிருக்கும் முக்கோணம் போல் 8 முக்கோண கியூபுகள் கிடைக்கும். எப்படி என்று முயன்று பாருங்கள்.

## அறிவுத் தேடல்



சென்ற வாரப் புதிரின் விடை

## தகவல் பெட்டி


## புதுவகை பொலிடிக்ஸ்

இப்போதெல்லாம் அரசியல்வாதிகள் பிரபல்யம் தேடிக்கொள்வதற்காகக் கையாளும் புதிய வழிமுறைகளில் இளம் ஜோடிகளுக்குக் கல்யாணம் செய்து வைப்பதும் ஒன்று. இந்த வழிமுறை நமது நாட்டில் பெரிய அளவு எடுபடாவிட்டாலும் இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் ரொம்பவும் பிரபல்யம். ஜெயலலிதா அடிக்கடி 100, 200 என்று ஜோடிகளை அழைத்துத் திருமணம் செய்து வைக்கிறார். ஆனால் தென்கொரியர்கள் செய்த சாதனையை அவரால் முறியடிக்க முடியவில்லை. ஒரே மைதானத்தில் 3500 ஜோடிகளுக்கு ஒரே நேரத்தில் திருமணம் நடத்திக் கலக்கிவிட்டார்கள். சியோலில் உள்ள ஒலிம்பிக் மைதானத்தில் இந்த மாபெரும் திருமண நிகழ்வு நடந்தது. வரிசையாக நின்று மோதிரம் மாற்றிக்கொண்டார்கள். தப்பித் தவறித் தனக்கு நேராக உள்ளவரின் கையைப் பிடிக்காமல் சற்றுத் தள்ளி இருக்கும் மணப்பெண்ணின் விரலுக்கு ஒருவர் மோதிரம் அணிவித்திருந்தால் கூட கல்யாணம் கலவரத்தில் முடிந்திருக்கும்!



## விரல் அளவில்


அன்றாடம் எமது வீட்டுச் சுவர்களிலேயே பல வகையான பல்லிகளைப் பார்த்திருப்பீர்கள். ஆனால் இந்த அளவு சின்னதாகக் கண்டிருக்கிறீர்களா....? உலகிலேயே மிகவும் சிறிய வகை பல்லி இதுதான். முடிந்தால் இதன் விஞ்ஞானப் பெயரை நீங்களே வாசித்துக்கொள்ளுங்கள். Sphaerodactylus Pathenopia இந்தப் பல்லி வகை மிஞ்சிப் போனால் 1.6 சென்ரி மீட்டர் (வால் இல்லாமல்) நீளத்துக்குத்தான் வளரும். சாதாரண வீட்டு பல்லியினங்களை விட இதன் எச்சில் மனித உடலுக்கு விஷம்.



நகர மயமாக்கலோடு நகரங்களில் சனத்தொகை மட்டுமல்ல காணி பூமியின் விலையும் திடுதிடுவென உயர்ந்துவிட்டது. கொழும்பில் சில பகுதிகளில் ஒரு பேச்சர்ஸ் 10 இலட்சம் ரூபா வரையில் கூட விலை போவதுண்டு. அலுவலகங்களுக்காக ஒரு கட்டடத்தின் சிறு பகுதிக்குப் பல இலட்சம் ரூபாய் வாடகை கொடுத்து நடத்த வேண்டிய நிலை பல நிறுவனங்களுக்கு. என்னதான் இருந்தாலும் லண்டனைப் போல் வேறெங்கும் அலுவலகக் கட்டட இடப் பரப்புக்காக அதிக விலை அறவிடப்படுவதில்லை. கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பீட்டின்படி அங்கே ஒரு சதுர மீட்டர் நிலப்பரப்பின் விலை சராசரியாக 1074 ஸ்டேர்லிங் பவுண்களாக (சுமார் ஒன்றரை இலட்சம் ரூபா) இருந்தது எனக் கின்னஸ் தகவல் கூறுகிறது. இந்த மாதிரியான கூடிய விலை விஷயத்தில் ஜப்பானின் டோக்கியோ நகரம் 2வது இடத்தில் இருக்கிறது. அங்கே ஒரு சதுர மீட்டர் 754 பவுண்களுக்கு விலை போகிறது.

## லண்டனில் காணி நிலம் வேண்டுமடி பராசக்தியே!





## அந்திரக்ஸ் மனிதன்

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்து தலிபான் அரசாங்கம் வீழ்த்தப்பட்டதன் பின்னர் சில காலம் அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிலும் 'அந்திரக்ஸ்' பீதி தலைவிரித்தாடியது ஞாபகம் இருக்கலாம்.

எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ என்பது போல எந்தக் கடிதத்தில் அந்திரக்ஸ் இருக்குமோ என்று பயப்பட்டு, தபாலில் வரும் கடிதங்களை யெல்லாம் இரசாயனப் பகுப்பாய்வு செய்ய வேண்டி இருந்தது. பின்னர் படிப்படியாக இந்தப் பீதி மங்கிப் போயிற்று. நமக்கெல்லாம் இந்த அண்மைக்கால நிகழ்வுகள்தான் அந்திரக்ஸை அறிமுகம் செய்தது என்றாலும் இந்த உயிரியல் ஆயுதத்திற்கு வயது 50க்கும் மேல்.

1942ம் ஆண்டு பிரிட்டனின் ஸ்கொட்லாந்து பகுதியில் கிரினாட் தீவுகளில் தாராக்கள் மீது அந்திரக்ஸ் முதன் முதலில் பரிசோதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அன்று தொடக்கம் உலகின் பலம் மிக்க நாடுகள் பலவும் அந்திரக்ஸையும் தமது போராயுதங்களில் ஒன்றாக விருத்தி செய்து வந்திருக்கின்றன. ஆண்டு தோறும் குறைந்த பட்சம் 2000 பேர் ஏதோ ஒரு வகையில் அந்திரக்ஸ் பாதிப்புக்கு உள்ளாகி மரணிப்பதாக அறிக்கையொன்று தெரிவிக்கிறது. இங்கே படத்தில் இருப்பது பிரிட்டனின் இந்த வகை இரசாயன ஆய்வு கூடம் ஒன்றில் பணியாற்றும் ஊழியர். எத்தனை பாதுகாப்பாய் உடை அணிந்திருக்கிறார் பாருங்கள்.



அமோகா

☆ விவேக் நடிக்கும் ஒவ்வொரு படத்திற்கும் வசனம் எழுதுவதற்கென்று தனியான ஒரு குழுவையே வைத்திருக்கிறார். ஒவ்வொரு படத்திலும் வித்தியாசமான நகைச்சுவைக் காட்சிகளுக்கு ஏற்ப இந்தக் குழுவினர் விவாதம் நடத்தி வசனம் எழுதிக் கொடுக்கிறார்கள். அவற்றைத்தான் விவேக் வெள்ளித்திரையில் விளாசுகிறார்.

☆ 'அட்டகாசம்' படத்தில் இரட்டை வேடத்தில் நடிக்கும் ஒரு அஜித்துக்கு ஜோடியாக பூஜா நடிக்கிறார். இவர் 'பெப்ஸி' படத்தில் கதாநாயகியாக நடிப்பவர்.

☆ 'சொல்ல மறந்தகதையில்' சிறப்பாக நடித்துப் புகழ் பெற்ற இயக்குநர் சேரன் தற்போது 'ஆட்டோகிராப்' என்ற படத்தில் ஹீரோவாக நடித்து வருகிறார். அடுத்ததாக 'உயிர் நண்பன்' என்ற படத்தில் அவர் நடிக்கவுள்ளார். இந்தப் படத்தில் சங்கவி, கோபிகா, ஷமிதா என்று ஹீரோயின்கள் கூட்டம் ஒன்றே நடிக்கவிருக்கிறது.

☆ படப்பிடிப்பின்போது ஓய்வு கிடைத்தால் தான் கண்டு இரசித்த இயற்கைக் காட்சிகளை ஓவியமாக வரைவதில் ஆர்வம் காட்டுகிறார் சிநேகா. வெளியிடங்களில் கண்ட அழகிய காட்சிகள் சிநேகாவால் அழகாக வரையப்பட்டிருக்கிறது. தான் இப்படி வரைந்த ஓவியங்கள் எல்லாவற்றையும் சேர்த்து ஓவியக் கண்காட்சி ஒன்றை நடத்தத் திட்டமிட்டிருக்கிறார் சிநேகா.

☆ 'சிக்ஸ்டீன்ஸ்', 'லவ்ஸ்', 'தத்தித்தாவுது மனசு' ஆகிய படங்களில் ஹீரோயினாக நடிக்கும் சோனா கவர்ச்சி விஷயத்தில் எள் என்றால் எண்ணெயாக மாறிவிடுகிறார். எப்பொழுதுமே ஆடை களைவதில் இயக்குநர் சொல்வதற்குள்ளேயே செய்து முடித்துவிடும் திறமைசாலி இவர் என்று படப்பிடிப்புக் குழுவினர் வியந்து பாராட்டுகிறார்கள். சினிமா உலகம் இருக்கிற நிலையில் இப்படிக் கவர்ச்சி காட்டாவிட்டால் தாக்குப் பிடிக்க முடியாது என்று யதார்த்தமான உபதேசம் வேறு செய்கிறார் சோனா.

☆ உலகப் புகழ் பெற்ற சுவிஸ் வங்கிக்கு முன்பாக 'பிரியமான தோழி' படப்பிடிப்பை நடத்திக்கொண்டு இருந்தபோது அங்கு வந்த சுவிற்ஸர்லாந்துப் பொலிஸார் ஏதோ தீவிரவாதிகள்தான் வங்கியைக் கொள்ளையடிக்கப் போகிறார்கள் என்று நினைத்துப் படப்பிடிப்புக் குழுவைச் சுற்றிவளைத்து விட்டார்கள். பின்னர்தான் அவர்களுக்கு விஷயம் விளங்கியது.

# மினி சினி

☆ பாரதிராஜாவிடம் பேச்சு வாங்கியதிலிருந்து தமிழில் பேச முயற்சித்து வருகிறார் ஜோதிகா. தனது உதவியாளர்களிடமெல்லாம் தட்டுத்தடுமாறித் தமிழில்தான் பேசுகிறாராம். மேலும் ஜோதிகாவின் மனம் கவர்ந்த நாயகனும் தமிழிலேயே பேசும்படி உத்தரவிட்டிருப்பதாகக் கூறுகிறார்கள்.

☆ நீண்ட இடைவெளிக்குப் பிறகு அபிதா கையில் ஒரு படம். 'பிலி' படத்தில் நடிக்கிறார் அபிதா. ஆனால் என்ன ரோல் என்று இதுவரை அவருக்கே தெரியாதாம்.

## 'சண்டியரை' அரசியல் சீண்டியதில் தப்பில்லை

**—அஜித்**

'சண்டியர்' படத்தை அரசியல்வாதிகள் சீண்டிப் பார்த்ததில் வியப்பேதுமில்லை என்று கூறியிருக்கிறார் அஜித்.

நாம் ஒவ்வொரு படத்திலும் ஏதோ ஒரு வகையில் அரசியல்வாதிகளைப் போட்டு மிதிக்கிறோம். அப்படி இருக்கையில் அவர்கள் தம் பங்கிற்கு ஏதாவது செய்யப் பார்ப்பார்கள். இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் இப்படியான சர்ச்சைகளால் கமல் போன்ற நல்ல கலைஞர்கள் சங்கடத்துக்குள்ளாகிறார்கள் என்று கூறியுள்ளார் அஜித்.



கார்த்திக்குமார் — நிஷா

## மீண்டும் தமிழுக்கு வரும் 'அழகி'

'அழகி' படத்தில் அற்புதமாக நடித்து அசத்திய நந்திதா தாஸ் 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தில் நடித்ததோடு ஹிந்திக்கே போய்விட்டார். மீண்டும் அவரை மம்முட்டிக்கு ஜோடியாக ஒரு படத்தில் நடிக்க தமிழுக்கு அழைத்திருக்கிறார்கள்.

தமிழில் இவரைத் தேடிப் பல வாய்ப்புகள் வந்தபோதிலும் தனக்கு ஏற்ற கதை அமையாததால் நடிக்க மறுத்துவிட்டார் நந்திதா. இப்போது மம்முட்டிக்கு ஜோடியாகத் தமிழில் நடிக்க உள்ளார். இந்தப் படத்தின் பெயர் இன்னும் முடிவாகவில்லை.

'அழகி' படத்தில் ஒரு குழந்தையுடன் நகருக்கு வந்து அல்லற்படும் அபலைக் கிராமப் பெண்ணாகவும் 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தில் தமிழ் தீவிரவாதியாகவும் நடித்து பலரது பாராட்டையும் இவர் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

## கிரண் என்றால் அலறும் தயாரிப்பாளர்கள்

கோடம்பாக்கம் வட்டாரத்திலேயே மிகுந்த தொல்லை தரும் நடிகையாக மாறிவிட்டார் கிரண். திடுதிடுவெனச் சம்பளத்தை உயர்த்தியது போதாது என்று சூட்டிங்கிற்குச் சரியான நேரத்தில் வராமல் தொல்லை கொடுக்கிறாராம். 'பாறை' படத்திற்குப் பிறகு ஒரு பாட்டுக்கு ஆடுவதற்காக கிரண் வாங்கும் சம்பளம் இந்திய மதிப்பில் 5 இலட்சம் ரூபாய்.

போதாக்குறைக்கு யார் தேடிப் போனாலும் அட்வான்ஸ் வாங்கிக்கொண்டு கேட்கும் திகதியைக் கொடுத்துவிடுகிறார். ஆனால் படப்பிடிப்பிற்கு ஒழுங்காகச் செல்வதில்லை. இப்போது தயாரிப்பாளர்கள் தங்களது படப்பிடிப்பு நடக்கும் தினத்தில் அதிகாலையிலேயே ஒருவரைக் கிரணின் வீட்டுக்கு அனுப்பி வைத்துவிடுகிறார்கள். அப்படிப் போயிருந்தும் கூட அல்வா கொடுத்துவிட்டு வேறு படப்பிடிப்புகளுக்குப் போன சம்பவங்களும் நடந்திருக்கிறது. கிரண் என்றாலே அலறுகிறார்கள் தயாரிப்பாளர்கள்.

## மீண்டும் அஜித் படத்திலிருந்து மீராவுக்கு வெட்டு

அஜித் படத்திலிருந்து மீண்டும் நீக்கப்பட்டிருக்கிறார் மீராஜெஸ்மின். அஜித்துடன் நடிக்க வேண்டாம் என்று காதலர் லோகித்த தாஸ் கூறியதால் 'ஜனா' படத்திலிருந்து மீரா விலகிக்கொண்டார். பின்னர் 'ஆஞ்சநேயா' படத்தில் புக் செய்யப்பட்டார். ஆனால் மீரா மணிரத்னத்துக்குக் கொடுத்திருந்த அதே கால்ஷீட் திகதிகளை ஆஞ்சநேயாவுக்கும் ஒதுக்க புதிய வடிவில் பிரச்சினை வெடித்தது. மணிரத்னமா, அஜித்தா என்ற போராட்டம் எழ, மணிரத்னம் என்ற முடிவுக்கு வந்தார் மீரா. இதனால் ஆஞ்சநேயாவிலிருந்து மீரா நீக்கப்பட்டு ரீமாசென் அழைக்கப்பட்டுள்ளார்.

இளம் ஹீரோக்களுடன் தகராறு செய்யும் நடிகை என்று மீரா முத்திரை குத்தப்பட்டிருக்கிறார்.

## ஹீரோ

காயத்ரி
தெலுங்கு சினி
ஹீரோயினாக ந
இதனால் தெலுங்கி
இருந்தாலும் ஒரு
வரிசையில் தான்
அவ்வப்போது வந்
தெலுங்கிலும் ஒரு
அங்கு அவர் பிரபலம்
ஹீரோயின் கனவு விட்
தயாரிப்பாளர்களுக்கும் தன
ஆனால் இவரை ஹீரோ
அதுதானே காயத்ரியிடம்

## ஆடையின்றி ஆறு

வேலு பிரபாகரன் இயக்கும்
முதலில் சில கவர்ச்சிக் காட்சிக
படத்தில் ஆறு பாலியல் வல்லுறவ
செக்ஸியாகவும் நிர்வாணமாகவும் எடுக்
போய்விட்டார் மந்த்ரா. சகிலாவின் மனை
படத்தில் நடிக்க மறுத்துவிட்டார் மந்த்ரா
என்று இயக்குநர் கூறியபோது கவர்ச்சி
அதையும் வில்லன் களைந்துவிடுவான்






## சினிமாவில் நுழையும் கமலின் மகள் ஸ்ருதிகா

கமலைப் பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டுதான் சரிகா இப்படியெல்லாம் செய்கிறாரோ என்று கமலுக்கு நெருக்கமானவர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

தனது மனைவியோ, பிள்ளைகளோ சினிமாவுக்கு வரக் கூடாது என்று உறுதியாக இருந்தவர் கமல்.

சரிகாவுடனான கமலின் உறவு முறிந்ததோடு, மீண்டும் சினிமாவுக்கு வருவதாக அறிவித்து 'புன்னகைப் பூவே' படத்தில் ஒரு பாடலுக்கு நடனம் ஆடி கலக்கினார் சரிகா. இப்போது இது போதாது என்று தன் மகள் ஸ்ருதிகாவையும் சினிமாவில் நுழைக்கப்போகிறார் சரிகா. கமல்–சரிகா தம்பதிகளின் மூத்த புதல்வியான ஸ்ருதிகா சினிமாவில் நடிப்பதில் அம்மாவை விட ஆர்வமாக இருக்கிறாராம்.

இப்போது மாடலிங் உடைகளைத் தயாரித்து விற்பனை செய்துவரும் ஸ்ருதிகா சினிமாவில் நடிக்க வாய்ப்புத் தேடிச் சில தயாரிப்பாளர்களை அணுகியதாகத் தெரிவிக்கப்படுகிறது. முன்னதாக மும்பையில் வசித்த சரிகா குடும்பம் ...வாகச் சினிமாவுக்குள் நுழையும் நோக்குடன் ...து சென்னைக்கே இடம் பெயர்ந்துவிட்டது. ...து நெருக்கமானவர்களைச் சந்தித்து மகளுக்குச் ...ட்டு வருகிறார் சரிகா.

## மகளைக் களம் இறக்கும் முயற்சியில் நளினி

நளினியை ஞாபகம் இருக்கிறதா? மறந்திருந்தாலும் பரவாயில்லை. அவரது மகளை விரைவில் காணப்போகிறீர்கள். அச்சு, அசல் நளினி போல் இல்லாவிட்டாலும் சாடைமாடையாய் அப்படித்தான் இருக்கிறார். எல்லா சினிமா உலகத் தாய்க்குலங்களைப் போலவே நளினிக்கும் தனது வாரிசைக் களம் இறக்கும் ஆசை ஆசையாய் வந்துவிட்டது. தன்னை இயக்கிய இயக்குநர்களுக்கு மகள் அருணாவின் அட்டகாசமான போட்டோக்களைக் காட்டி "பொருத்தமான பாத்திரம் இருந்தால் கொடுத்துதவுங்கள்" என்று கேட்டு வருகிறார். ஆரம்ப வாய்ப்புகளைப் பெற என்ன மாதிரியான டெக்னிக்குகளைக் கையாள வேண்டும் என்று மகளுக்கு வெகுவாகவே போதித்து வைத்திருக்கிறாராம் நளினி.

## எல்லோரின் மனதையும் 'டச்' செய்யும் நாயகி!

கதாநாயகியைத் தேடுவதற்கென்றே ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேல் செலவு செய்திருக்கிறார்கள். எங்கு தேடியும் சரியான நாயகி கிடைக்காததால் சோர்ந்து போயிருந்தவர்களுக்கு வழிகாட்டியிருக்கிறது மும்பை சஞ்சிகை ஒன்று. சிம்லா சொந்த ஊர் என்பதாலோ என்னவோ சிம்லா ஆப்பிள் மாதிரி இருக்கிறார் 'டச்' நாயகி இஷிதாகோஷி!

நாயகனாக 'பகவதி' ஜெய் நடிக்க இருக்கும் இந்தப் படத்தின் தலைப்பிற்கேற்ப எல்லோருடைய மனசையும் 'டச்' செய்வதுதான் எங்களின் நோக்கம் என்கிறார் 'நிலா' படத்தை இயக்கிய டைரக்டர் பி.ஆர்.நம்பிராஜ்

## மீனாவுக்கு வந்துபோகும் வெள்ளித்திரைக் கனவு

வெள்ளித்திரையில் புகழ் பெற்று பின்னர் சின்னத்திரைக்கு வரும் நடிகைகளுக்கு மெகா சீரியலுக்காகப் பெருவாரியான சம்பளம் கிடைக்கிறது. இதனால் குஷ்பு, ரோஜா, ராதிகா என்று ஒரு பெரிய பட்டியல் அளவுக்கு டி.வி. தொடர்களில் நடிக்க வந்துவிட்டார்கள். இப்போது அந்த ஆசையில் அல்லற்படுபவர் மீனா. பல டி.வி. தொடர் தயாரிப்பாளர்கள் மீனாவுக்கு வலைவீசிக்கொண்டிருக்கிறார்கள். பல இலட்சம் சம்பளம் தருவதாகக் கூறி ஆசை காட்டுகிறார்கள். ஆனாலும் தான் இன்னும் சினிமா நடிகைதான் என்பதால் சின்னத்திரைக்குத் தாவுவது பற்றி குழப்பத்தில் இருக்கிறார் மீனா.

முகப்பில் / விக்ரம் / சிந்தூரி

## ...ன் சான்ஸ் தேடும் காயத்திரி

... தமிழ் இரசிகர்கள் சற்று ஒதுக்கிவிட்டாலும் ... அவரது அலை அமோகமாக வீசுகிறது. தமிழில் ...த்திரிக்கு அடுத்தடுத்து வாய்ப்புகள் அமையவில்லை. ... எடுத்து வைத்தவர் அங்கேயே வேர் பிடித்துவிட்டார். ...க்கு நடனம் ஆடிப் பொருள் சேர்க்கும் நடிகைகளின் ...விடக் கூடாது என்று ஆர்வமாய் இருந்த அவர், ... பாட்டுக்களில் தலை காட்டினார்.

...க்கு ஆடுவது என்றால் காயத்திரிதான் என்னுமளவுக்கு ...தான் ஒரு பாட்டுக்கு ஆடிச் சம்பாதித்தாலும் அவரது ...தாக இல்லை. தமிழில் இளம் நடிகர்கள் பலருக்கும் ...களைச் சொல்லித் தூது விட்டிருக்கிறார் காயத்திரி. ... ஏற்றுக்கொள்ள ஏனோ பலரும் தயங்குகிறார்கள். ... என்ன குறை?

## ...சிகள்! மறுத்துவிட்டார் மந்த்ரா

...த்தில் நடிக்க அட்வான்ஸ் வாங்கியிருந்தார் மந்த்ரா. ... என்றுதான் மந்த்ராவுக்குக் கூறப்பட்டது. ஆனால் ...சிகள் என்றும் அவை ஒவ்வொன்றும் ரொம்பவும் ... என்றும் இயக்குநர் சொன்னதோடு கதிகலங்கிப் ... ரெஜ்சக்குக் காட்சிகள் அமையும் என்பதால் இந்தப் ...த்தில் இறுக்கமான ரீசேட்டும் குட்டைப்பாவாடையும் ... போதுது காட்டிவிடலாம் என்று நினைத்தவர் ... சொன்னபோது நோ சொல்லிவிட்டார்.






## மரணத்தின் காலடிகள்

உன்
உயிரின்
காலம் முடிவடைவதை
நீயே
உணர வேண்டுமா?
கண்களை மூடு
செவியைத் தவிர்த்து
அனைத்தையும் பிடித்து
கட்டி வை....!
கேட்டதை கூர்மைப் படுத்து
கடிகாரத்தை எடு.....!
காதுகளில் வைத்துக் கொள்
மரணத்தின் காலடிகள்
விநாடிகளில் ஓடி
நிமிடங்களில் நடந்து
மணித்தியாலங்களில் தவழ்ந்து
நாட்களுக்குள் நின்று
துடிக்கும் கேள்...!
வாழ்தலின் அர்த்தம்
புரிவாய்....!
விநாடி நேரத்தின்
ஆழம் உணர்வாய்.....!

சண்முகம் சிவகுமார், பத்தனை.

முரசு 454ல் வெளியான
'நினைவஞ்சலி' எனும்
கவிதைக்குப் பதில் கவிதை

## எங்களையும் நினை!

என் சகோதரனுக்கு...!
முட்டாள் தினத்தில்
உன்னையும்
முட்டாளாக்கிச் சென்று
விட்டாள் அவள்!

நினைவஞ்சலி செலுத்து
பரவாயில்லை!
உன் நினைவையே
அஞ்சலியாக
செலுத்துகிறாய்
பொறுக்கவில்லை!

உன்னை நம்பி,
ஈழத்தில் நாங்கள்!
கண்ணீருடன்
வாழும் மீன்கள்!
அழுதால் வெளியில்
தெரியுமோ அதன்
சோகங்கள்!

முகம் காணா
அவளுக்காய்
உன் ஏக்கங்கள் - உன்
முகம் காண முடியாமல்
எமக்கேனோ சாபங்கள்...!

தொலைவில் இருக்கும்
உனக்கு தூது
சொல்லிடுமா?
இந்த முரசின் பக்கங்கள்...!

செல்வி. சுகுமாரன் சுபா, தலவாக்கலை.

## காத்திருப்பேன்



குயிலாக நான் இருந்தால்
உனக்காக பாடுவேன்
மயிலாக நான் இருந்தால்
உனக்காக ஆடுவேன்
கவிஞனாக நான் இருந்தால்
உன்னை கவி வடிப்பேன்
ஓவியனாக நான் இருந்தால்
உனையே படம் வரைவேன்
கண்ணகியாய் நான் இருந்தால்
கற்பின் புகழ் பரப்புவேன்
மாதவியாய் நான் இருந்தால்
காதலை புகழ் பாடுவேன்
நண்பனாய் நான் இருந்தால்
எம் நட்பை வலுப்படுத்துவேன்
ஆனால் நானோ உன் காதலி என்பதால்
உனக்காக காத்திருப்பேன்.


லஜிதா அமலசிங்கம், நவாலி.

## இதயத்தில் கல்லறை

நீங்காத உன் நினைவுகள்
என் இதயத்தில்
ஊஞ்சல் ஆடுகின்றன.
உயிரில்லா ஜடமான
என் காதலுக்கு
இதயத்தில் ஓர்
கல்லறை கட்டியிருக்கிறேன்.
முடிந்தால்
ஒரு துளி கண்ணீராவது
விட்டுப் போ
என் கல்லறையாவது
ஈரமாக இருக்கட்டும்.

அகல்யா, மண்டூர்.

## காதல் பிணம்



அந்த மெல்லிய இரவு
சிறிய மழைத் துளிகள்
கையிலே குடை
மனதிலே சுமை
தலை குனிந்தபடி நடந்தேனா
கவனிக்கவில்லை.
அப்போதுதான் அப்போதுதான்
அந்த மழையிலும்
மேகத்தை இழுத்து விலக்கி
நிலவு என்னை
எட்டிப் பார்த்தது
பார்வைகளால் என்னைக்
கட்டிப் போட்டது.
என் புலன்கள் செயலிழந்தது.
நல்லவேளை கால்கள்
வந்த பாதை மறக்கவில்லை.
அந்த மழையில் தோன்றிய
மின்னல் நீயா?
நான் நகவெட்டி தேடுவதில்லை
உன் நினைவுப் பொழுதினை
அசைபோட்டே பற்கள்
நகவெட்டிக்கு வேலை கொடுப்பதில்லை.
இரத்தம் கசியுமட்டும்
சித்தம் விறைத்திருக்கும்
ஒவ்வொரு இரவும் நிலவு காணா
வானத்தில் வெறுமையே நிறைந்திருக்கும்.
என் ஞாபகக் கடலில்
உன் நினைவலைகள் பொங்கும்.
வேயப்பட்ட கூரைமீது
காயப்போட்ட ஞாபகங்கள் தூர்க்கும்.
பாயைப் போட்டுப் படுத்தபின்னும்
கனவில் தேய்ந்து போகா உன்
தரிசனங்கள் கொல்லும்.

பிணத்தின் வேரிலிருந்தும்
எழுகிறது காதல்

பி.விக்னேஸ்வரன், ஹட்டன்.



## இருட்டுச் சிலந்திகள்

முழு நிலவே - உன்
முகம் காணா
நாட்களில் எல்லாம் - என்னால்
முழுமனிதனாய் மூச்சு விட
முடியவில்லை.

இமைப்பொழுது
அறிமுகம்தானே...
இதயங்கள் எப்படி...?
இரண்டறக் கலந்து போனது.

சிட்டுக் குருவியாய்த்தான்
சிறகடித்துப் பறந்தேன்
இமைக்காத - உன்
பார்வைபட்டு - இன்று

இருட்டுச் சிலந்தியாய்
இம்சிக்கப்படுகிறேன்.

விரகதாபத்தை - என்னுள்
விருட்சமாய் வளர்த்துவிட்ட
உன் விழிகளில் விண்மீன்களை
விதைத்துச் சென்றது யார்?

ஏன்....?
முகவுரை எழுதும் முன்பே
முடிவுரை எழுதி
முற்றுப் புள்ளி வைக்கப் பார்க்கிறாய்.

வாழ்க்கை நம்மை அழைக்கும் போது
வர மறுப்பதேன்
வசந்தம் வசப்பட்டு விடும் என்றா...?

முறிக்க முடியாத
முடிவுடன்
முரண்டு பிடித்து
முகாரி பாடியது போதும்.

கண்ணீரைத் துடைத்துவிட்டு
காயங்களை ஆறவிடு
நனைந்த இதயம்
நலம் பெற வேண்டுமானால்

விரைந்து வா.....
விடுதலைப் பறவையாய்
விமோசனம் பெறுவோம்.

எஸ்.மனோஹரன்,
ஸ்ரீபாத கல்விக் கலாசாலை.

# கவிதை எழுதுதலும் வாசித்தலும்

[பயிற்சிக் களம்]

## சிறப்புக் கவிதையும் – கவிஞரும்

### முழுமதி எம். முர்தளா

இவ்வாரச் சிறப்புக் கவிதையாக எழுத்தாளர் முழுமதி எம். முர்தளா எழுதிய கவிதையொன்று இடம்பெறுகிறது.

### வாழ்வின் வெறும் புள்ளியில்....



வாழ்வின் கூட்டுள்ளிருந்து
வலைபின்னும்
சிலந்திகளிடம் கேட்டுப்பார்....
என் வீட்டுச் சுவரில் புணரும்
பல்லிகளிடமும் நான்
தோற்றுத்தான் போனேன்.

என் உணர்வுகள் பூக்கமறந்த
நட்சத்திரப் புல் வெளியில்
பாடும் பறவைகளா
உன் நினைவுகள்?

மரணம் என் ஜன்னலின் வழியாய்
என் ஒற்றைக் காதுள் பேசியது
என் புதைகுழியின் மேல்
கவிதைகள் கருக்கட்டுமென்று

துயர உலை கொதிக்கும்
நெருப்புக் கடலிலிருந்து
வாழ்வை மீட்கும் ஆசையில்
நதிகள் ஒரு நாள் பறவையாகி
ரத்தம் கக்கி செத்தது காண்!

நெஞ்சில் ஓயாமல் படபடத்து
சிறகடிக்கும் பருந்தின் வடிவில்
என் வாசலின் பின்
வழியாகவேனும்
மரணம் என்னை நெருங்கும்....
அடர்ந்த வனத்தின் நெற்றியில்
மேயும்
சுந்தர முயலின் துள்ளலும்
மறக்கும்!

வேடனின் குறி தவறி ஓடும்
மானின்
துயரமே வாழ்வு எனின்
வாழ்வின் வெறும் புள்ளியில்
தொடும் தூரத்தில் நீயும்
நானும்
அதுவரை தொடரட்டும் -
ஜீவ மரணப் போராட்டம்.

## வெற்றி

இருண்டு கிடந்த குப்பை கூட்டி
உருண்டு சென்றது காலம்.
வரட்சி வந்து வருத்த
புரட்சி தேடியது பூபாளம்.

நீல வானம் நோக்கி
நிலத்தில் வரைந்த கோலங்கள்
காலக் கால்களால்
கலைக்கப்பட -
மாவும் தேடியது அஞ்ஞாத வாசம்!
அன்று -
விரல் விரிக்க ஆசைப்பட்ட கரங்களோடு
வீரம் விரோதம் கொண்டதால்
குரல்கள் குறுக்கம் கொண்டன.
ஆனால்
விழுதுகளைப் பற்றும் அவசரத்தில்
உழுது வேர்களை வெளிவிட
நிலம் ஒருபோதும் நினைப்பதில்லை.
ஒரு நாள் அல்லது ஒரு நாள்
பார்வைகளில் படிந்த பரிதாபம்
பிடிப்பிழக்க
வியர்வையின் ஈரத்தில் ஒட்டப்படும்
வெற்றியின் முத்திரை.

ந.சத்தியவேந்தன், யாழ்.
பல்கலைக்கழகம்.

## குறுக்கீடு

குறுக்கெழுத்துப் புதிராய்
அர்த்தமற்ற
வெள்ளை கறுப்புச்
சதுரங்களாய்
மாறிவிட்டது வாழ்வு!

இடமிருந்து வலமாக
நானும்....
மேலிருந்து கீழாக
நீயும்...
ஒருவரையொருவர்
பார்த்தபடி வாழ்ந்தாலும்
நாம் - இன்னும்
காதலிக்கவில்லை!

விளங்காத புதிருக்கு.....
தெரியாத பதில்களால்.....
நாம் ஒருவரையொருவர்
அறிமுகம் -
செய்துகொள்ளவில்லை!

மௌனத்தால்
ஒவ்வொரு கட்டத்தையும்
தாண்டிவிட்டோம்!
இன்னும் -
குறுக்கெழுத்துப் போட்டி
முடியவில்லை!.....
நீயும்....
நானும்...

ஏ.விஷ்னிநாதன், இராஜகிரிய.

## பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி — பேனா நண்பர் பகுதி —



பெயர்: ச. கமல்ராஜ்
வயது: 17
முகவரி: கோயில் வீதி, பனிச்சங்கேணி.
பொழுது போக்கு: வழமையானவை



பெயர்: ஏ.எல். கலீல்
வயது: 25
முகவரி: P.O. BOX-1420 DOHA- QATAR.
பொழுது போக்கு: தினமுரசு, கிரிக்கெட்.



பெயர்: எம்.எச். றஹீம்
வயது: 23
முகவரி: P.O. BOX-2666 AL. SAKAB.P.STATION, DOHA- QATAR.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.



பெயர்: ரி. கோகுலன்
வயது: 21
முகவரி: முருகன் கோயில் வீதி, பேத்தாழை, வாழைச்சேனை
பொழுது போக்கு: கிரிக்கெட், ரி.வி.


# லேடீஸ் ஸ்பெஷல்

## பெண்கள் அணியும் ஆபரணத்திலும் சில மகிமை உண்டு

**பெ**ண்களுக்கு மிகப் பிரிய மானவை சில....

அவை : பூ, பொட்டு, மூக்குத்தி, கண் மை, தாலி, வளையல்கள், கொலுசு, மிஞ்சி, மோதிரம்.

மேலே சொன்னவைகளில் அழகு மட்டுமின்றி, சில அபூர்வ மகிமை களும் உள்ளன.



### பூக்கள்

வாசனையுள்ள மலர்கள் வாச னைத் திரவியங்களுக்கு நிகரா னவை. பூக்கள் அழகையும், வாச னையையும் தருவதோடு நின்றுவிடா மல் தலையில் ஏற்படும் சில நோய் களுக்கு மருந்தாகவும் இருக்கிறது. சாமந்தி போன்ற கனமான பூக்களைத் தலையில் வைக்காது தவிர்க்க வேண்டும். பிச்சி, முல்லை, ரோஜா போன்ற மலர்கள் நல்லது. கடவுள் நம்பிக்கை உடையவர்கள் சிறிதளவு பூவை கடவுளுக்குச் சமர்ப்பித்து விட்டு பின்பு தலையில் பூச்சூடலாம்.

### பொட்டு

நெற்றியில் திலகமிடுவது மூலம் சில வகை தோஷங்கள் நீங்குவதா கச் சொல்கிறார்கள். சுமங்கலிகள் நெற்றியில் குங்குமமிடுவதோடு நேர் வகிட்டிலும் குங்குமம் வைக்க வேண் டும். தலையெழுத்தை மாற்றும் சக் தியே குங்குமத்துக்கு உண்டு என்று நம்புகின்றார்கள். சிறுமிகளுக்கு ஸ்டிக்கர், சாந்துப்பொட்டு வைக்க லாம்.

### மூக்குத்தி

தங்க மூக்குத்தி அணிந்தால், சுவாசிக்கும்போது காற்று தங்கத் தைத் தழுவிக் கொண்டு உடலுக்குள் வருகிறது. அதனால் சுவாச நோய் தடுக்கப்படும் என்கிறார்கள். மூக்குத்தி அணிபவர்கள் பத்து முதல் இருபது வயதுக்குள் மூக்கு குத்திக் கொள்ள வேண்டும்.

### கண் மை

கண்ணுக்கு அழகை கண் மை தருகிறது. கூடவே கண்ணுக்குக் குளிர்ச்சியைத் தந்து, கண் பார்வை சக்தியை அதிகப்படுத்துகிறது.

### தாலி

முகூர்த்தத்தின்போது தாலி கட்டப் படுகிறது. மஞ்சள் கயிற்றில் இணைக் கப்படுவதே தாலிச் சரடு ஆகும். சரடு மஞ்சள் நிறமாக இருக்க வேண்டும். மஞ்சள் நிறத்தைத் தெய் வீக நிறமாகக் குறிப்பிடுவார்கள். மஞ்சளுக்கு நோய்த் தடுப்பு சக்தியும் உண்டு.

### வளையல்

திருமணமான பெண்கள் வளை யல் அணிவதற்கும், இளம் பெண்கள் வளையல் அணிவதற்கும் வேறுபாடு கள் உள்ளன. திருமணமான பெண் கள் கணவனையே வளைய வளைய வர வளையல் நினைவுபடுத்தும். கடும் நிறத்திலுள்ள வளையல்கள் தோஷ பரிகாரம் கொண்டவை. சனி திசை பாதிப்பை தரும்போது பெண் கள் நீல நிற வளையல் அணிந்தால், தோஷத்தின் கடுமை குறையும்.

### மிஞ்சி

திருமணமான பெண்கள் மிஞ்சி அணிவார்கள். அதை காலின் இரண் டாவது விரலில் மட்டுமே அணிய வேண்டும். இரண்டாவது விரலில் மிஞ்சி அணிவதால் கர்ப்பப்பை பல மடையும் என்கிறார்கள்.

### மோதிரம்

மோதிரத்தை பெண்கள் வலது கையில் அணிய வேண்டும். சாப்பிடும் போது தங்கச் சத்து உடலுக்குள் செல்லுமாம், ஆகவே பாத்திரங்கள் கழுவும்போதும் அழுக்கு பதியும் வேலைகளில் ஈடுபடும்போதும் பெண் கள் மோதிரத்தை அணியக் கூடாது.

## சிறுநீரகங்களைப் பாதுகாக்கும் காசினிக் கீரை

சென்றவாரத் தொடர்ச்சி....

**ம**னிதனின் கீழ் முதுகுப் பக்கத் தின் பின்புற வயிற்றுச் சுவரில் 12-வது மார்பு உள் எலும்பு 1-2-வது கீழ் முதுகு எலும்பின் பக்கத்தில் ஒரு ஜோடியாக சிறுநீரகங்கள் அமைந்துள்ளன. இது மொச்சை வடிவத்தில் இருக்கும். ஒவ்வொரு சிறுநீரகமும் 10 செ.மீ முதல் 12 செ.மீ நீளமாகவும் 5 செ.மீ முதல் 6 செ.மீ அகலமாகவும், 4 செ.மீ கன மாகவும் இருக்கும். பொதுவாக ஒரு சிறுநீரகம் 120 முதல் 200 கிராம் வரை எடை கொண்டதாக இருக்கும். இடது சிறுநீரகம் வலது சிறுநீரகத்தை விட சிறிதளவு நீளமாகவும், கன மாகவும் இருக்கும். வலது சிறுநீரகத் தின் 2/3 பாகம் கல்லீரலுடன் தொடர்பு கொண்டதாக இருக்கும். இதனால்தான் சிறுநீரகம் பாதிக்கப் படும்போது கல்லீரலும் பாதிக்கப் படுகிறது. மஞ்சள் காமாலையும் உண்டாகிறது.

இடது சிறுநீரகத்தில் 2/3 பாகம் வயிற்றுடன் தொடர்பு கொண்டிருக் கிறது. இதனால்தான் சிறுநீரக நோய் கொண்டவர்களுக்கு பசியின்மை, ஜீரணக் கோளாறுகளும் இருக்கும். இடது சிறுநீரகத்தின் மேல் பாகம் வயிறு, மண்ணீரல் ஜிஜுனம், பெரிடோனியல் உறுப்புகளுடன் தொடர்பு கொண்டிருக்கிறது. மின் மோட்டார்களில் மெல்லிய செம்புக் கம்பியினால் காயல் கட்டி இருப்பதைப் போல் இறைவன் சிறுநீரகத்தை ஆயி ரக் கணக்கான மெல்லிய குழாயி னால் காயல் கம்பிகளைப் போல் சுற்றி படைத்திருக்கிறான். ஒவ்வொரு இரத்தக் குழாய் மீதும் மெல்லிய மேலுறை இருக்கும். அது இரத்தக் குழாய்களின் சுவர்கள் கழிக்கும் கழிவுப் பொருட்களை வெளியேற்று கிறது.

சிறுநீரகங்களில் இரத்தக் குழாய் கள், சிறிய கால்வாய்கள், அணைக் கட்டு, பெரிய கால்வாய்கள், நதிகள் என்று பல வடிவில் விரிந்து கிடக் கின்றன.

ஒவ்வொரு சிறுநீரகத்திற்கும் ஒரு சிறுநீர் குழாய் இணைக்கப்பட் டுள்ளது. கழிவுப் பொருட்கள் அனைத்தும் சிறுநீர்ப்பையில் கூடும். இரண்டு சிறுநீரகங்களிலும் வடிக்கப் பட்ட கழிவுப் பொருட்கள் சிறுநீர்ப்பை குழாயின் வழியாக உடலிலிருந்து வெளியேறுகிறது.

சிறுநீரகங்கள் பொதுவாக நம் உடலுக்கு வேலைக்காரியாகச் செயற்படுகிறது.

பொதுவாக வலி நிவாரணி மாத் திரைகள், ஆண்டிபயாட்டிக் மாத்தி ரைகள் சாப்பிடுவதால் சிறுநீரகங்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றன. மெல்ல மெல்ல அதன் செயற்திறன் குறைந்து நம் உடலில் உருவாகும் கழிவுப் பொருட்களை வெளியேற்ற முடியாமல் கஷ்டப்படும். இதைத்தான் கிட்னி ஃபெயிலியர் நோய் என்று கூறுவார்கள்.

பழுதடைந்த சிறுநீரகங்களைப் பராமரிக்கவும், அதற்குச் சக்தி தரவும் காசினிக் கீரை சிறந்த உணவாகவும், மருந்தாகவும் அமைந்துள்ளது. இதை சாதாரண கீரையாகவே சமைத்துச் சாப்பிடலாம். காசினிக் கீரை பவுடர் வடிவிலும் கிடைக்கின் றது. இதை ஒரு தேக்கரண்டி அள வில் எடுத்து ஒரு டம்ளர் தண்ணீரில் கலந்து காய்ச்சி வடிகட்டி சீனி கலந்து குடிக்கலாம்.

## வேலைக்காரரிடம் நீங்கள் அக்கறையா....?

**பெ**ரும்பாலான வீடுகளில் வீட்டு வேலைக்கு ஆள் வைத்திருப்பார் கள். ஆனால் வேலைக்காரர்களின் செயற்பாட்டில் திருப்தியின்றி முணு முணுப்பார்கள். நான்கு வீட்டுக்காரர் கள் சேர்ந்து, வேலைக்காரியைக் குறை சொல்லிக்கொண்டிருக்க, வேலைக்காரியோ தனது முதலாளி யம்மா சரியில்லை, தன்னை நன் றாகச் கவனித்துக்கொள்வதில்லை என்று புகார் சொல்வார். இப்படி இரண்டு பக்கமும் குறை சொல்லும் வண்ணமாகவே இருந்து வருகிறார் கள்.

இந்தக் குறைகளைப் போக்கு வது எப்படி?

வேலைக்காரர்களைத் தங்கள் குடும்பத்தில் உள்ள ஒருவரைப் போலவே நடத்த வேண்டும்.

சாப்பிட வழியில்லாமல் அடுத்த வீட்டுக்குப் பாத்திரம் தேய்க்க வரு கிறவர்களை எச்சில் பாத்திரம் தேய்க்க வரும் பெண் என்ற கண் ணோட்டத்தில் மட்டும் பார்க்கக் கூடாது.

எல்லா வேலைகளையும் வேலைக்காரர்கள் தலையில் கட்டி விட்டு, காலுக்கு மேல் கால் போட்டுக் கொண்டு இராமல், முடிந்த அளவு வேலையை வீட்டுக்காரர்களும் செய்யலாம்.

வீட்டுக்கு அதிகமான அளவு விருந்தினர்கள் வந்து தங்கும்போது, வேலைக்காரர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். அதை ஈடுகட்டும் விதத்தில் வேலைக்காரர்களுக்குச் சம்பளம் வழங்குங்கள்.

வேலை பார்ப்பவர்களுக்குத் துக் கமும்,கஷ்டமும் ஏற்படும்போது ஆத ரவு கொடுத்து ஆறுதல்படுத்துங்கள்.

வேலைக்காரர்களுக்கு அடிக்கடி துணிகளை வழங்குதல், பெண்கள் என்றால் வளையல், அலங்காரப் பொருட்கள் வாங்கிக் கொடுத்தல் போன்ற நல்ல பழக்கங்கள் வேலை வாங்குபவர்களிடம் இருக்க வேண் டும்.

வீட்டில் உள்ளவர்களுக்கு உயர்ந்த வகை உணவு, வேலை பார்ப்பவர்களுக் குச் செலவு குறைந்த உணவு என்று வேறுபாடு காட்ட வேண்டாம்.

வீட்டில் நடக்கும் சந்தோசமான நிகழ்ச்சிகளில் வேலைக்காரர்களை யும் சந்தோசமாக ஈடுபடவையுங்கள்.

வேலைக்காரர்களின் தொழில் திறமையை அங்கீகரிக்க ஒரு போதும் தயக்கம் காட்ட வேண்டாம்.

குழந்தைகள் வேலைக்காரர் களிடம் அவமரியாதையாகப் பழகு வதை ஊக்குவிக்கக் கூடாது.

பெரியவர்கள் மதிப்பளித்துப் பழகினால் குழந்தைகளும் அதைப் பார்த்து மதிப்பளிப்பார்கள்.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது* -யசோ-

### கரட் பானம்

கரட் சக்தி நிறைந்தது. அதனை உணவில் அதிகமாக சேர்த்தால் உடலுக்குப் பலமும், பார்வையில் தெளிவும் ஏற்படும்.

**தேவையான பொருட்கள்:–**

- கரட் - 1 கிலோ
- எலுமிச்சை பழச்சாறு - 1 அவுன்ஸ்
- தண்ணீர் - 1 லீட்டர்
- ஈஸ்ட் - 2 தேக்கரண்டி
- சீனி - 1 கிலோ

**செய்முறை:–**

கரட்டைக் கழுவி, நறுக்கி, ஒரு லீட்டர் தண்ணீரில் வேக வைக்கவும். பின்பு அதனை ஆற வைத்து, கரட்டைப் பிழிந்து எடுத்து விட்டு, சாறை வடிகட்டி எடுக்கவும்.

கரட் சாறில் சீனி, எலுமிச்சம் பழச்சாறைச் சேர்த்துக் கலக்கவும்.

இலேசான வெந்நீரில் ஈஸ்ட் டைக் கலக்கி வைக்கவும். அது பொங்கி வந்ததும் அதையும் கரட் சாறில் சேர்த்து நன்றாக மூடி வைத்து விடவும்.

பத்து நாட்கள் தினமும் காலை யில் அதனை நன்றாகக் கிளறி வைக்கவும்.

பின்பு அதனை நன்றாக வடி கட்டி, போத்தல்களில் ஊற்றி பிரிஜ் ஜில் குளிர வைத்து உபயோகிக் கவும்.


செல்வாஸின்

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார் Bz

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

தொழில்:.............................

உண்மை– நேர்மை –வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படு கிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிர சுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 12- 07-2003

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.



**இந்த வாரம் யாருக்கு சல்வார்?**
**முள்ளிவளை வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

கே. கிருபாலினி
2ம் வட்டாரம், முள்ளியவளை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## அங்கம் 03

குமார் தன் விசிட்டிங் கார்டை எடுத்துக் கொடுக்க, அப்பா அதை ஆர்வத்துடன் பார்க்க, "என்ன பார்க்கிறீர்கள்? ஆண்டிப்பட்டி என்பது எங்கள் பூர்வீக ஊர். அமெரிக்காவில் வெறும் குமார் சரிப்பட்டு வராது. ஸர்நேம் வேண்டும். அதனால்தான் குமார் ஆண்டிப்பட்டி."

தனக்கு வருஷத்துக்கு ஏறத்தாழ நூறாயிரம் டாலர் கிடைப்பதாகவும் வைய்யோமிங், ஸான் ஹோவே, கிளியர்வாட்டா போன்ற மாப்பில் கூடப் பார்த்திரா இடங்களை எல்லாம் சொன்னான்.

"உங்களுக்குத் தமிழ் தெரியுமா?" என்றார் அப்பா. "தாராளமா. என்ன, பேஷி ப்ராக்டிக்ஸ் இல்லையா, அத்னாலதான். சின்ன வயசில ஆர்கே மிஷன் ஸ்கூல்ல




பாரதியார் எல்லாம் பாடி ப்ரைஸ் வாங்கி இருக்கேன். க்ரேட் பொயட் பாரதி..... ஈமெய்ல் சர்க்யூட்ல பாரதியைப் பற்றி யுஎஸ் பூரா ஒரு செமினார் வெச்சோம். வாட் திஸ் கண்ட்ரி நீட்ஸ் இஸ் அனதர் பாரதி!"

திடீர் என்று என்னைப் பார்த்து, "உனக்கு பொயட்ரில இண்ட்ரஸ்ட் உண்டா?"

"உண்டு" என்றேன்.

"அமெரிக்கன் பொயட்ஸ் யாரும் படிச்சிருக்கிறயா?"

"படிச்சிருக்கேன்."

"யார் பிடிக்கும்?"

"வாலஸ் ஸ்டீவன்ஸ்."

"வாவ்! தட்ஸ் க்ரேட்! லெட் மி ஸீ. நீ ப்ள.ஃ.ப் பண்றியான்னு . வாலஸ் ஸ்டீவன்ஸ் என்ன படிச்சிருக்க, சொல்லு....? ஏதாவது சொல்லு, ஞாபகம் இருந்தா" என்றான்.

"Thirteen Ways Of looking at a Blackbird"

"தட்ஸ் அமேஸிங்" அப்பாவைப் பார்த்து,

"ஸார், இப்ப சொல்லுங்க நான் என் இட்டினரரியைக் கான்ஸல் பண்ணிட்டு உங்க டாட்டரைக் கல்யாணம் பண்ணிக்கிறேன். மை மை! ஷி இஸ்க்ரேட்!"

அப்பா என்னைப் பார்த்து, "என்னம்மா ஓகேதானா? அமெரிக்கா போறயா?" என்று சொல்லிச் சிரித்துவிட்டு, "குமார், உங்க பேரண்ட்ஸ் கூடவும் பேசிட்டு டிஸைட் பண்ணலாம்" என்றார்.

குமாருக்கு ஒரு மாதிரி ஏமாற்றமாக இருந்தது. அவனைப் பார்க்க எனக்குப் பாவமாக இருந்தது. ஏன் என்று தெரியவில்லை.

அவன் பனியனில் 'யுஎஸ்ஏ' என்று பெரிசாக எழுதியிருந்தது.

அப்பா வீட்டுக்குப் போனதும், "இந்தப் பையன் வேண்டாம்" என்றார்.

அம்மாவுக்கு ரொம்பக் கோபம் வந்தது.

"அரை டிராயர் போட்டு கால்ல மொச மொசன்னு மயிரைக் காண்பித்துக்கொண்டு காதில வாக்மேனை மாட்டிண்டு இருக்கிறான். அவனுக்குப் போய் என் மகளைக் கொடுக்க விருப்பமில்லை" என்றார்.

"என்ன சொல்றீங்க, அமெரிக்கால இப்ப எல்லாரும் அப்படித்தான் இருப்பா. என்னடி ரேகா, நீ சொல்லு, உனக்கு இஷ்டமில்லையா?" என்றாள் அம்மா.

"நான் என்ன சொல்ல அம்மா. நீங்க ரெண்டு பேரும் தீர்மானிச்சுச் சொல்லுங்கோ."

"இப்படி ஒரு பொண்ணு இருப்பாளோ?" என்றாள்.

"அவளுக்கு நல்லது பண்றதா நெனச்சுண்டு....."என்று ஆரம்பித்தவரை,

"உங்களுக்கு உங்க பொண்ணு அமெரிக்கா போறதில இஷ்டமில்லை. அதைச் சொல்லிவிடுங்களேன். பின்ன ஏன் இந்தப் பையனைக் கூப்பிட்டு காட்டணுமாம்?"

"எனக்கு எப்படித் தெரியும், அவன் இந்த மாதிரி பொம்மை பனியனும் மினரல் வாட்டருமா



எழுதுவது - சுஜாதா

வருவான் என்று? ஆமாம், அவ அமெரிக்கா போறதில இஷ்டமில்லை. ரொம்ப ஃபோனி ஆசாமி அவன்!"

"போனின்னா என்ன?"

"குதிரை" என்றாள் ஜெயந்தி

நாங்கள் எல்லோரும் சிரித்துவிட்டோம்.

அப்பா என் தலையைத் தடவிக் கொடுத்து

"ரேகா! பாரு, நான்.... கொஞ்சம் பொறுமையா இருந்தா....."

"எனக்கு ஏதும் அவசரம் இல்லையப்பா" என்றேன்.

அன்றைக்கு அம்மா ராத்திரி சாப்பிடவில்லை.

மூன்றாவதாக சேஷாத்திரி என்கிற நண்பர் சொன்னார் என்று டில்லியிலேயே லோக்கலாக ஒரு பையன் வந்து என்னைப் பார்க்க ஏற்பாடு பண்ணியிருந்தார்கள். பையனுக்கு அப்பா அம்மா இல்லையென்றும், அக்காதான் எல்லாம் என்றும் தெரியவந்தது. அந்த அக்காவும் கணவரும் வந்திருந்தார்கள். பையன் தனி ஆட்டோவில் வந்தான். அவன் பெயர் கிருஷ்ணப்ரேமி.

என்னை "நீங்க, வாங்க" என்று மரியாதையாகப் பேசினான். இயற்கை வைத்தியம், யோகாசனம் முறைகள் பற்றியெல்லாம் அப்பாவுடன் பேசிவிட்டு என்னை வராந்தாவில் தனியாக அழைத்து, "உங்களது கழுத்தில் ஒரு மறு போல கறுப்பாக இருக்கிறதே, அது பிறவியிலிருந்தே இருக்கிறதா" என்று கேட்டான்.

"அப்படித்தான் ஞாபகம்" என்றேன்.

உங்களுக்கு மூக்குக்குப் பக்கத்தில் உண்ணி போல இருக்கிறதே அது? என்று கேட்கவில்லை நான். ஆனால் அதைப் பார்த்தேன்.

"தப்பா நினைச்சுக்காதீங்க. இயற்கை வைத்தியத்தில் இதுக்கு ஒரு மருந்து இருக்கிறது. யோகாவில் எக்ஸர்ஸைஸ் இருக்கு. எனக்கு இருக்கு பாருங்க" என்று நான் போன பாராவில் குறிப்பிட்ட உண்ணியைக் காட்டி, "இது வந்து ஒரு ரூபா சைஸ் இருந்தது. இத்தனூண்டு ஆகிவிட்டது. பாருங்க, எல்லாம் யோகா எக்ஸர்ஸைஸ்."

நான் மையமாகச் சிரித்தேன்.

"இ.ஃ.ப் யு டோண்ட் மெண்ட் கொஞ்சம் ஆ காட்டுங்க?"

"ஆ."

"குட்! உங்க கம்ஸ் எல்லாம் ஹெல்தியாக இருக்கு! பல் தேய்க்கறப்ப ஈறுகளையும் தேய்க்கணும் தெரியுமா? ஈறு, நாக்கு, மேல் அண்ணம்."

நான் நாக்கை நீட்டினேன்.

"உங்களுக்கு என்ன பிடிக்கும்?"

"புஸ்தகம் படிப்பேன்."

"நானும் படிப்பேன். ஆனா கீதை மட்டும்தான் படிப்பேன். அதுவும் பதினெட்டாவது சாப்ட்டர் தலைகீழ்ப் பாடம். எல்லாச் செயலுக்கும் மனம், கர்மா, கர்த்தான்னு மூணு உண்டு. இப்ப நான் உங்களை வந்து பார்க்கிறதுகூட ஒரு செயல்தான். இதில கர்மா யாரு? கர்த்தா யாரு?" என்று கேட்டான்.

நான் சிரித்து மழுப்பினேன். "நான் கீதை படிச்சதில்லை."

"கீதை படிக்க வேண்டாம். காமன்சென்ஸ் கொஸ்சன்!"

"ஸாரி எனக்க ஆன்ஸர் தெரியல" என்றேன்.

அவர்கள் வீட்டுக்குப் போனதுமே போன் செய்தார்கள்.

"ரொம்ப தங்கமான பொண்ணு. எங்காத்து கிருஷ்ணப்ரேமிக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. சரின்னுட்டான்" என்றார்கள்.

அப்பா என்னைக் கேட்டபோது, "அப்பா, இந்தாளைக் கல்யாணம் செய்துண்டா காலைல அறுகம்புல் ஜூஸ் குடிச்சிட்டுக் காவி வஸ்திரம் உடுத்திக்கணும் போல பயமா இருக்குப்பா. பயங்கர பிலாசபி இந்த வயசுக்கு" என்றேன்.

அப்பா சிரித்தார்.

(வண்ணத்துப்பூச்சி சிறகடிக்கும்...)

## கனடாவில் வெகுவாக அதிகரிக்கும்




## 'ஓரினத் தம்பதிகளின்' திருமணம்

இதைத்தான் நாகரிகம் என்று கூறுவதென்றால் அப்படியொரு நாகரிகம் எங்களுக்கு வேண்டாம் என்று கூறுகிறார் பிலிப். மரபுவாதியான பிலிப் ஓரினச் சேர்க்கையாளர்களின் திருமணங்களைக் கடுமையாக எதிர்ப்பவர். கனடா நீதிமன்றம் ஒன்று கடந்த வாரம் வழங்கிய அதிரடித் தீர்ப்பை அடுத்து அங்கே ஒரே பாலினத்தவரின் திருமணம் வெகுவாக அதிகரித்திருக்கிறது.

இத்தகைய திருமணங்களுக்கு இதுவரை காலமும் அமெரிக்காவிலும் கனடாவிலும் சட்டரீதியான தடை இருந்து வந்தது. ஆனால் சேர்ந்து வாழும் 'தம்பதிகளை' அரசாங்கம் கண்டுகொள்வதில்லை. இந் நிலையில் இவ்வாறான திருமணங்களைப் பதிவு செய்யுமாறு கனேடிய நீதிமன்றம் ஒன்று அந்நாட்டு பதிவாளருக்குக் கடந்த வாரம் உத்தரவிட்டது. இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்யப்போவதில்லை எனக் கனேடிய அரசு அறிவித்ததன் மூலம் தமது அங்கீகாரத்தை வழங்கியிருக்கிறது. இந்தத் தீர்ப்பு வெளியானதோடு ஓரினத் தம்பதிகளின் திருமணம் அங்கே வேகமாக அதிகரித்துள்ளது. பொதுவாக பதிவாளர் அலுவலகம் மூடப்படும் ஞாயிற்றுக்கிழமையில் கூட திருமணம் செய்துகொள்ள விண்ணப்பங்கள் வருவதாக அதிகாரிகள் கூறுகின்றனர். இளைய தலைமுறையினர்தான் இந்தக் கன்றாவிகளில் சிக்குகிறார்கள் என்றில்லை. கடந்த [illegible] ரொறன்ரோவில் மைக்கல் கே[illegible] என்ற 65 வயது நபரும் தியோ [illegible] என்ற 53 வயது மனிதரும் இப்படியாகத் திருமணம் செய்துகொண்டார்கள். நீண்ட காலமாக ஒன்றாக வாழும் இத்தகைய ஓரினச் சேர்க்கைப் பிரியர்கள் திருமணத்திற்கு ஆர்வம் காட்டுவதாக ரொறன்ரோ சட்டத்தரணி ஒருவர் கூறுகிறார்.

அமெரிக்காவின் பல மாநிலங்களில் இவ்வாறான திருமணங்களுக்குச் சட்டத்தில் இடமில்லை. இதனால் இந்த வாரம் மட்டும் 25 அமெரிக்க ஜோடிகள் கனடாவில் திருமணம் செய்துகொள்ள விண்ணப்பித்திருக்கிறார்கள். இஸ்ரேல், மேற்கிந்திய தீவுகள் உட்படப் பல நாடுகளிலிருந்து திருமணம் செய்துகொள்ள விண்ணப்பங்கள் கிடைத்து வருவதாகக் கனடிய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அவற்றைத் தாங்கள் கவனமாகப் பரிசீலித்துத் தீர்ப்புச் சொல்லப் போவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் அமெரிக்காவின் சில மாநிலங்களில் ஒற்றைப் பாலினப் திருமணத்திற்கு இருந்த தடையை அந்த நாட்டு நீதிமன்றம் ஒன்று கடந்த வாரம் தள்ளுபடி செய்ததாகப் புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன. மத்திய வட அமெரிக்க நாடுகளில் இந்த நாட்களில் இவ்வாறான திருமணங்கள் குறித்த மிகப் பரவலான விவாதங்கள் நடந்து வருகின்றன. 'நியூஸ் வீக்' சஞ்சிகை அதன் புதிய பதிப்பில் "அடுத்து ஓரினத் திருமணம்" என்ற தலைப்பில் அட்டைப் படத்துடன் பிரதான கட்டுரை வரைந்திருக்கிறது.

நீதிமன்றத் தீர்ப்புகளை அடுத்து இளசுகள் இப்படியான திரு



மணத்தில் ஆர்வம் காட்டுவது மேற்கு நாட்டு மதவாதிகளுக்குக் கிடைத்த தோல்வி எனப் பத்திரிகைகள் எழுதியுள்ளன. வழக்கத்தில் உள்ள பெரும்பாலான சமயங்கள் ஓரினச் சேர்க்கையைக் கடுமையாகக் கண்டிக்கின்றன. குறிப்பாக மேலை நாடுகளில், இத்தகைய திருமணங்கள் நடக்கும் கிறிஸ்தவ நாடுகளில் மதம் என்ற அடிப்படையில் இது பெரும் குற்றமாகக் கருதப்படுகிறது. ஆனாலும் சட்டம் இதற்கு வேறு விதமான விளக்கத்தைக் கொடுத்துள்ளது. வயது வந்த இருவரின் தனிப்பட்ட விருப்பின் பேரில் இணைந்து வாழ்வதைத் தடுக்கும் உரிமை எவருக்கும் கிடையாது என நீதிமன்றத் தீர்ப்புகள் வியாக்கியானம் செய்கின்றன. அவ்வாறு இணைந்து வாழ்வதற்கு மறுப்புத் தெரிவிப்பது குறிப்பிட்ட நபர்களின் அடிப்படை உரிமையையும் தங்கள் நாட்டின் அரசியல் அமைப்பு சாசனத்தையும் மீறும் செயல் எனக் கனடாவில் சமீபத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பில் கூறப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு இலங்கைப் பெண்கள் இருவர் திருமணம் செய்துகொண்டு ஒன்றாக வாழ்வதற்கு அனுமதி கோரி கொழும்பு நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மனு ஒன்று மரபுக்கு மாற்றமான செயல் எனக் கூறி நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

# என்று தணியும்?



ஜெயமலர் - கனடா

மாலை வெயில் சூட்டைத் தணித்துக்கொண்டு மஞ்சளாக மாறிய பொழுது, காற்றும் மிதமாக உடம்புக்கு இதமாக வீசிக்கொண்டு இருந்தது. இன்றாவது தனது நீண்ட கால ஆசை தீராதா? என்று தாள்கள் நிறைந்த கோவையுடனும் பேனாவுடனும் வீட்டின் பிற்பகுதியில் அமைக்கப்பட்ட சாய்ப்பின் கீழ் போடப்பட்டிருந்த கதிரையில் அமர்ந்தாள் இந்திரா.

இந்திரா என்று பெற்றவர்கள் பெயரிட்டதினாலோ என்னவோ புகழ் பெற்றவளாக வேண்டும், தாயினும் மேலான தமிழுக்குத் தன்னை அர்ப்பணிக்க வேண்டும் என்பது அவளின் நீண்ட நாளைய ஆசை, வெறி எல்லாமே. இன்று அறுபதுகளில் பள்ளி ஆசிரியையாக இருந்து ஓய்வு பெற்ற பின்பும் கூடத் தனது கனவு கைகூடவில்லை என்பதில் பெரிதும் தனக்குள் வேதனைப்பட்டுக்கொள்வாள் இந்திரா.

வாழ்க்கையில் மற்றப்படி எதுவித குறையும் இல்லாதவள்தான் அவள். கண்ணில் நிறைந்திருந்த கணவன், கண்ணின் மணியாக இரு பிள்ளைகள், மூன்று பேரப்பிள்ளைகள் என இருந்தும், இந்திரா இளமைக் காலத்தில் தான் ஏங்கியது போல் ஒளிரவில்லை என்று ஒரு குறை அவளின் மனதில் இருந்தது.

பள்ளிக் காலத்தில் கதை, கவிதை எழுத வேண்டும் என்று தோன்றிய உணர்வலைகளினால் உந்தப்பட்டு முதன் முதலில் ஒரு கவிதை எழுதி, அதுவும் அவள் வீட்டில் அம்மா வளர்த்த மாடு போட்ட சின்னச் சிறிய கன்றைப் பார்த்து எழுதி, தமிழ் ஆசிரியரிடம் காட்டியபோது 'இது வசன கவிதையாக இருக்கின்றது. இன்னும் முயற்சி செய்து எழுதினால் நன்றாக எழுதலாம்' என்றார். விட்டேனா பார்? என்று மேலும் நிறைய நேரத்தை எழுத ஒதுக்கினாள். வீட்டில் "படிக்கிறேன் போவழி" என்று அறையைப் பூட்டிக்கொண்டு கவிதை, கதை எழுதுவதைத் தொடர்ந்தாள். எழுதிய கதை, கவிதைகளை நண்பர்களுக்குக் காட்டுவதோடு சரி. பத்திரிகைக்கு அனுப்பியது கிடையாது. அனுப்பப் பணம் தேவைப்பட்டது. வீட்டில் சொன்னால் அப்பா, அம்மா எப்படி எடுத்துக்கொள்வார்களோ என்று தயக்கமாக இருந்தது. பேசாமல் இருந்துவிட்டாள்.

வீட்டில் தெரிந்தபோது அம்மா எதிரணியில் நின்றாள். "படிப்பை விட்டுவிட்டு என்ன கதையும் கவிதையும் வேண்டி இருக்கிறது" என்று போர்க்கொடி தூக்கினாள். அம்மாவுக்குத் தெரியாமல் இடையிடையே கவிதைகள் சில எழுதினாள். திருட்டுத்தனமாக எழுதுவதில் கூட ஒரு சுகம் இருந்தது. அப்பாவின் காதுக்கு விசயம் போனபோது இந்திரா சற்றும் எதிர்பார்க்காத வகையில் அவளைப் பாராட்டினார். "எழுத்து ஒரு கலையம்மா. அது எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. நான் கூட எழுத வேண்டும் என்று நினைத்தேன். ஆனால் என்றுமே எழுதியது இல்லை. நீ நன்றாக எழுது. ஆனால் படிப்பையும் விட்டுவிடாதே" என்றார். இந்திராவிற்குத் தந்தையின் வார்த்தைகள் உற்சாகத்தை ஏற்படுத்தின.

இக் காலகட்டத்தில் இந்திரா உயர்தர வகுப்பை அடைந்தாள். தனக்கு ஆதரவாக, தனது உணர்வுகளைப் புரிந்துகொண்ட தந்தையின் ஆசையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று படிப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்தினாள்.

உயர்தர வகுப்பை முடித்தபோது பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானாள். இப்படியே கால ஓட்டத்தில் ஓடிக்கொண்டிருந்த இந்திராவிற்குப் பள்ளிக் காலங்களில் எழுதிய கதை, கவிதைகளை வாசித்தபோது குழந்தைத்தனமான எழுத்தோட்டங்களாக இருப்பதாகப் பட்டது. திருத்தி எழுதிப் பத்திரிகைக்கு அனுப்புவோம் என்றால் படிப்புக்கிடையில் நேரம் ஒதுக்குவது என்பது நினைத்துக் கூடப் பார்க்க முடியாமல் போய்விட்டது.

படிப்பை முடித்துவிட்டு எப்படியாவது மனதில் அப்போது தோன்றும் கருக்களைக் கொண்டு கதைகள் எழுதிப் பத்திரிகைக்கு அனுப்ப வேண்டும் என்று படிப்பையே குறியாக இருந்தாள். படிப்பு முடிக்கு முன்பே திருமணத்திற்கு நிச்சயித்துவிட்டார்கள்.

படிப்பு முடிந்தவுடன் திருமணம், வேலை இரண்டுமே சரியாக அமைந்துவிட்டன. இந்திராவிற்கு குடும்பம், வீடு, வேலை என அவளின் வாழ்க்கை சீராக அமைந்துவிட்டது. இரண்டு பிள்ளைகளுக்கு அன்னை ஆனாள். பிரச்சினை அற்ற குடும்பம். நேரமற்ற வாழ்க்கை என்று இந்திராவை எழுத்தைப் பற்றியே எண்ண விடவில்லை.

எத்தனை இடமாற்றங்கள், எத்தனை ஊர்கள், எத்தனை மக்கள் என அவளின் வாழ்க்கை ஓடியது. ஒருவாறாகப் பிள்ளைகளின் படிப்பு முடிந்தது. கொழும்பில் வீடு வாங்கி மகன், மகளுக்குத் திருமணமும் முடித்தாகிவிட்டது. மகன் வெளிநாட்டில் குடியேறிவிட இந்திராவும் கணவனும் மகளுடன் தங்கிவிட்டனர்.

போன வருடம் இந்திராவின் கணவன் சபாபதியும் காலமாகிவிட்டார். மகள் ரோகிணிக்கு ஒத்தாசையாக ஏதாவது செய்து கொடுப்பது அன்றி மற்றப் பொழுதுகளில் பெரும்பாலும் இந்திரா சும்மாதான் இருக்கின்றார் என்பதைவிட, வேலைக்குச் செல்லும் ரோகிணியின் இரண்டு வயது மகன் சயித்தைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்பது உண்மைதான். சயித்துடன் இருக்கும் நேரத்தில் பேனாவைப் பறிப்பான். தாளை எடுத்து எழுத முடியாது. தானும் எழுத வேண்டும் என்று அடம்பிடிப்பான்.

ரோகிணி வேலையில் இருந்து திரும்பி இருந்தாள். அதனால் சயித்தை அவளிடம் விட்டுவிட்டு, இன்றைய பொழுதிலாவது அவளின் மனதில் நீண்டகாலமாகக் கருவாகி இருந்த கதையை உருவாக்கிவிடலாம் என்று நினைத்து அமர்ந்து எங்கே ஆரம்பிப்பது என்று யோசித்துக்கொண்டு இருந்தாள்.

அப்போது உள்ளிருந்து ரோகிணியின் குரல் அழைக்கிறது, "அம்மா சயித்தை ஒருக்கால் பிடியுங்கோ. நான் ஒருக்கால் பக்கத்துக் கடைக்குப் போட்டு ஓடி வாறன்" இந்திரா ஏமாற்றத் தோடும் சோர்வோடும் இருக்கையை விட்டு எழுந்தாள்.

'வேலையை முடித்தும் கோப்புகளை மூடி வைத்து
விட்டுச் செல்கின்ற பணி அல்ல எழுத்து.
-உள் மூழ்கி
அமிழ்ந்து, கரைந்து, மேலெழுந்து வந்து தன்னையே
கொட்டுவதே எழுத்து. எழுத்தில் மூழ்கும் பெண்களைக்
குடும்பம் அக்கறையுடன் கவனித்துக் கொள்ளும்
நாளிலேயே பெண்களிடம் இருந்தும்
உன்னத இலக்கியங்கள் வெளிப்படும்'

என்ற கவிஞர் அ.வெண்ணிலா அவர்களின் கட்டுரை வரிகள் இந்திராவின் மனதில் ஓடிக்கொண்டு இருந்தது.

# நாளைய விடியல்

சொந்த மண்ணிலே கால் பதித்தவளுக்கு யாழ் மண்வாசனை அவளை இரு கரம் கூப்பி அழைத்தது போலிருந்தது. வீடுகள் தரைமட்டமானபோதும் அந்த ஆலமரம் மட்டும் அடையாளக் குறிப்பாகத் தலைநிமிர்ந்து நின்று இதமான தென்றலால் அவள் மனதிற்குள் எண்ணங்களை வண்ணங்களாகச் சிறகடிக்கச் செய்தது.

தாயும் தந்தையும் அன்புடன் அள்ளி அணைக்க ஐந்து பிள்ளைகள். குடும்பம் இன்பச் சக்கரத்தில் சுழன்ற காலம் அது. போர் எனும் அரக்கனின் குடி புகுதலால் குடும்பம் பாலத்துச் சுவரில் மோதிய வாகனமாய்ச் சிதறுண்டு கடைசியில் பிணங்களானது. பிள்ளைச் செல்வங்களைப் பறிகொடுத்த துயர் தாங்காமலும் வறுமையின் பாதாளவிளிம்பிலே ஊசலாடியது பெற்றோர்களின் உயிர். நாளடைவில் தந்தையின் உயிரையும் பறித்த காலனுக்கு அந்தத் தாயின் அழுகுரல் காதுகளில் விழவில்லைப் போலும்!



ஐந்து ஆண்டுகள் வாழ்க்கை துன்பச் சக்கரத்திலே சுழன்றது. அவளுக்கு திடீரென சமாதானப் பேச்சுக்கள் தடல்புடலானபோது அவள் மனமும் விரக்தியில் புரண்டது.

"ம்...இப்படியே சொல்லிச் சொல்லியே மக்களை ஏமாத்தினம் இதுக்கெல்லாம் எப்பதான் விடிவு வரப்போகுதோ.....???"

விடியலில் கேள்விகளை தொடுத்து காத்திருந்தவளுக்கு

"இஞ்சேருங்கோம்மா.... உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமே... இப்ப யாழ்ப்பாணத்துக்கு எல்லாரையும் விடப் போகினமாம். காணிறவையள் எல்லாரும் நாங்கள் யாழ்ப்பாணம் போறம் என்ற பேச்சுத்தான். உங்களுக்கு இனி சந்தோஷம்தானே....!"

பக்கத்துவீட்டுப் பையன் கூறும்போது விளையாட்டாகக் கூறுகிறான் என்றே நினைத்தவளுக்கு இவ்வளவு தூரம், உண்மையாக அமைந்தது இது கனவாக இருக்குமோ என்றுதான் எண்ணத் தோன்றியது.

ஆலம் சருகு கன்னத்தில் விழுந்தபோதுதான் அவள் நினைவு மீண்டது. எழும்ப முயற்சித்தவளை ஒரு கரம் பற்றியிருந்தது அப்போதுதான் நினைவில் வந்தது. பாவம் யார் பெற்ற குழந்தையோ....! குப்பைத் தொட்டியில் அநாதையாகக் கிடந்தபோது தன் குழந்தையாகத் தத்தெடுத்துக்கொண்டாள்.

நேற்றைய பொழுதுகள் இன்னும் முடியவில்லை. இன்றைய பொழுதுகள் இன்னும் மலரவில்லை. நாளைய மொட்டுக்களாவது முழுமையுடன் மலர வேண்டும். நேற்றைய கொடுமைகளையும், இன்றைய சுமைகளையும் மறைத்து நாளைய சுகங்களை வரவேற்க தாய்மையின் முந்தானை இன்றே போர்வையாகின்றது.

"சமாதானம் என்டிச்சினம், சனங்களின்ர இயல்பு நிலை எண்டிச்சினம். திரும்பவும் சண்டைக்குத்தான் சண்டிக்கட்டுக் கட்டுகினம்" என்டு தனக்குள்ளேயே முணுமுணுத்துக்கொண்டாள்.

அவளது நாளைய விடியல் அவள் முன் நீண்டு விரிகின்றது ஏக்கத்தோடு!

கு.சுபாஷினி, மன்னார்

# நம்பிக்கை



க.ராகுலன், வெள்ளவத்தை

நான் க.பொ.த.சா/த பரீட்சை எடுத்துவிட்டு இருந்த காலம் அது. எல்லாமே சாதித்துவிட்டோம் என்ற எண்ணம் மிதப்பு மனதில் உணர முடிந்த காலம். ஓய்வு நாட்களென்றாலே ஒரே குஷிதான். நாம் கிரிக்கெட் விளையாடுவோம். கடற்கரையில் துள்ளிக் குதித்து உருண்டு புரண்டு நீச்சலடிப்போம். நான்கைந்து பேரோடு வீட்டு முற்றத்தில் ஆரம்பித்த விளையாட்டு, பதினைந்து பேரோடு வீதி வரை முன்னேறியது.

உலகத்தில் இரண்டு விடயங்களுக்கு வயது வித்தியாசமில்லாமல், எந்த வயதினரும் கைகோர்த்துவிடுவார்கள். ஒன்று தண்ணியடிப்பது அடுத்தது விளையாட்டு. எங்கள் விளையாட்டிலும் அப்படித்தான். வயது வித்தியாசமே இல்லை. மிகவும் சுவாரசியமாக இருக்கும். திருமணமானவர்களை எல்லைக் கோட்டொடு நிறுத்தி, ஓடவைத்து வேடிக்கை பார்ப்போம். எங்கள் கூட்டத்தில்தான் முதன்முதல் துடுப்புப் பிடிக்கும் விளையாட்டு வீரர்கள் இருந்தார்கள்.

அங்குதான் வைகுந்தனை முதன்முதலாகப் பார்த்தேன். என்னை ஒத்த வயது. பக்கத்து விடுதியில்தான் இருந்தான். வேகப்பந்து வீசும் அவனுக்குத் துடுப்பாட்டம் பூஜ்யம். அன்று அவன் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்டபோது நான் 'சிலிப்'பில் நின்றிருந்தேன். அவன் விசுக்கும் வேகத்தில் துடுப்பைக் கைவிட்டுவிட்டான். அது என் மேல் வந்து விழ, நான் ஓடிச் சென்று அவனை அடிக்க, அவன் எதிர்க்க எல்லோரும் ஓடிவந்து தடுத்து நிறுத்தி சமாதானம் செய்தார்கள். அன்றிலிருந்து நானும் அவனும் நெருக்கமானோம்!

வெளிநாடு போகப்போவதாகச் சொன்னான். இடப்பெயர்வால் க.பொ.த.சா/த சோதனை குழம்பிப் போனதாம். சாவகச்சேரியில் தண்ணீரில்லாமல் கஷ்டப்பட்டது, மழைத் தண்ணீரைக் குடையில் ஏற்றிக் குடித்தது, மரநிழலில் வகுப்பு நடந்தது, கொழும்புக்கு வரும்போது, தெருக்கரையோரம் படுத்து உறங்கியது என்று அவனது சோகப் பட்டியல் நீண்டது.

"நான் வெளிநாடு போக வேணும், இங்க இருக்கிறதிலும் பாக்க அங்க போய் பிச்சையெடுத்தாலும் பரவாயில்லை" என்றான்.

அந்த வயதில் அவனுள் அப்பியொரு விரக்தி....

பரீட்சைப் பெறுபேறுகள் வந்ததும் நான் படிப்பைத் தொடர்ந்தேன். எங்கள் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைய ஆரம்பித்தது. வைகுந்தன் உட்பட விடுதியில் இருந்தவர்கள் சிலர் வெளிநாடு போய்விட்டதாகக் கேள்விப்பட்டேன்.

காலம் கடிவாளம் பிடித்தது. ஒரு நாள் பல்கலைக்கழகம் போகும் அவசரத்தில் விரைந்துகொண்டிருந்தேன். எங்கேயோ பார்த்த முகம்! நிச்சயமாக வைகுந்தனில்லை.

"தம்பி என்னை ஞாபகமிருக்கா"

"ம்ம்"

எங்களோடு முன்பு விளையாட வருபவர். மூன்று வருடங்களுக்குப் பின்! நான் கேட்குமுன்னரே சொன்னார்.

"தம்பி வெளியில போகேக்க பிடிபட்டுப்போனம், கேஸ் முடியும் வரைக்கும் கூட்டில இருந்தன். போன கிழமதான் வந்தனான்"

பரிதாபமாக இருந்தது.

"அப்போ வைகுந்தன்?"

"தம்பி! உம்மட சிநேகிதன் கொடுத்து வச்சவன், தப்பிச்சிட்டான்."

அவசரமாக அவரிடமிருந்து விடைபெற்றேன். உள்ளுக்குள் மனம் ஆறுதல் அடைந்தது. வைகுந்தன் போய்ச் சேர்ந்திட்டான்!

பல்கலைக்கழகப் படிப்பு முடிந்து, நான் வேலையில் சேர்ந்துகொண்டேன். இரண்டரை வருடப் பயிற்சி முடிவடைந்திருந்தது. மனம் போல் வருமானம். கூடவே ஒரு "செக்கண்ட் ஹாண்ட்" கார்!

அன்று ஞாயிற்றுக்கிழமை அந்த வீதியில் வந்து கொண்டிருந்தேன். சில சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். பார்க்கும்போது பழைய ஞாபகம் வந்தது. தெரிந்த முகமொன்றைக் கண்டு, காரை ஓரங்கட்டி நிறுத்தினேன். அது வைகுந்தன்!

"படுவா எப்ப வந்தனீ" என்று அவன் தோளைப் பற்றினேன். என்னைப் பார்த்ததும் அவன் முகம் மலர்ந்தது.

"நேற்றைக்குத்தான். நேற்றோட ஒன்பது தரம் ஏறி இறங்கிட்டன். அடுத்த கிழமை கட்டாயம் அனுப்பிறதா ஏஜென்சிக்காரன் சொல்லியிருக்கிறான்."

அவனைப் பார்த்துப் பரிதாபப்படுவதா? இல்லை அவனுடைய முயற்சியை மெச்சுவதா? நான் புரியாமல் நின்றேன்....

# மூண் ரிவியில் செய்தி பார்த்த அநுபவம்

## வாசிப்பது பரிமளா சிறியசாமி

**(வேண்டுகோள்: இந்தச் செய்திகள் அனைத்தையும் சன் டிவி. பாணியில் கூவிக் கூவிப் படிக்கும்படி வாசகர்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். மூண்டிவியின் செந்தமிழ் புரியாதவர்களுக்கு, அடைப்புக் குறிக்குள் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.)**

பம்பம்பம்பம்....

வணக்கோம்.

மூண் செய்தீகாள்.... தலாய்ப்புச் சேய்தீகாள்...

சென்னாயில் மாண் திருட்டு... மாண் கோள்ளைக்காரர்கள் காய்தூ... (அதாவது சென்னையில் மண் திருட்டு.... மண் கொள்ளைக்காரர்கள் கைது)

வீட்டில் ஈருந்தா பேண்ணீடாம் கமூத்தை சரசரவென்றூ அறுத்து வயிற் றீல் குத்தீ காலீல் வேட்டீ கொலாய்...

ஏந்த சாயா கடாய் சீறந்தா கடாய்... மூண் செய்திகளுக்காக மாக்க ளீடம் காருத்தூ காணிப்பூ

சாதம் சாப்பிட்டால் ஆபாத்தூ... உடானே மரணாம்....

சாட்டசபாய்யில் ஜெயலலிதாஆஆ தூம்மினார். கருணாநிதீ கண்டானாம்...

தீரூச்சீயீல் வெய்யீல்.. மாக்காள் பாதாறி ஓட்டாம்...

பம்பம்பம்பம்பம்...

சென்னாயில் மாண் திருட்டு.. மாண் கோள்ளைக்காரர்கள் காய்தூ.... (ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் இடுப்பில் ஒரு கை வைத்துக்கொண்டு மற்றொரு கையால் கேடியைத் தள்ளுகிறார். கேடி தடுமாறி நடக்கிறார்)

போலீஸ் இன்ஸ்பெக்டர் முன்னால் இருக்கும் மூண் டி.வி. பிச்சை டி.வி., தோல்வி டி.வி. போன்றவை எழுதிய மைக்குகளில் பேசுகிறார்.

இங்க வந்து பாருங்க... மண் திருடுராங்க... மண் அதாந்... மண்... அதத் திருடுராங்க... புடிச்சிட்டோம்... அது என்னன்னா... (பாதியிலேயே அவர் பேசுவது வழக்கம்போல் வெட்டப் படுகிறது)

அடுத்த செய்தி வாசிப்பாளர்: கோடம்பாக்கம் பாலத்துக்குக் கீழ் ஈருக் கும் குடியிருப்புகளில் ஒரு பெண் தன்னந்தனியே ஈருக்கும் சமயம் பார்த்து சில திருடர்கள் புகுந்து பெண்ணை கழுத்தை சரசரவென்று அறுத்து, வயிற்றில் குத்தி காலில் வெட்டிக் கொலை செய்தார்கள்.

(காமிரா வீட்டு சுவரில் இருக்கும் ரத்தத்தைக் காண்பிக்கிறது. பிறகு இறந்திருக்கும் பெண்ணின் கழுத்தில், அவரது வயிற்றில், பிறகு அவரது காலில் இருக்கும் ரத்தக் களறியை காட்டுகிறது... உங்களுக்கே ராத்திரி தூக்கம் வராத அளவுக்கு செய்தி.

விளம்பரங்கள் அரைமணி நேரம் ஓடுகின்றன...

இடையே.. யாரால் ஏன் எப்படி என்ன யாருக்கு என்று தலைப்புகள்...

நான் ஒருதடவை சொன்னா நூறுதடவை சொன்ன மாதிரி....

யார் சொன்னது?

விடை என்னும் சில மணிநேரத் தில்... விளம்பர இடைவேளைக்குப் பிறகு.

மீண்டும் விளம்பரங்கள்...

நான் ஒருதடவை சொன்னா நூறுதடவை சொன்னமாதிரி...

யார் சொன்னது,

ரஜினிகாந்த்

பம்பம்பம்....

ஏந்த சாயா கடாய் சீறந்தா கடாய்... மூண் செய்திகளுக்காக மாக்களீடம் காரூத்தூ காணிப்பூ

இன்று திருச்சிராப்பள்ளி நகரில் எடுத்த கருத்துக்கணிப்பின்படி 35 சதவீத வாக்குப் பெற்று மூன்றாவது இடத்தில் ருப்பது தில்லைநகரில் ருக்கும் முனிசாமி டீக்கடை.

அடுத்து 45 சதவீத வாக்குகள் பெற்று இரண்டாவது இடத்தில் ருப்பது ரயில்நகரில் இருக்கும் சேக்பாய் டீக்கடை.

அடுத்து 50 சதவீத வாக்குகள் பெற்று முதலாவது இடத்தைப் பிடித்திருப்பது ரயிலடி நாயர் டீக்கடை...

நாயர் சொல்கிறார். "ஞான் நல்லா டீ போடும் சாரே... மூண்டீவிக்கி ரொம்ப சிலாக்கியமாயிட்டுண்டு..."

பக்கத்தில் இருப்பவர், "நாயர் டீயிலெ என்னா கலக்குறார்னு தெரியலை.. 'டீ குடிக்கலைன்னா கையும் காலும் ஆடுதுடோய்."

பம்பம்பம்பம்....

சாதம் சாப்பிட்டால் ஆபாத்தூ உடானே மரணாம்.

பம்பம்பம்பம்...

இன்னும் சில மணி நேரங்களில்..

இன்னும் ஒரு அரைமணி நேரம் விளம்பரங்கள்...

பம்பம்பம்பம்....

சாதம் சாப்பிட்டால் ஆபாத்தூ... உடனே மரணாம்.

கடையில் சாதம் சாப்பிடும் ஒருவரை காட்டுகிறது காமிரா... அவர் கையில் சாதம் வழிவதை முழங்கையிலிருந்து உள்ளங்கை வரைக்கும் அவர் நக்குகிறார்.

பரிமளா சிறியசாமி: சாதாம் ரூசீயாகத்தான் ஈருக்கிறது ஆனால் அதில் ஆபத்து இருக்கிறதூ... மூண் செய்திகளுக்காக உட்டலக்கடி உமேஷ் வழங்கும் சிறாப்புச் செய்தீ.

உட்டலக்கடி உமேஷ்: நம்மில் பலர் சாதம் சாப்பிடாமல் இருக்கமுடி யாது. ஆனால், சாதம் சாப்பிட்டால், வாந்திபேதி, சார்ஸ், எய்ட்ஸ் இன்னும் பெயர் தெரியாத எத்தனையோ வியாதிகள் வர வாய்ப்பு இருப்பதை நாம் அறியவேண்டும்.

மீசை முளைக்காத பையன் ஒரு வன் வெள்ளைக்கோட்டு பொட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான். கீழே "சீமாச்சு... உணவு நிபுணர்" என்ற பெயர்கள்.

"சாப்பாட்டில சாதம் சேர்க்காம சாப்பிடணும்.. சாதம் சாப்பிட்டா செத்துப் போயிடுவாங்க... சாதம் சாப்பிடலைன் னாலும் செத்துப் பொயிடுவாங்க... அத னால சாதம் சேத்துக்கக்கூடாது" என்று மூண் செய்திகள் என்று எழுதப்பட்ட ஒரு மைக்கில் பேசுகிறான். "சரியாச் சொல்லிட்டனா அங்கிள்" அத்தோடு அவரது பேட்டி வெட்டப்படுகிறது.

உட்டலக்கடி உமேஷ்: நம்மில் பலர் சாதம் சாப்பிடாமல் இருக்கமுடி யாது. ஆனால் சாதம் சாப்பிட்டால், வாந்திபெதி, சார்ஸ், எய்ட்ஸ் இன்னும் பெயர் தெரியாத எத்தனையோ வியாதி கள் வர வாய்ப்பு இருப்பதை நாம் அறியவேண்டும். தமிழ் நாட்டில் சாகும் எல்லோரும் சாதம் சாப்பிடுபவர்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். மூண் செய்திகளுக்காக உட்டாலக்கடி உமேஷ்.

பம்பம்பம்பம்பம்...

இனி கருணாநிதி செய்தி- இன்று கருணாநிதி பற்றி ஏதும் செய்தி இல்லை.. என்று யாரும் எண்ணிவிடலா காது. ஜெயலலிதா சட்டசபையில் தும்மியதால் சட்டசபையின் பாரம்பரியம் கெட்டுவிட்டது என்று கருணாநிதி கவ லையுடன் அறிக்கை விட்டிருக்கிறார். அவருடைய அறிக்கையில் அவர் தெரிவித்தது: "நான் ஐம்பது வருடங்க ளாய்த் தும்மி வந்திருக்கிறேன். ஆனால், சட்டசபையின் கண்ணியத் தைக் காப்பாற்றும் பொருட்டு, வேட் டியை அவிழ்த்திருக்கலாம், அடி உதை யில் இறங்கியிருக்கலாம், புடவையை இழுத்திருக்கலாம், மைக்கைப் பிடுங் கிக் கடாசியிருக்கலாம், ஆனால் தும் மியதே இல்லை என்பதை தமிழ் மக் கள் அறிவார்கள். ஜெயலலிதா அம் மையார் தும்மியதன் மூலம் சட்டசபை யின் கண்ணியம் கெட்டுவிட்டது என்ப தால் அவர் மன்னிப்புக் கோரும் வரை யில் போராடுமாறு எல்லோரையும் நான் கேட்டுக் கொள்கிறேன். நான் சட்டசபைக்குச் செல்லவில்லையெ தவிர என் நினைவும். மனமும், பேனா வும். கையெழுத்தும் சட்டடசபையி லேயெ இருக்கிறது என்று தமிழ் மக் கள் நன்கு அறிவார்கள். கருணாநிதி சட்டசபைக்குச் செல்லவில்லை என்று கயவர்கள் தான் காழ்ப்புணர்ச்சியுடன் பேசுவார்கள்."

இவ்வாறு கருணாநிதி தெரிவித்தார்.

பம்பம்பம்பம்...

தீரூச்சீயீல் வெய்யீல்... மாக்கள் பாதாறி ஓட்டாம்...

(திருச்சி சின்னக்கடை வீதியில் மிளகாய் மலை மீது இன்னொரு மூட்டை மிளகாயைக் கொட்டுகிறார் கள். அருகே பஸ் வரக் காத்திருக்கும் மக்கள் ஓடுகிறார்கள்)

தீரூச்சீயீல் வெய்யீல்... மாக்காள் பாதாறி ஓட்டாம்....

பம்பம்பம்பம்....

இன்றாய்யா வான்னிலாய் (இது வரை கூவல்... இதற்குப்பின், மய்ய மய்யமய்யா மய்யமய்யமய்யா என்ற கரிசனத்துடன் வானிலை படிக்கப்படும்)

இன்று திருச்சியில் மிதமானது முதல் சற்று மிதமானதுவரை வெப்பம் இருக்கும். தமிழ்நாட்டிலும் அதன் கடற்கரைப் பகுதிகளிலும் ஆங்காங்கெ சிறு தூரலாகவும், மிதமாகவும் பலத்த இடி மின்னலுடனுனோ மழையோ அல்லது ஆட்டோ சாக்கடை மீது செல்வதால் சாக்கடை தண்ணீரோ உங்கள் மீது தூவப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறோம்...

24 மணிநேரமும் இது போல கண்றாவிகளைப் பார்க்க, கொலைத் தமிழைக் கேட்க, பதட்டச் செய்திகளை உடனுக்குடன் கேட்டு கலவரம் அடைய இதற்கென்றெ இருக்கும் மூண் நியூஸ் சேனலை பார்க்கவும்.

---

**இரு எழத்தாளர்கள் சேர்ந்து எழதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

# மூட் பாதையில் மரித்த மிதவாதம்

(அரசியல் தொடர்)

### மிதவாதத்திலிருந்து தீவிரவாதம் நோக்கி....

இதனால் எல்லா மாவட்டங்களி லிருந்தும் பல்கலைக்கழகங் களுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுவது உறுதிப்படுத்தப்பட் டது. திறமைக்குப் பதிலாக மாவட்ட அடிப்படை பல்கலைக் கழக அனுமதியில் முன்னுரிமை பெற்றது. இதனால் திறமை அடிப் படைகள் அதாவது புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்ற நகர்ப்புற மாணவர்கள் முன்பு போல் அதிக எண்ணிக்கையில் பல் கலைக்கழகத்துக்குப் போக முடி யாத நிலைமை ஏற்பட்டது. புள்ளி கள் குறைவாகப் பெற்றாலும் மாவட்ட அடிப்படையில் மாணவர் கள் பல்கலைக்கழக அனுமதி பெறும் வாய்ப்பு உருவாக்கப்பட் டது. இதன் பயனாக யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களில் பலர் பெரும் பாதிப்புகளுக்கு இலக்காகி னர். மாவட்டக் கோட்டா முறை அமுலுக்கு வந்ததும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உயர்தரப் பரீட்சை யில் 275 புள்ளிகள் பெற்ற மாண வன் கூட பல்கலைக்கழக அனு மதி பெற முடியாத நிலையில், வவு னியாவில் அல்லது மொனராகலை யில் இருந்து உயர்தரப் பரீட் சையில் 230 புள்ளி பெற்று மாவட்ட மட்டத்தில் முன்னுரிமை பெற்றவர்கள் வைத்திய பீடம் அல் லது பொறியியல் பீடம் போன்ற கவர்ச்சிகரமான கல்வி வாய்ப்பைப் பெறும் நிலை உருவானது.

இதற்கு கிளிநொச்சி மாவட்டம் நல்ல உதாரணம். கிளிநொச்சி மாவட் டம் முன்பு யாழ்ப்பாண மாவட்டத் தின் ஒரு பிரிவாக இருந்தது. அங்கு வளம் மிக்க கல்லூரிகள் இருக்கவில்லை. அதனால், அம் மாவட்டத்திலிருந்து 1986 வரை எவருமே பல்கலைக் கழகத்துக்குப் போகவில்லை. 1987ல் கிளிநொச்சி தனி மாவட்ட மாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அந்த ஆண்டிலிருந்து கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து டாக்டர்களும்




எஞ்சினியர்களும் உருவாகிக் கொண்டிருக்கிறார்கள். மொழிவாரித் தரப்படுத்தலை எதிர்த்த யாழ்ப்பா ணத் தமிழர்கள், அது மாவட்டக் கோட்டா முறையாக மாற்றப்பட்ட பின்பும் தமது எதிர்ப்பைக் கைவிட வில்லை. அவர்களுடன் கொழும்பு, கண்டி, காலி, இடதுசாரிகளின் கோட்டையான மாத்தறை உயர் வர்க்கத்தினரும் சேர்ந்துகொண்டு திறமை அடிப்படையை மீண்டும் கொண்டு வருவதற்கு அழுத்தம் கொடுத்த வண்ணம் இருந்தனர். அவர்களின் அழுத்தத்தின் விளை வாக முதலில் 30 சதவீத அனுமதி திறமை அடிப்படையில் கொடுக்கப் பட்டது. பின்பு மேலும் அதிகரிக்கப் பட்டது. இப்போது நடைமுறை யில் இருப்பது திறமையும் மாவட் டக் கோட்டாவும் கலந்த ஒரு கலவை முறையாகும்.

உண்மையில் இதுவொரு பொருளாதார அடிப்படையிலான பிரச்சனை. பெருகி வரும் மாண வர் தொகைக்கு ஏற்ப பல்கலைக் கழக அனுமதி வசதியைப் பெருக் காமல் மட்டுப்படுத்தப்பட்ட வளங் களுக்கு ஏற்ப மாணவர்களின் தொகையைக் கட்டுப்படுத்த முற் பட்ட செயல் இது. உயர்மட்ட வகுப்பினரைப் பாதிக்கும் பிரச்ச னைகளே முதன்மை பெறுகின்ற காரணத்தால் தரப்படுத்தல் பிரச் சனையும், அதனால் பாதிப்புக் களுக்கு உள்ளான மாணவர்களின தும் பிரச்சனை பூதாகரமாகியது. தரப்படுத்தல் முறை அறிமுகமான தும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இரு விதமான போக்குகள் தலை தூக்கின. ஒன்று, தனியார் கல்வி நிறுவனங்கள் பெருகின. இரண் டாவது வெளிநாடுகளுக்குப் பிள் ளைகளை அனுப்பி வைக்கும் பெற்றோர் தொகை பெருகியது. 1970 க்குப் பின்னர்தான் யாழ்ப் பாணக் குடாநாட்டில் ரியூட்டறிகள் எனப்படும் தனியார் கல்வி நிறு வனங்கள் மழைக்கு முளைத்த காளான்கள் போலப் பல்கிப் பெரு கின. அதாவது மாவட்ட மட்டத் தில் முன்னுரிமை பெறுவதற்கு அதீதமான திறமை தேவை என்ற நிலையில் அதனை ஈட்டிக்கொள்வ தற்காக பாடசாலைகளுக்குப் புறம் பான வகையிலும் மாணவர்கள் முயற்சிகள் எடுத்தனர். இதனால் ஏற்பட்ட பொருட் செலவுகள் குறித்துப் பெற்றோர் பெரும் கவலை கொண்டதாக இல்லை. மற்றுமொரு விளைவு வெளிநாடு களை நோக்கி இளைஞர்களைத் தள்ளியது. அக் காலத்தில் இங்கி லாந்து நோக்கி இளைஞர்கள் பய ணமாவது அதிகரித்தது. இங்கி லாந்திலுள்ள கல்லூரிகளில் அனுமதி பெறுவதும், இங்கிலாந்துக்குப் பயணம் செய்வதும் ஒப்பீட்டளவில் இலகுவானதாக இருந்தது. பணச் செலவு ஒரளவு அதிகமாக இருந்த போதும் பலர் இங்கிலாந்து செல் லும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். இத்தகைய சூழலில் பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தலை மூர்க்கமாக எதிர்த் துப் போராட்டத்தில் குதித்தவர் களில் சிலர் பல்கலைக்கழக பட்ட தாரி மாணவர்களாக இருந்தனர் அல்லது பலர் சாதாரணதரத்தில் பயின்றுகொண்டிருந்த மாணவர் களாக இருந்தனர் என்பது மறுக்க முடியாத உண்மை. இதற்கு ஒரு ஆதாரமாகக் குறிப்பிடக் கூடியது. எழுபதுகளின் மத்தியில் அமைப்பு வடிவமாக இருந்த போராட்ட அமைப்புகளில் முன்னிலையில் இருந்த எவரும், க.பொ.த. (உயர் தரப்) பரிட்சையில் தோற்றி பாதிக் கப்பட்டவர்களாக இருக்கவில்லை என்பதாகும்.

### ஆரம்ப பொறிகள்

1970ல் யாழ் முற்றவெளியில் நடைபெற்ற ஏரிக்கரைப் பத் திரிகை நிறுவனத்தின் தினகரன் விழா கைக்குண்டு வீசிக் குழப் பப்பட்டது. அக் காலகட்டத்தில் ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனம் (Lake House) யாழ்ப்பாணத்தில் வருடம் தோறும் தினகரன் விழாவை நடத்தி வருவது வழக் கம். மாட்டு வண்டில் சவாரி உட் படப் பல களியாட்ட நிகழ்ச்சிகள் இவ் விழாவில் இடம்பெறுவது உண்டு. தினகரன் விழாவில் இடம் பெற்ற கைக்குண்டு வீச்சுச் சம்ப வத்தைத் தொடர்ந்து உரும்பிரா மில் பிரதி அமைச்சர் சோமவீர சந்திரசிறியின் கார் மீது நேரம் குறித்து வெடிக்கும் குண்டு பொருத்தப்பட்டு வெடிக்க வைக் கப்பட்டது. யாழ் மாநகர முதல் வரும், யாழ்ப்பாண மாவட்ட சுதந் திரக்கட்சி அமைப்பாளருமான அல்பிரட் துரையப்பாவின் கார் யாழ் பிரதான வீதியில் கைக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது. இவ் வாறு ஒன்றன்பின் ஒன்றாகப் பல்வேறு சம்பவங்கள் இடம்பெற் றுக்கொண்டு வந்தன. எனினும் இந்தச் சம்பவங்கள் திட்டமிட்ட வகையில் ஒரு அமைப்பால் ஒழுங் குபடுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. இத்தகைய சம்ப வங்களின் பின்னணியில் தமிழ் மாணவர் பேரவை என்னும் ஒரு அமைப்பு செயற்படுவதாகப் பொலி ஸார் சந்தேகம் கொண்டிருந்தனர். இருந்தபோதும் இந்தச் சம்பவங் களை அரசுக்கு எதிரானதாகவும், அரசியல் உள்ளடக்கம் கொண்ட தாகவும் கருதாமல் வெறும் குற் றச் சம்பவங்கள் போலவே பலரும் கருதினர். இதனால் குற்றச் செயல் களில் ஈடுபடுவோரைத் தேடிக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்கிவிட்டால் குற்றச் செயல்கள் நின்றுவிடுமென்று பொலிஸார் சிந்தித்தனர். இவ் வகையில் அல் பிரட் துரையப்பாவின் காருக்குக் குண்டு வைத்தமை தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் உரும்பிரா யைச் சேர்ந்த பொன். சிவகுமாரன் பொலி ஸாரால் கைதானார். இது போல மேலும் பலர் பல்வேறு குற் றச் சாட்டுக்களின் கீழ் கைதாகினர். இவ்வாறு இளைஞர்கள் கைதாகிப் பொலிஸாரின் சித்திரவதைகளையும், சிறைவாசங்களையும் அநுபவித் துக்கொண்டிருந்த வேளையில் தமிழ் அரசியல்வாதிகள் உணர்ச்சி ஊட்டும் பிரசாரங்களில் தீவிரமாகி இருந்தனர்.

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம் + அம்பி மகன்**

(தொடர்ந்து வடியும்....)

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்...

# நெஞ்சினில் என்ன காயமோ...?

**உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாகக் காணப்படும் இன்றைய கால கட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றிற்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத் துறையில் அநுபவம் பெற்றவர்களும், நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த.கடம்பநாதன் (எம்.பீ.பீ.எஸ். எம்.டி. உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு.தி.சுவீந்திரன் (எம்.ஏ.எம்,ஏ., எம்.பில்., உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களைப் பகிர்வதுடன் உளவியல் சம்பந்தமான வாசகர்களின் கேள்விகளுக்கும் பதிலளிக்க முன் வந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக்கொள்கிறோம்.**

**உளநோய் பற்றிய மூடநம்பிக்கைகளும் தப்பபிப்பிராயங்களும் கடந்த வாரத் தொடர்ச்சி....**

ஒவ்வொரு வகை உளநோய்க்கும் ஒவ்வொரு வகைப்பட்ட சிகிச்சை முறைகளோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சிகிச்சை முறைகளோ தேவைப்படுகின்றன.

உளநோய்க்கான சிகிச்சை என நினைக்கும்போது சிலருக்கு மருந்துகள், மாத்திரைகள் மட்டும் நினைவுக்கு வரும். இன்னும் சிலருக்கு மனோவசியம் மட்டும் நினைவுக்கு வருகின்றது.

உளநோய்க்கான சிகிச்சை முறையின் பிரதான இரு பிரிவுகளாக உளவியல் ரீதியான சிகிச்சை முறையும் பௌதிக ரீதியான சிகிச்சை முறையும்.

உளவியல் ரீதியான சிகிச்சை முறை, நடத்தை மாற்றுச் சிகிச்சை முறையாகவோ, அறிவாற்றல் சிகிச்சையாகவோ, உளவளத் துணையாகவோ, மனோவசிய முறையாகவோ அமையலாம். சில உளவியல் சிகிச்சை முறைகள் தனியொருவருக்கு உதவும் விதத்தில் கொடுக்கப்படுகின்றன. இன்னும் சில சந்தர்ப்பங்களில் குழுச் சிகிச்சை முறை மூலம் பல்வேறு நோயாளிகளுக்கு ஒரு தடவையில் சிகிச்சை வழங்கப்படுகின்றது. வேறு சில சந்தர்ப்பங்களில் இணை சிகிச்சை முறை, குடும்ப சிகிச்சை முறை மூலம் குடும்பமொன்றில் அங்கத்தவர்களுக்கிடையிலான பிணக்குகளும் தம்பதியினருக்கிடைப்பட்ட பிரச்சினைகளும் தீர்வதற்கு உதவி அளிக்கப்படுகின்றது.

சிறுவர்களின் உளநோய்களைக் குறைப்பதற்கு விளையாட்டுச் சிகிச்சை, ஓவியச் சிகிச்சை, இசைச் சிகிச்சை போன்றனவும் உதவியளிக்க வல்லன.

இவற்றை விட சாந்த வழிப்பயிற்சிகள், ஆழ்நிலைத் தியானம் போன்ற வழிமுறைகளும் உளவியல் சிகிச்சை முறைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

பொதுவாக உளவளத்துணை என்பது உளவளத்துணையாளர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. மற்றைய உளவியல் சிகிச்சை முறைகள் உளவியலாளராலோ உள மருத்துவத்துறையில் பயிற்சி பெற்ற வைத்தியர்களாலோ அல்லது தாதிமார்களாலோ மேற்கொள்ளப்பட வேண்டும். தகுதியற்றவர்களால் மேற்கொள்ளப்படும் சிகிச்சை பயனற்றது என்பது மட்டுமல்ல ஆபத்தானதும் கூட.

பௌதிக ரீதியிலான சிகிச்சை முறையில் மருந்து வகைகளும், மின்சார அதிர்வுச் சிகிச்சை முறையும் பிரதான பங்கை வகிக்கின்றன.

உளநோய்க்கான மருந்துகள் பெரும்பாலானவை மாத்திரை வடிவில் கிடைக்கப் பெறுகின்றன. இவற்றை விட தீவிர

## உள மருத்துவம்

உளநோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான ஊசி மருந்துகளும் உள்ளன. இந்த மருந்துகள் யாவும் சில பக்கவிளைவுகளை ஏற்படுத்த வல்லன. எனவே ஒரு வைத்தியரின் பரிந்துரைப்படி அவரின் மேற்பார்வையில் மட்டுமே இம் மருந்துகளைப் பாவிக்க வேண்டும். இந்த மருந்து வகைகளையோ, மருந்தின் அளவையோ எழுந்தமானமாக மாற்றுவது ஆபத்தானது என்பதை எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும். சில வகை மருந்துகளை நோயாளியின் பொறுப்பில் கொடுப்பது அந்த நோயாளியின் உயிருக்குப் பங்கம் விளைவிக்கும். எனவே யார், எந்த மருந்தை, எப்போது, எப்படி, எவ்வளவு நேரத்துக்கு ஒரு தரம், எவ்வளவு காலத்துக்குக் கொடுக்க வேண்டும் என்பது மருத்துவரினால் தீர்மானிக்கப்பட வேண்டியது. அவரின் பரிந்துரைப்படி மருந்துகளைக் கொடுக்கும்போது அதிகரித்த பலன்கள் கிடைக்கப் பெறும்.

மின்சார அதிர்வுச் சிகிச்சை முறை பற்றி பல்வேறு தயக்கங்கள், பயங்கள், தப்பபிப்பிராயங்கள் நிலவுகின்றபோதிலும் இது ஒரு பயனுள்ள, பாதுகாப்பான சிகிச்சை முறை என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. சத்திரசிகிச்சை ஒன்றுக்கோ, அறுவைப் பேற்று சிகிச்சை ஒன்றுக்கோ உட்படும் ஒருவருக்கு ஏற்படுத்தப்படும் மயக்கநிலையை விட மிக மிகக் குறைந்தளவு காலத்துக்கே நோயாளி மயக்க நிலைக்கு உட்படுத்தப்படுகின்றார். இதன்போது பாய்ச்சப்படும் மின்சாரத்தின் அளவும் மிக மிகச் சிறியதாகும். நீண்ட காலத்துப் பக்க விளைவுகள் எதுவும் ஏற்படுவதில்லை. மூளையின் அமைப்பிலும் எந்த விதப் பாதிப்புகளும் ஏற்படுவதில்லை. இச் சிகிச்சை முறை மருந்துகளை விடக் குறுகிய காலத்தில் சில உளநோய்களைக் குணமாக்க வல்லது.

(தொடர்ந்து வரும்)

# கல்யாணம் நெருங்குதா...?



முதல் வேலையாக குடும்பத்தில் உள்ள எல்லாருமாகச் சேர்ந்து கல்யாணச் செலவுகளுக்கான பட்ஜட்டைப் போடுங்கள். அதில் 25 சதவீதம் கூடுதலாகப் போட்டுத் தனியாக ஒதுக்கி வையுங்கள். எதிர்பாராத செலவுகளுக்குக் கை கொடுக்கும்.

அழைப்பிதழ்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பாகவே தயாராக இருக்கட்டும். குறைந்தது 3 வாரங்களுக்கு முன்பாகத் தபாலில் அனுப்ப வேண்டியவர்களுக்குப் போய்ச் சேரட்டும்.

கல்யாணத்துக்கான துணிகளை ஒரு மாதம் முன்பே வாங்கிவிடவும். அவசரத்தில் தைக்கக் கொடுப்பது, அது சரியில்லாமல் அவதிப்படுவது பொன்றவற்றைத் தவிர்க்கலாம்.

பியூட்டி பார்லர் போகிற பழக்கமிருந்தால் இரண்டு மாதங்களுக்கு முன்பே போய் உங்களுக்கு மிக அழகாகப் பொருந்தக் கூடிய ஹெயர் ஸ்டைலையும் மேக்கப்பையும் செய்து பார்த்து உறுதி செய்து கொள்ளவும்.

வெளியில் உணவுக்கு ஏற்பாடு செய்வதாக இருந்தால் முன்கூட்டியே அதை ருசித்துப் பார்ப்பது நல்லது. ஹோட்டலில் ஒழுங்கு செய்வதாக இருந்தால் குடும்பத்துடன் சென்று அந்த ஹோட்டலில் கல்யாணத்துக்கு முன்பே ஒரு முறை சாப்பிட்டுப் பார்க்கலாம்.

திருமண போட்டோ மற்றும் வீடியோ போன்றவற்றுக்கு நீங்கள் வெளியே ஏற்பாடு செய்திருந்தாலும் உங்கள் குடும்பத்தார், நண்பர் என யாரையாவது தனியே எடுக்கச் சொல்வது பாதுகாப்பானது.

திருமணத் திகதியை நிச்சயம் செய்கிறபோது உங்கள் மாதவிலக்குத் திகதி, உங்கள் குடும்பத்தாரின் பிறந்த நாள், கல்யாண நாள், மணமகன் வீட்டாரின் வசதி போன்ற எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு நிச்சயம் செய்வது நல்லது. ◘

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்கு கொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.23க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

வ.மரிய சுசிலா, 97/2, கடற்கரை வீதி, சிலாபம்.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. த.ரஜிதரன், திருகோணமலை.
2. திருமதி பி.கலைச்செல்வன், வவுனியா.
3. திருமதி ஏ.விஜயஇந்திரா, கொழும்பு - 05.
4. இ.சுபாஸ், குகன் ஹாட்வெயார், மன்னார்.
5. செல்வி. சரிகா குவைவஸ், புத்தளம்.
6. திரு. த.றிஷானந்த், ஆரையம்பதி - 02.
7. திருமதி ச.கெளரி, அட்டன்.
8. திருமதி சித்தி ஆயிஷா, பதுளை.
9. எம்.ஐ.எம்.அஷ்ரப், நிந்தவூர்.
10. தர்மரெத்தினம் பிரபாகரன், அக்கரைப்பற்று - 07.

## குறுக்கெழுத்துப் போட்டி 24

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | ■ | 7 | ■ | 8 |
| 9 | ■ | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | ■ |
| ■ | 17 | ■ | 18 | 19 |
| 20 | 21 | 22 | ■ | 23 |

**இடமிருந்து வலம்**

(1) 'ஈமெயில்' என்பதற்கான தமிழ்ப் பதம்.
(10) நித்திரையின்போது ஏற்படும் இது சில்ருக்கு நித்திரையையும் கலைத்துவிடும். (குழம்பியுள்ளது)
(13) 'பகைவர்' என்று பொருள்படும். (குழம்பியுள்ளது)
(18) 'இயந்திரம்' (திரும்பியுள்ளது)
(20) நகைச்சுவை நடிகர்.

**மேலிருந்து கீழ்**

(1) ஆறும் கடலும் சேரும் இடத்தை இப்படியும் அழைப்பர்.
(3) 'சுடுகாடு' (குழம்பியுள்ளது)
(5) 'வெப்பம்' (தலைகீழாக உள்ளது)
(11) 'அடர்த்தி' (குழம்பியுள்ளது)
(14) கண்டி அரசன் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனையும் குடும்பத்தையும் சிறைவைத்த இடம் (தலைகீழாக உள்ளது)
(19) 'தூள்'.

**குறுக்கெழுத்துப் போட்டி 23 விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| து 1 | ம் 2 | பி 3 | க் 4 | கை 5 |
| ச் 6 | ■ | ■ | ளு 7 | ப 8 |
| சா 9 | க் 10 | க 11 | டை 12 | ■ |
| த 13 | ■ | றை 14 | க 15 | ■ |
| ன 16 | ■ | ல 17 | ட் 18 | டு 19 |
| ன் 20 | ல 21 | ல் 22 | கொ 23 | ■ |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 09.07.2003க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி;

**குறுக்கெழுத்துப் போட்டி இல-25**
**தினமுரசு வாரமலர், த.பெ. இல. - 1772, கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250/= ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.

# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

அந்தத் திருவருள் அவருக்குத் துணை நின்றது.

அ·.தே போல், என் இனிய இளவல் இசைஞானி இளையராஜாவை எடுத்துக்கொள்ளுங்கள்.·.

பாவலர் வரதராசனாரோடு அவரும் ஓர் பாட்டுப் பறவையாகப் பட்டி தொட்டியெல்லாம் சிறகடித்துப்



பறந்தபோது பிறிதொரு காலத்தில் அவர் கோயிலுக்குப் போவார். குங்குமம் வைப்பார், கோபுரம் கட்டுவார் என்றெல்லாம் எவரேனும் ஆரூடம் சொல்லியிருந்தால் அவரே விலா நோகச் சிரித்திருப்பார்.

இன்று, இறையருள் என்கின்ற வாசகத்தின் கீழேதான் அவர் கையொப்பமிடுகிறார். இன்னமும் சொல்லப்போனால், இறையருள் என்பதே அவர் கையெழுத்தாகி விட்டது. சங்கீத பாஷையில் சொல்லுவோமாயின், இறையருள்தான் அவருடைய சிக்னேச்சர் மெட்டு.

இளையராஜாவை, இறைவனின் செல்லப்பிள்ளை என்று நான் கண்டு கொண்டு, எத்தனையோ நாட்களாயிற்று.

திருவருள்தான் தன்னை இந்த உயரத்தில் வைத்திருக்கிறது என்று இன்று அவர் திடமாக நம்புகிறார். திருவருளின் துணைகொண்டு அவர் திருவண்ணாமலைக்குச் சென்று குருவருளையும் பெற்றுக்கொண்டிருக்கிறார். திருவருளும், குருவருளும் தொன்னையும், வெண்ணெயும் போல ஒன்றுக்கொன்று ஆதாரமானது.

**திருவருள் தனைப்பெற**
**குருவருள் வேண்டும்! - அந்த**
**குருவருள் தனைப்பெறத்**
**திருவருள் வேண்டும்!**

இது திருமூலரின் திருமந்திரம் போல் ஆழமாக இருக்கிறதல்லவா! ஆனால் இது இளையராஜா எழுதி என்னிடம் இசைத்துக் காட்டிய ஒரு பாடல்.

ஒரு சினிமா இசையமைப்பாளரின் சிந்தனை எப்படியெல்லாம் போகிறது பாருங்கள்.

எதற்குச் சொல்லுகிறேன் என்றால், தமிழ்தான் எனக்குச் சோறு போட வேண்டும் என்பது திருவுள்ளமாக இருந்ததால்தான், என் பிள்ளைப் பிராயத்திலேயே இறைவன் அதற்கேற்ற சூழ்நிலையை அமைத்துக் கொடுத்தான்.

என் பிறந்த வீடு திருவரங்கம், புகுந்த வீடு திரையரங்கம்.

**பச்சைமா மலைபோல் மேனி**
**பவளவாய் கமலச் செங்கண்**
**அச்சுதா அமரர் ஏறே!**
**ஆயர்தம் கொழுந்தே! என்னும்**
**இச்சுவை தவிர யான்போய்**
**இந்திர லோகமாளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன்**
**அரங்கமா நகருளானே!....**

ஆழ்வாரின் இந்தத் திருவாய்மொழி, எனக்கு அஞ்சு வயதிலேயே மனப்பாடம். திவ்வியப் பிரபந்தம்தான், திருவரங்கக் கோயிலின் தேசியகீதம். கேட்டுக் கேட்டுத் தமிழின் மீதான காதல் என் தலைக்கேறியது.

மார்கழி மாதம் முப்பது நாளும் தெருவெல்லாம் திருப்பாவை முழக்கம். அர்த்தம் புரியாமலேயே அவைகளை நான் மனனம் செய்ததுண்டு. காலப்போக்கில் கொஞ்சம் கொஞ்சமாகப் பொருள் புரியலாயிற்று. அப்படியிருந்தும், 'செந்நெலூடு கயலுகள' என்னும் வரி விளங்காமல் என் மண்டையைக் குடைந்தெடுத்துவிட்டது.

நான் படித்த பள்ளிக்கூடத்தின் தமிழாசிரியர் திரு.ராமமூர்த்தி அய்யரிடம் விளக்கம் கேட்டுப் பெற்றேன். 'நீர் நிறைந்த வயலில் மீன் துள்ளுகிறது' என்று அவர் விவரித்துக் கூறிவிட்டு என்னை வியப்போடு பார்த்தார். காரணம் பள்ளிக்கூடத்தில் நான் தமிழ் மாணவனல்ல. பள்ளியில் என் முதல் பாடம் ஆங்கிலம். இரண்டாம் பாடம் வடமொழி. இரண்டையும் நான் உதட்டளவோடு வைத்துக்கொண்டு உள்ளத்தில் நாற்காலி போட்டு நற்றமிழை உட்கார்த்தி வைத்திருந்தேன்.

இதற்கெல்லாம் காரணம், முந்தைய நூற்றாண்டுகளில் பண்டிதர்களால் கடத்திச் செல்லப்பட்ட பைந்தமிழை, பாரதி என்னும் மகாகவி மீட்டு வந்து என் போன்ற பாமரரிடம் சேர்த்ததுதான்.

சமய குரவர்கள் மட்டுமே சாயுச்சியம் அடைவதற்காகப் போற்றிப் பொத்தி வைக்கப்பட்ட நாராயண மந்திரத்தை திருக்கோஷ்டியூர் கோயில் கோபுரத்தின் மீது ஏறி நின்று கூவிக் கூவி ஊரையழைத்து சகலரும் உய்யச் சொன்னானே ராமானுஜன்.

அது போலத் தானறிந்த தமிழின் வலிவையும், பொலிவையும் தனக்கென்றே வைத்துக்கொள்ளாமல், சுப்பனுக்கும், குப்பனுக்கும் புரியுமாறு கூடை கூடையாகப் பாட்டெழுதிக் கொட்டி வைத்துப்போன பெருந்தகையல்லவா பாரதி!..

அதற்குப் பிறகுதானே, பரிமேலழகர் தயவில்லாமல் திருக்குறளைப் புரிந்துகொள்ளலாம் என்கிற உண்மையை நாம் புரிந்துகொண்டோம்.

இரண்டாவது உலக மகாயுத்தமும், இந்திய விடுதலைப் போராட்டமும் ஒருசேர நடந்துகொண்டிருந்த காலம் அது.

வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பள்ளியைப் புறக்கணித்துவிட்டு சக மாணவர்களோடு பாரதியார் பாடலைப் பாடியவாறு நான் சித்திரை வீதி உத்திர வீதியைச் சுற்றி வந்தபோதெல்லாம், தேசப் பற்றைக் காட்டிலும் தமிழ்ப் பற்றே என்னுள் அதிகமாக வியாபித்திருந்தது.

பாரதியார், பாரதிதாசன், நாமக்கல் கவிஞர், தேசிக விநாயகம் பிள்ளை, ச.து.சு.யோகி, சுத்தானந்த பாரதி இவர்களது கவிதைகள்...

கல்கி, புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், லா.ச.ராமாமிர்தம், கரிச்சான்குஞ்சு கதைகள்... திரு.வி.க. அ.ச. ஞானசம்பந்தம், பண்டிதமணி மு.கதிரேசன் செட்டியார் இவர்களது கட்டுரைகள்.

இப்படி எந்தத் தமிழ்ப் படைப்பைக் கண்டாலும் விழுந்து விழுந்து படிக்க ஒரு வாசகர் வட்டமே எங்கள் ஊரில் உருவாகியிருந்தது.

இந்த வட்டத்தில்தான் ஜனனி ஸ்ரீனிவாசன், செல்லப்பா, ரங்கராஜன் என்று ஏகப்பட்ட தமிழ்ப் பித்தர்கள் உள்ளடக்கம். இதில் குறிப்பிடப்பட்ட ரங்கராஜா என்பவர்தான் இன்றைய எழுத்தாளர் சுஜாதா.

அந்நாளில் அமுதசுரபியில் தொடர்ந்து வெளியான லா.ச. ராமாமிர்தத்தின் பஞ்ச பூதக் கதைகளை நாங்கள் வேதம் போல் அத்தியனம் செய்ததுண்டு.

லா.ச.ராவின் ஜனனி கதையின் லாஹிரி உச்சந்தலைக்கு ஏறிய காரணத்தாலேயே என் நண்பன் ஸ்ரீனிவாசன் தன் பெயரை ஜனனி என்று மாற்றிக்கொண்டான்.

இந்தச் சூழலில் வளர்ந்த காரணத்தால் நான் கன்னா பின்னாவென்று கவிதை, கதை கட்டுரை, நாடகம் என்றெல்லாம் எழுத ஆரம்பித்தேன்.

இவை எங்கள் வாசகர் வட்டத்துக்குள்ளேயே வலம் வந்தனவேயல்லாது, எந்தப் பத்திரிகையின் பக்கமும் தலை வைத்துக் கூடப் படுத்ததில்லை.

அப்போது, ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் கோயிலுக்குப் புதிய எக்ஸிக்யூடிவ் ஆபீசராக ஒரு தமிழறிஞர் வந்திருந்தார். கதர் ஜிப்பா, கனல் பறக்கும் கண்கள், கழுத்துப் பிடரி வரை முடி, தும்பைப் பூ போன்ற நீண்ட தாடி பார்ப்பதற்கு சாந்தி நிகேதனை விட்டு ஸ்ரீரங்கத்திற்கு வந்த தாகூர் போலவே இருப்பார்.

அவர் ஒரு தமிழ் எழுத்தாளர் என்று பரவலாக உள்ளூரில் பேச்சு அடிபட்டது. ஒரு வசன கவிதையை எழுதிக்கொண்டு அவர் வீட்டிற்குப் போய் 'இதைப் படித்து நீங்கள் எனக்குக் கவிதை எழுத வருகிறதா? என்று சொல்ல வேண்டும்' என்று அவரிடம் பவ்யமாகக் கவிதையை நீட்டினேன்.

அவர் இடதுகை விரல்களால் தாடியை நீவிவிட்டுக்கொண்டே கவிதையைப் படித்துவிட்டு, என்னை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தார். மீண்டும் கவிதையின் மீது பார்வையைப் புதைத்தார்.

கவிதை இதுதான்:

**கடலில் இருந்து**
**கொள்முதல் செய்த தண்ணீரில்,**
**மூன்று அங்குல அளவு**
**இன்று -**
**மேகம் பூமிக்கு வழங்கலாம்**
**என்று**
**வருண தேவன்**
**ஆணையிட்டு செய்த**
**கையெழுத்துத்தான்....**
**அதோ!**
**அந்த மின்னல்**

படித்த கவிதையை மடித்து வைத்துக்கொண்டு அவர் சற்று அதட்டலாக என்னைக் கேட்டார்.

"படவா ராஸ்கல்! இது நீ எழுதின கவிதை தானா? நிஜத்தைச் சொல்லணும்...."

"சார்! சத்தியமா நான் எழுதினது தான்... நீங்க எக்ஸிக்யூடிவ் ஆபீசரா வேலெ பாக்குற பெருமாள் மேல் ஆணை...! என்று என் தன்மானம் பீறிட நான் சற்றுத் துடுக்காகவே பேசினேன்.

"இப்போ என்னை செய்யுறே?" என்று அவர் சிறிது சாந்தமாகக் கேட்க ஆரம்பித்தார்.

"எஸ்.எஸ்.எல்.சி.முடித்துவிட்டு இன்ஸ்டிட்யூட்டில் ஷார்ட்ஹேண்ட், டைப்ரைட்டிங் படிக்கிறேன்....! இருந்தாலும் புத்தி அதுல போக மாட்டேங்கறது சார். கதை கவிதேன்னு...!" என்று நான் சொல்லி முடிப்பதற்குள் அவர் என் தோள் வலிக்கும் அளவிற்கு ஓங்கித் தட்டி.

தமிழ்தான் உனக்கு சோறு போடும். ஆனா அது எப்ப போடும்னு சொல்ல முடியாது! நிறுத்தாதே..."

அன்று இப்படிச் சொல்லி இந்தப் பூனைக்கு மணி கட்டிய புண்ணியவான்தான்,

இன்றளவும் தமிழில் புதுக் கவிதையின் தந்தை என்று போற்றப்படும் பெரியவர் திரு.ந.பிச்சமூர்த்தி.

தொடர்ந்து வரும்....



## புகை எனும் அரக்கன்

"புகைப்பதை விட்டுவிடுங்கள்! நாங்கள் உங்களை முத்தமிடத் தயாராக இருக்கிறோம்" உலகில் புகைத்தலுக்கு எதிராகச் செய்யப்படும் விளம்பரங்களில் இது பிரசித்தமானது. ஆண்கள் புகைப்பதைப் பெருமளவிலான பெண்கள் விரும்புவதில்லை. ஆனாலும் 20 சதவீதமான பெண்கள், ஆண்கள் புகைப்பதையும் தாங்கள்



புகைப்பதையும் விரும்புகிறார்களாம்.

உடலின் எல்லா உறுப்புகளையும் பாதிக்கிற ஒரு பொருள் இருக்கிறது என்றால் அது புகையிலைதான். வாய், உணவுக் குழாய், தொண்டை, நுரையீரல், இருதயம் இங்கெல்லாம் தாக்கத்தையும் புற்று நோயையும் ஏற்படுத்தக் கூடிய சக்தி புகையிலைக்குத்தான் உண்டு. ஆஸ்துமா, இரத்தக்குழாய் அடைப்பு, மாரடைப்பு போன்ற அதிக வியாதிக்குக் காரணம் புகைப்பதுதான்.

சரி இத்தனை ஆண்டு காலம் புகைத்தாயிற்று, இனி நிறுத்தி என்ன பயன்...? பாதிக்கப்பட்டது பாதிக்கப்பட்டதுதானே" என்று யாரும் முடிவு எடுக்கத் தேவையில்லை. புகைப்பதை நிறுத்தினால் நீங்கள் உங்களை மட்டும் காத்துக்கொள்கிறீர்கள் என்று அர்த்தமல்ல, உங்களைச் சுற்றி இருப்பவர்களையும் காப்பாற்றுகிறீர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

## அழகே பேரழகு!




நமது உடலின் ஒவ்வொரு பாகத்திற்கும் இருக்கும் பிரத்தியேக அழகு தனிதான். ஆனாலும் முகத்திலிருக்கும் மூக்கின் அழகு இருக்கிறதே அது தனி அழகுதான். பெண்களிடமும் பெண்களை இரசிக்கும் ஆண்களிடமும் கேட்டுப் பாருங்கள், இந்த மூக்கின் அழகைப் பற்றி.

இந்த அழகு பார்ப்பதற்கு ரொம்ப ஸ்ராங்காக இருப்பது போல் தோன்றினாலும் உள்ளுகுள் மிக மிக மென்மையானது. லேசாக மூக்கில் ஒரு குத்து விட்டாலே பொல பொலவென்று இரத்தம் கொட்டத் தொடங்கிவிடும்.

உலகில் இப்போது மூக்கை பிளாஸ்டிக் சேர்ஜரி செய்யும் ஆர்வம் அதிகரித்துவிட்டது, ஆண்கள், பெண்கள் ம்த்தியில். நமது மூக்கு நமக்குப் பிடிக்காவிட்டால், நாம் விரும்பும் அழகான மூக்கின் மாதிரிகளைத் தேர்ந்து எமது மூக்கை 'அழகுபடுத்திக் கொள்ளலாம், ஓரிரு இலட்சங்களைச் செலவு பண்ணி....

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

# சிந்தித்துப் பார்க்க...

## நான் நம்புவது

மதக் கோட்பாட்டில் நான் நம்பிக்கை வைப்பதில்லை. ஆனால் இது மத நம்பிக்கையின் யுகம். எத்தனையோ மதக் கோட்பாடுகள் காணப்படுகின்றன. தற்பாதுகாப்புக்காக ஒருவர் தனக்கெனவும் ஒரு கோட்பாட்டை உருவாக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. சாதி, சமயக் கொடுமைகளால் துண்டாடப்பட்ட உலகில், அறியாமை அரசோச்ச, ஆள வேண்டிய விஞ்ஞானம் அடிமைச் சேவகம் புரிகிறது. சாந்தம், சகிப்புத் தன்மை, இரக்கம்–உண்மையில் இவை முக்கியம்தான். மனித இனம் சீரழிந்து போகாமல் காப்பதற்குக் காலதாமதமின்றி இவை முன்தளத்துக்கு வரவேண்டுமெனினும் இப்போதைக்கு இவை மட்டும் போதா. இராணுவ பாதரட்சையின் கீழ் மிதிபட்டுத் துவைந்து போன மலரை விட இவை செயல் வலுக் கொண்டனவல்ல. இவை கடினமுறல் வேண்டும் – இதனால் இவை முரட்டுட்தனம் கொண்டாலுஞ் சரி, மத நம்பிக்கையென்பது விறைக்கச் செய்யும் ஒரு போக்காகவே – மனதுக்குரிய ஒரு வகை கஞ்சிப் பசையாகவே – எனக்குப் படுகிறது.

ஆங்கில நாவலாசிரியர் ஈ.எம்.பொஸ்ட்டர்( 1939)
மிற்றுக் கருத்தின் மதிப்பு என்னும் நூலில் இருந்து.

# சிந்தியா பதில்கள்

☞ தமிழ் மக்கள் அனைவரும் கருத்தொற்றுமையோடு பொங்குதமிழ் எழுச்சியைக் காண்பிக்கும்போது சில துரோகிகள் அதை எதிர்த்தும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கிறார்களே?

–சி.பேரின்பன், கந்தளாய் – 02.

*ஒரு பொருள் பற்றி எல்லாத் தரப்புகளிலும் கருத்தொற்றுமை ஏற்படும்போது பாசிசம் சமூகத்தில் கால்பதிக்கிறது. உங்களையறியாமல் அதையே நீங்களும் வரவேற்கும்படி செய்யப்படுகிறீர்கள்.*

❀❑❀

☞ பெண்களிடம் வயதைக் கேட்டால் ஏன் கோபம் வருகிறது?

–க.அஜந்தகுமார், அக்கரைப்பற்று – 07.

*அவர்கள் மறக்க விரும்புவதை ஞாபகப்படுத்தினால்!*

❀❑❀

☞ இளந்தலைமுறையினர் ஃபாஷன் என்று சொல்லி காலத்துக்கொரு கோலம் கொள்கிறார்களே. அந்த அலங்கோலங்களைப் பற்றி...?

–கதிரவேலு தர்ஷன், கல்கிசை.

*ஒஸ்கார் வைல்ட் சொன்னது இது : "ஃபாஷன் என்பது சகிக்க முடியாத அளவுக்கு அசிங்கமானது. அதனால்தான் ஆறு மாதத்துக்கொரு முறை அதை மாற்ற வேண்டியிருக்கிறது."*

❀❑❀

☞ மனித உடலின் முக்கியமான வேலை மூளையைத் தாங்கிச் செல்வதுதான் என்று சொல்கிறார்கள். அதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

–மூ.புனிதன், கோணக்கலை.

*சிலர் உடம்புக்கு அவ்வளவு சிரமமொன்றுமில்லை என்பதை நினைக்கப் பொறாமையாக இருக்கிறது?*

❀❑❀

☞ சமீபத்தில் வந்த தமிழ்ப் படங்களில் இரசித்த படம்?

–பெ.கோகிலன், மேபீல்ட்.

*சகலகலாவல்லவ ஹீரோக்களின் "தாம் தூம் தகிடு தித்தங்களால்" கதிகலங்கிப் போயிருந்த வேளையில் தாதா அட்டகாசங்களை விலக்கி சாதா கதையுடன் வந்திருக்கும் 'பார்த்திபன் கனவு' ருசித்தது. இரண்டு வேடங்களையும் வித்தியாசப்படுத்திய நடிப்பில் "இதோடா, பொம்பளை கமல்ஹாசன்!" என்று வியக்க வைத்த சினேகாவுக்கும், ஒரே பாடலில் தமிழ்ப்படக் காதல் பாட்டுக்களின் பல்வேறு காலகட்டங்களையும் பார்த்து இரசிக்க வைத்த இயக்குநர், இசையமைப்பாளர், நடன இயக்குநர் ஆகியோருக்கும் சபாஷ்.*

❀❑❀

☞ முதலில் மெல்ல மெல்லச் சர்வதேசத்தின் கருத்தை நம் சார்பாகத் திருப்புவதும், அந்த வளர்ச்சிப் போக்கின் இறுதிக் கட்டங்களில் அரசியல் சாசனத் திருத்தங்களை நிறைவேற்றச் செய்வதும் தானே, சண்டையைத் தவிர்த்த ஒரு சமாதானத் தீர்வைக் கொண்டுவருவதற்கான உபாயமாக இருக்க முடியும்? இதை ஏன் யாரும் வற்புறுத்திச் சொல்ல முடியாமலிருக்கிறார்கள்?

–தமிழ் மகன், யாழ்ப்பாணம்.

*நம்மைப் போலவேதான் எல்லோருக்கும் உயிர்ப் பயம்தானோ என்னவோ!*

❀❑❀

☞ காதலைப் பற்றிய கவிதை வரிகளில் உங்களுக்குப் பிடித்த வரிகள்?

–மனோகோபாலன், ஹப்புத்தளை.

*காதலின் குணத்தை முழுவதுமாக அடக்கி பாரதிதாசன் தந்த இருவரிகள் : "காதல் அடைதல் உயிரியற்கை. அது கட்டுக்குள் அடங்கிவிடும் தன்மையதோ?"*

❀❑❀

☞ காதலர்களிடையே பொய் சகஜமாகப் புழங்குவது ஏன்?

பா.ஜனார்த்தனி, பெரியகல்லாறு – 02.

*அவர்கள் மெய் மறந்து காதலிப்பதால்.*

❀❑❀

☞ நடந்து வந்த பாதையை ஏன் திரும்பிப் பார்க்க வேண்டும்?

–ஏ.வசீகரன், கொழும்பு – 11.

*இற்றைக்கு 13 வருடங்களுக்கு முன் - இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய அமைதிப் படையைத் திருப்பி அனுப்புவதற்காகப் புலிகளுடன் கை கோர்த்துக்கொள்கிறார் அரசுத் தலைவர் பிரேமதாச. இரு தரப்பினரும் தங்கள் தங்கள் நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்காக சுமார் ஒரு வருட காலம் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகிறார்கள். விருந்துபசரிப்பினாலும், "கொள்கைக்காகப் போராடும் தீரர்கள் நீங்கள்" என்று பேசியும் புலிகளைக் குளிரவைக்கிறார் பிரேமதாச. அவர்கள் கேட்ட ஆயுதத் தொகுதிகளையும் முல்லைத்தீவுக் காட்டுக்கே கொண்டு சென்று கொடுக்கிறார். "எப்படியாவது புலிகளை ஜனநாயக வழிக்குக் கொண்டுவந்துவிட்டால் இந்தியப் படை, ஜே.வி.பி., அத்துலத் முதலி, காமினி திசாநாயக்கா போன்ற நெருக்கடிகளி லிருந்து தன்னையும் தனதரசையும் மீட்டுவிடலாம்" என்று அவர் நினைக்கிறார். விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி என்ற பெயரில் புலிகளின் அரசியல் கட்சியையும் பதிவு செய்யும்படி செய்துவிடுகிறார். "இந்தியப் படையை வெளியேறச் சொல்லிப் பிரேமதாச வலியுறுத்த வேண்டும்" என்று புலிகள் கேட்டுக்கொள்கிறார்கள். 1990 மார்ச்சில் இந்தியப் படை வெளியேறுகிறது. இரு தரப்பும் ஆசுவாசப்பட்டுக்கொள்கிறார்கள். புலிகள் வடக்கு-கிழக்கு நிர்வாகத்தைக் கேட்கிறார்கள். பிரேமதாச "ஆகட்டும்" என்கிறார். பேச்சு தொடர்கிறது. "ஆறாவது திருத்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும்" என்கிறார்கள் புலிகள். "அதற்குப் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை தேவை. புலிகள் அதைப் புரிந்துகொள்ள வேண்டும்" என்று எதிர்பார்க்கிறார் பிரேமதாச. "புலிகள் விரும்பும் அதிகாரங்களை மாகாண சபை அமைப்பின் மூலமே தந்துவிட முடியும்" என்று பேச்சைத் தொடரப் பகீரத முயற்சி செய்கிறார் தொடர்பாளரான அமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீட்.*

*புலிகள் இரண்டாம் கட்ட ஈழப் போரை ஆரம்பிக்கிறார்கள்.*

*"எங்களுக்குப் போர்தான் வேண்டும். அது தவிர்க்க முடியாதது. அதை வீர்முடன் தொடர்வோம்!" என்பதாக அங்காங்கே தமிழ் மக்களின் எழுச்சி ஊர்வலங்களும், பத்திரிகைகளும் சொல்லத் தொடங்குகின்றன.*

❀❑❀



ஸ்ரீகாந்த்-சிநேகா படம்:- 'பார்த்திபன் கனவு'

☞ இறந்தவர்களைப் பற்றி எல்லோரும் புகழ்ச்சியாகவே பேசுவது ஏன்?

–பெ.விக்னேஸ்வரன், ஹட்டன்.

*தொந்தரவு தர இனி அவர் வரவே போவதில்லை என்ற ஆசுவாசத்தில்தான்.*

*வோல்டேருக்கு கொஞ்சம்கூடப் பிடிக்காத, எதிரியாகவே நடந்துகொண்ட நபர் ஒருவர் இறந்துவிட்டார் என்று யாரோ வந்து அவருக்குச் சொன்னார்கள். வோல்டேர் உடனே மிக நெகிழ்வோடு சொன்னார் : "அவரைப் போல நல்ல மனிதரைப் பார்க்க முடியாது. மிகவும் பெருந்தன்மையானவர். நம்மிடையே கருத்து வேறுபாடு இருந்தபோதிலும் மிக்க பண்பாகவே நடந்துகொண்டார்" என்றெல்லாம் குறிப்பிட்டுவிட்டு கடைசியாக, "நான் சொன்னதெல்லாம் உண்மையிலேயே அவர் இறந்துவிட்டார் என்றால்தான் பொருந்தும். ஒரு வேளை அவர் உயிரோடிருந்தால், அவரைப்பற்றிச் சொன்னதையெல்லாம் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்" என்றார்.*

❀❑❀

☞ "இத்துனூண்டு" "இங்கிலீசு" உங்கள் இஷ்டம் எது?

–எஸ்.ராஜ்குமார், பூந்தோட்டம்.

*தருபவரின் இஷ்டம் எதுவானாலும்!*

❀❑❀

☞ சிந்தியா, நான் விரைவில் வெளிநாடு செல்லவுள்ளேன். எனக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

–எஸ்.எச்.எம்.றியாஸ், கல்முனை – 08.

*திரவியம் தேடுக, திரும்பியும் வருக!*

❀❑❀

☞ நிலமை, நிலைமை இரண்டு மாதிரியும் பத்திரிகைகளில் வருகிறது. எது சரி?

–எஸ்.சுதாஷ், பூண்டுலோயா.

*நிலைமை.*

❀❑❀

☞ உங்கள் பார்வையில் நல்ல மனிதர் யார்?

–ஷர்மிளா பரீட், கலேவெல.

*தன்னைக் குறித்தும் சிரிக்கத் தெரிந்த எல்லோரும் .*

❀❑❀

# இலக்கிய நயம்

## உயிரை உறிஞ்சும் உதடுகள்! வதைக்கும் வளைவு நெழிவுகள்!!

தருவது முழடில்யன்

படுக்கையில் புரண்டு படுத்தான் நீலாம்பரன். தூக்கம் வர மறுத்தது. தலையணையில் கை முஷ்டியால் குத்தினான். தேவையில்லாதவை என்று அவன் எண்ணியிருந்த பல எண்ணங்கள் திரும்பத் திரும்ப வந்து அவனைத் திக்குமுக்காட வைத்தன.

"சே, என்ன இது!" என்று எரிச்சல் பட்டவனாக எழுந்து உட்கார்ந்துகொண்டான்.

எப்போதும் இரவில் படுக்கப் போகும்போது, மாலை விளையாட்டில் ஏற்பட்ட வெற்றி தோல்விகளும், நாளைய விளையாட்டைப் பற்றிய யோசனைகளுமே அவனை அலைக்கழித்திருக்கின்றன. இப்போது இது என்ன புதிதாய் பெண்கள்!

"பெண்" என்ற வார்த்தையே மனசுக்குள் ஒரு கிசுகிசுப்பை, சிலிர்ப்பை உருவாக்கிக்கொண்டிருந்தது. எண்ணும்போதெல்லாம் அவனை உன்மத்தனாக்கும் பெண்ணுடல்கள் வரிசையாக வந்து போயின. புன்னகைத்த இதழ்கள் தீக்குச்சி கிழித்து அவன் மூளைக்குள் எறிந்தன. எப்போதோ திறந்து மூடிய இமைகள் இப்போதும் அவன் இதயத்தைத் தோண்டுவதை உணர்ந்தான்.

நீலாம்பரன் எழுந்து அறைக்குள்ளேயே நாலைந்து அடிகள் நடந்தான். யார் இது மனதைப் பிறாண்டும் குரலில் இதயத்தினுள்ளிருந்து அழைத்துக்கொண்டிருப்பது?

பெண் எப்படித் திடீரென்று உலகின் முக்கிய வஸ்துவாகிப் போனாள்?

பெண் என்ற மாயக் கனவு, மனசின் மென்மை இடுக்குகளில் எல்லாம் எப்படி இரகசியமாய் வந்து நிறைந்துகொண்டது?

தலையைக் கைகளால் அழுத்திப் பிடித்துக்கொண்டு மீண்டும் படுக்கை விளிம்பில் வந்தமர்ந்தான் நீலாம்பரன்.

உயிரை உறிஞ்சும் உதடுகள், கதறக் கதறத் துரத்திக் கொல்லும் கண்கள், வலியுண்டாக்கித் துடிக்கத் துடிக்க வதைக்கும் வளைவு நெளிவுகள், தனிமை மனசைக் கசக்கி ஊன் வழியவிடும் நளின அசைவுகள், இதயம் கரைந்துகொண்டிருக்கிறதோ என்று நடுங்கும்படியாக என்ன ஏக்கம் இது....

உடல் குலுங்கப் படுக்கையில் குப்புற வீழ்ந்தான்.

அழகான பெண்களுடனெல்லாம் பேச அவாவித் துடிக்கிறது மனம். இருந்தும் பேச முடிந்ததில்லை அவனுக்கு. நண்பர்கள் எப்போதும் பெண்களைப் பற்றியே பேசுகிறார்கள். துணிச்சலான காரியங்களை விவரிக்கிறார்கள். அவன் ஏக்கத்தை அதிகப்படுத்தும் அதிசூர சாகசக்காரர்களாயிருக்கிறார்கள் அவர்களெல்லோரும்.

இவனால் அழகான பெண்களின் விழிகளைக் கூடத் தன் கண்களால் ஸ்பரிசிக்க முடியாத சங்கோஜம்...பெண்ணின் அருகாமை இவனைப் பதற வைக்கிறது. அவர்கள் தன்னைப் பார்க்கிறார்கள் என்று கருதிக்கொள்வதில் போதை இருந்தாலும், அவர்களைப் பதிலுக்கு ஏறிட முடியாத பரிதாபகரமான கோழைகள் இவன் கண்கள்.

ஏகாந்தமான இரவுப் பொழுதுகளோ இவனைப் புரட்டி எடுக்கின்றன. யாரோ ஒருத்தியை மனசுக்குள் பொத்தி வைத்து இரகசிய பூஜை செய்யும் வேட்கை நீலாம்பரனுக்கு குற்றவுணர்வை மிஞ்ச வைக்கிறது. எங்கோ தனக்காகவே பிறவியெடுத்து,



தனக்காகவே பிறவியெடுத்து தனக்காகவே செழிப்படைந்திருக்கும் அழகிய மெல்லுடலை மேலும் அழகிய ஆடைகளுக்குள் பாதுகாத்து, ஈரக் கூந்தலை வாரி விரித்துவிட்டு, பொட்டிட்டு, உதடுகளில் ஈரலிப்பையும், கண்களில் உயிரையும் தேக்கி, தனக்கெனவே காத்திருக்கும் அந்த எவளோ ஒருத்தியை மனம் இறைஞ்சியது.

அவள் ஏன் இன்னும் தன்னைச் சந்திக்கவில்லை? ஒரு வேளை சந்திக்க நேர்ந்துவிட்டால் நேரில் எதிர்கொள்வது எப்படி என்ற மலைப்பு... அவளைத் தன்னால் கவர முடியுமா? என்று சுய இரக்கம் மேலிட்டது.

அவனது நண்பர்கள் சொல்கின்ற சாகசங்களைப் போல எந்தப் பெண்ணையும் கவர நீலாம்பரனால் முடியவில்லை.

அதற்கான முயற்சியில் இறங்கும் துணிவு.... ஏன் கண்களைப் பார்த்துப் பேசக் கூட அவனால் முடியாது. ஆனால் இரகசியமாய், கண்ணுக்குரியவர்கள் அறியாமல் அவன் அறிந்திருந்த அந்தக் கண்கள் பலவும், இப்படித் தனிமையான பொழுதுகளிலெல்லாம் மீண்டும் மீண்டும் வந்து வலியெடுக்கும்படி குத்தி இம்சித்தன.

புத்தகங்களிலும் பின் கனவுகளிலும் புகுந்து அவனை உலுப்ப ஆரம்பித்துவிட்ட பாலுணர்ச்சியை வேண்டாமென்றாலும் விலக்க முடியவில்லை. இனம் காண முடியாத ஏக்கமாக அடிமனதில் கிடந்து புரள்கிறது. அவன் வளர்ந்த முறையோ பாலுணர்வே பாவம் என்ற குற்றவுணர்வை உண்டாக்கி வைத்திருந்தது.

ஆனாலும் பாவத்தின் மீதான தீராத வேட்கை.....

பெண் சுகம் என்பதே தன்னால் எட்ட முடியாத ஒரு இருட்குகைக்குள் அடைத்து வைத்திருக்கும் ஒரு மாயச் சிமிழாய் உணர்ந்தான்.

"சே, என்ன நரகம் இது!" என்று சலித்துக்கொண்டபடி எழுந்து உட்கார்ந்தான்.


வெளியில் பெய்யும் பனியின் சீதளம் அவனுடலில் ஈட்டிகளை வீசியது. அதை விடக் கொடிய ஈட்டிகளை அவன் சிந்தை வீசியது. உடலைச் சல்லடையாக்கி நைந்து போகச் செய்யும் ஈட்டிகள்!

இரண்டு கொம்பன் யானைகள் எதிரெதிரே இழுத்துக்கொண்டிருக்கும் தேய்ந்த புரிகளையுடைய பழங்கயிறு, இற்று அறுந்துகொண்டிருப்பது போல வருந்தித் துடிக்கும் தன் உடம்பைப் பார்த்தான் நீலாம்பரன். "அந்தத் தேய்புரிப் பழங்கயிறு போல அழிய வேண்டியதுதானா? இது என்ன இந்த இளமையின் கொடுமை!" என்று நொந்தான்.

சிறிதுநனி விரையல் என்னும்
ஆயிடை ஒளிறு ஏந்து மருப்பிற்
களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறுபோல
வீவது கொல் என்
வருந்திய உடம்பே.

(நற்றிணை : 284 : 8-11)

## அரசியல் வாதியாகிறார் 'டேமினேட்டர்'



இந்தியாவைப் போலவே இப்போது அமெரிக்க நடிகர்களுக்கு அரசியல் ஆசை தொற்றிக்கொண்டது போல் தெரிகிறது.

ஹொலிவுட் நடிகர்களில் முன்னணியில் இருப்பவர் ஆர்னோல்ட் ஸ்வானகர். இவரது டேமினேட்டர் திரைப்படத் தொடர் மிகவும் பிரபலமானது.
இந்த சினாமா தொடரின் 3 ஆவது பகுதியான ரைஸ் ஒ·.ப் தி மெஷின் (Rise of The Machines) தற்போது ஹொலிவூட்டில் திரைக்கு வந்துள்ளது.

இந்தப் படத்தின் நாயகன் ஆர்னோல்டின் வாழ்வோடு தொடர்புடைய மற்றொரு முக்கிய நிகழ்வும் அரங்கேறுகிறது.

இவர் அமெரிக்க அரசியலில் தடாலடியாகப் புகுந்து விளையாடத் திட்டமிட்டிருக்கிறார்.

விரைவில் நடக்கவிருக்கும் கலி·.போர்னியா மாநில சட்டமன்றத் தேர்தலில் ஆர்னோல்ட் ரிபப்லிகன் கட்சியின் சார்பில் போட்டியிட உள்ளார்.

செனட்சபை உறுப்பினரான எட்வட்.எம். கெனடியின் உறவுப் பெண் ஒருவரைத்தான் ஆர்னோல்ட் திருமணம் செய்திருக்கிறார்.

ஆனால் தமது உறவினர் என்றாலும் தேர்தலில் அவருக்கு ஆதரவளிக்கப்போவதில்லை எனக் கூறுகிறார் எட்வட் கெனடி. ஆர்னோல்ட் எத்தனை திறமையான நடிகர் என்றாலும் அரசியல் செயற்பாடுகள் இவரைப் போன்றவர்களை மையமாக வைத்து நடப்பதில்லை என்று சொல்கிறார் கெனடி.



## நாய்ப் பாசம்

பெற்ற குழந்தைகளையே வீதியில் வீசிவிட்டுப் போகும் இந்தக் காலத்தில் தனது செல்லப் பிராணியை நெஞ்சோடு சேர்த்து தொங்கவிட்டுக்கொண்டு போகிறார் இந்த அமெரிக்க இளைஞர்.

## நெடுமலைநந்து

### விலை கொடுத்து வாங்கும் ஆபத்து






இந்த அவுஸ்திரேலிய மலையேறும் குழுவினருக்கு ஒரு அட்டகாசமான ஆசை. நூற்றுக் கணக்கான மீட்டர் உயரமான பாறையில் தொங்கிக்கொண்டே ஒரு வேளை உணவருந்தவேண்டும் என்பது இவர்களது பல நாள் கனவு. கயிற்றில் தொங்கிக்கொண்டே மலையின் நடுப்பகுதியில் அமர்ந்து வைன் அருந்தி உண்டு களித்தார்கள். இது வெறுமனே ஜாலிக்காக மட்டும் செய்த காரியம் அல்ல. சிறுவர் நலன்புரிச் சேவையொன்றிற்கு நிதி சேர்க்க எடுத்த நல்ல முயற்சிதான்.

## டெஸ்ட் தொடரில் இலங்கைக்குத் தோல்வி

இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இலங்கை-மேற்கிந்திய தீவுகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரை மேற்கிந்திய தீவுகள் அணி தனதாக்கிக் கொண்டது.

முதல் டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

கிங்ஸ்டனில் நடந்த இரண்டாவது போட்டியில் முதல் இனிங்ஸில் இலங்கை அணி 208 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதில் குமார் சங்கக்கார 75 ஓட்டங்களைப் பெற்றார். மேற்கிந்திய தீவுகள் அணி முதலாவது இனிங்ஸில் 191 ஓட்டங்களைப் பெற்றது. பிரபாத் நிஸ்ஸங்க 64 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். இரண்டாவது இனிங்ஸில் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்கள் மீண்டும் செயலிழந்தனர். 191 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இலங்கை அணி இழந்தது.



ராம்நரேஷ் ஷர்வான்

ராம்நரேஷ் ஷர்வானும் (82) பிரெய்ன் லாராவும் (80) 3வது விக்கெட்டுக்காக 161 ஓட்டங்களைக் குவித்தார்கள்.

மூன்று விக்கெட் இழப்பிற்கு தனது இலக்கை அடைந்தது மேற்கிந்திய தீவுகள் அணி.

## மைதானத்திலிருந்து ரீ.வீ.க்குத் தாவும் ஷேன்வோன்

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுபவர்கள், இடைநடுவில் குற்றச்சாட்டுகளின் பேரில் விலக்கப்படுபவர்கள் எல்லோருக்கும் புகலிடம் வழங்க தொலைக்காட்சி நிறுவனங்கள் காத்திருக்கின்றன. கடந்த உலகக் கிண்ணப் போட்டியின்போது ஊக்க மருந்து பாவித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு ஒரு வருட காலப் போட்டித் தடைக்கு உள்ளாகியிருக்கும் அவுஸ்திரேலிய அணியின் சுழல் பந்துவீச்சாளர் ஷேன் வோன் ரி.வி. வர்ணனையாளராக வேலை செய்யப் போகிறார்.



செனல் 9 அவுஸ்திரேலிய தொலைக்காட்சி இவரை அழைத்திருக்கிறது. அடுத்து வரும் அவுஸ்திரேலியா பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான போட்டித் தொடரில் ஷேன்வோன் வர்ணனையாளராகப் பணியாற்றுவார். இதற்கெனப் பல இலட்சம் டொலர் பெறுமதியான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது.

அவுஸ்திரேலியா சென்றுள்ள பங்களாதேஷ் அணி இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் மூன்று ஒரு நாள் போட்டிகளிலும் விளையாட உள்ளது.

<u>ஒரு கொசுறு தகவல்</u>

கிரிக்கெட் உலகின் ஜாம்பவான்களான அவுஸ்திரேலியாவுடன் பங்களாதேஷை மோத விட்டதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் டெஸ்ட் போட்டிகளின் ரெக்கோட்களைக் கேலிக்குள்ளாக்கிவிட்டதாக முன்னாள் அவுஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர் டெனிஸ் லில்லி கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறார். ஐ.சி.சி. தலைவர்களைப் பணத்தாசை பிடித்த கும்பல் என்று வர்ணித்திருக்கும் ரிச்சட் லில்லி தோல்வியைத் தவிர வேறெதனையும் அறியாத பங்களாதேஷ் அணியுடன் அவுஸ்திரேலியாவை மோத விடுவதன் மூலம் தொலைக்காட்சி ஒளிபரப்புகளின் ஊடாகப் பணம் சம்பாதிப்பதைத் தவிர வேறெதனையும் சாதிக்க முடியாதென்று கூறியிருக்கிறார். 19 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 18 போட்டிகளில் பங்களாதேஷ் தோல்வி அடைந்திருக்கிறது. ஒரு போட்டி மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டதால் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. அவஸ்திரேலியா கிரிக்கெட்டைப் பற்றித்தான் தெரியுமே!

## நெஞ்சைப் பதைக்க வைத்த உதை!

உதைபந்தாட்டப் போட்டி நடந்துகொண்டிருக்கும் சமயம் மைதானத்தில் ஆடிக்கொண்டிருந்த வீரர் திடீரென விழுந்து மாரடைப்பினால் உயிரிழப்பாரானால் சக வீரர்களதும் பார்வையாளர்களதும் மனநிலை எப்படி இருக்கும்? பிரான்ஸ் உதைபந்தாட்ட இரசிகர்களுக்கு இப்படியான ஒரு வித்தியாசமான மனநிலைக்கு முகம் கொடுக்கும் சந்தர்ப்பம் கடந்த வாரம் ஏற்பட்டது.



கொன் பெடரேசன் கப் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கெமரூன் - கொலம்பியா நாட்டு அணிகளுக்கிடையிலான போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடந்துகொண்டிருந்தது. அப்போது போட்டியின் 72வது நிமிடம். கெமரூன் அணியின் மாக் விவியன் என்ற வீரர் நெஞ்சைப் பிடித்துக்கொண்டு மைதானத்தில் அப்படியே விழுந்தார். சில செக்கன்கள் வரை நடுவருக்குக் கூட என்ன நடந்தது என்பதைக் கிரகிக்க முடியவில்லை. மாக் விவியனால் பேச முடியவில்லை. கடும் வலி காரணமாகக் கண்கள் சொருகியிருந்தன. அவசரமாகச் சிகிச்சை அளிக்கப்பட்டது. மருத்துவர்களின் 45 நிமிடப் போராட்டத்திற்குப் பின்னர் இந்த வீரரின் உயிர் பிரிந்தது.

"எனது கணவர் மைதானத்தில் வீழ்ந்தபோது இறந்து விடுவார் என்று நான் கொஞ்சமும் நினைக்கவில்லை. சற்று நேரத்தில் சரியாகிவிடும் என்றுதான் கருதினேன். ஆனால் சோகம் நிகழ்ந்துவிட்டது" என்று கண்ணீருடன் கூறுகிறார் விவியனின் மனைவி.

இப்படிப் போட்டியின் இடைநடுவில் ஒரு வீரர் உயிர் இழப்பது மிகவும் அரிதாக நடக்கும் சம்பவம்.

இந்த கெமரூன் நாட்டு வீரர் அங்கே மிகவும் பிரபல்யமானவர். எவ்வாறாயினும் இந்தப் போட்டியில் கெமரூன் அணி வெற்றி பெற்றது. போட்டியின் முடிவில் அவ் அணி வீரர்கள் மைதானத்தின் ஓரங்களில் ஆங்காங்கே அழுவதைக் காணக் கூடியதாக இருந்தது.

பிரான்ஸ்"டன் இறுதிப் போட்டியில் ஆடுவதை கெமரூன் நிராகரிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## என்றோ எழுதிவைக்கப்பட்ட உலகின் தலைவிதி

**19**

நொஸ்ரடாமஸ் பல நாடுகளைப் பற்றியும் தன்னைச் சார்ந்தவர்கள் பற்றியும் அறிந்து கூறும் அற்புத ஆற்றல் படைத்தவராயினும் அவர் ஒரு மனிதர். எனவே பூமியில் பிறந்த ஒவ்வொரு மனிதரும் அநுபவிக்க வேண்டிய இன்ப துன்பங்களையும் சுக துக்கங்களையும் அநுபவித்தார் என்பதை மறுப்பதற்கில்லை. இவர் சில சந்தர்ப்பங்களில் நோய்வாய்ப்பட்டுள்ளார். 1566ம் ஆண்டு ஜுன் மாதம் அவர் படுக்கையில் விழுந்தார். ஜுலை முதலாம் திகதியன்று அவர் வாழ்ந்து வந்த ஊரின் மதகுருவை அழைத்து, தான் அடுத்த நாள் உதயத்தைக் காண உயிருடன் இருக்கப்போவதில்லை என உறுதியாகக் கூறி, தனக்கு அவஸ்தை பூசுதல் அளிக்கும்படி கேட்டுக்கொண்டார். குருவானவர் அவ்வாறு பூசுதல் கொடுத்த பின்னர் அமைதியாக உறங்கப் போனார். அன்று நள்ளிரவில் அமைதியாக அவர் உயிர் பிரிந்தது.

இத்தனை சான்றுகள் தந்ததன் பின்னர் வாசகர்களுக்கு எழும் ஐயம் நீங்கியிருக்கும் என்ற நம்பிக்கையுடன் கட்டு

## நொஸ்ரடாமஸின் அதிசய ஆரூடங்கள்

ரையைத் தொடர்கிறோம்.

இந்திய உபகண்டத்திலிருந்து பாகிஸ்தான் பிரிந்ததைப் பற்றியும், இரு தனித்தனி மாநிலங்களாக ஒன்றுடன் மற்றொன்று தரைமார்க்கமான தொடர்பு எதுவுமில்லாதிருந்த அவ்விரு மாநிலங்கள் தங்களுக்கிடையிலான அரசியல் தொடர்புகளையும் பிரித்துக்கொண்ட வரலாற்றையும் ஏற்கனவே இத் தொடரில் எடுத்துக் கூறியிருந்தோம்.


இந்தியப் பிரதமராக அமரர் இந்திரா காந்தி இருந்தபோது அவருடைய பேருதவியினால் கிழக்குப் பாகிஸ்தான், பங்களாதேசம் என்ற பெயரில் தனி நாடாகத் தோற்றமெடுத்த வரலாற்றையும் பார்த்தோம். இப்பொழுது பங்களாதேசம் உருவாவதற்கு உறுதுணையாக விருந்த காரணங்களை நொஸ்ரடாமஸ் எதிர்வு கூறலின் அடிப்படையில் ஆராய்ந்து பார்ப்போம்.

இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் தனிநாடாகப் பிரிவதற்கு முன்னால், வட இந்தியாவில் வாழ்ந்த பெரும் புலவர் இக்பால் என்பவர் தன்னுடைய கற்பனையில் பாகிஸ்தான் என்றொரு நாட்டைக் கண்டார். அப் புலவர் பெருமானின் கனவை முகம்மதலி ஜின்னா அவர்கள் நனவாக்கினார். மகாத்மா காந்தி இந்திய தேசத்தின் தந்தை எனப் போற்றப்படுவது போல் முகம்மதலி ஜின்னாவை பாகிஸ்தானின் தந்தை என்று அந்நாட்டு மக்கள் ஏற்றிப் போற்றுகின்றனர்.

மேற்கும் கிழக்குமாக - இரு தனிப் பிரதேசங்களாக விளங்கிய பாகிஸ்தானில் அரசியல் நெருக்கடிகள் அவ்வப்போது தோன்றலாயிற்று. மேற்குப் பாகிஸ்தான் மக்கள் தாங்கள் கிழக்குப் பாகிஸ்தான் மக்களை விட உயர்ந்தவர்கள் என்ற இறுமாப்புடன் நடக்கத் தலைப்பட்டனர். மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பது போல் மேற்குப் பாகிஸ்தான் அரசியல் தலைவர்களும் கிழக்குப் பாகிஸ்தான் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற அடிப்படையில் நோக்கத் தலைப்பட்டனர்.

கிழக்குப் பாகிஸ்தானைச் சேர்ந்த ஷேக் முஜிபுர் ரஹ்மான் மக்களிடம் அதிக செல்வாக்குப் பெற்ற அரசியல் வாதியாகத் திகழ்ந்தார். கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் சுயநிர்ணய உரிமை பெறத் தகுதி உடையவர்களே என்ற கருத்தை வலியுறுத்துவதற்காக 1949ம் ஆண்டு 'அவாமி லீக்' என்ற அரசியல் கட்சியைத் தோற்றுவித்தார்.

மேற்குப் பாகிஸ்தானில் கராச்சி நகரில் இருந்த பாராளுமன்றத்தில் அவாமி லீக் கட்சியால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக முஜிபுர் ரஹ்மான் இருந்து வந்தார். கிழக்குப் பாகிஸ்தா



னில் மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்த உரிமைகளைப் பற்றியெல்லாம் பாராளு மன்றத்தில் சான்றுகளோடு விளக்கினார். எனினும் மேற்குப் பாகிஸ்தானிய அரசியல்வாதிகள் பாராமுகமாகவே இருந்தனர்.

நாளாவட்டத்தில் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் தமது உரிமைகளைக் கோரிக் கிளர்ந்தெழுந்து அமைதி வழியில் போராடி வந்தனர். முஜிபுர் ரஹ்மானின் அவாமி லீக் கட்சியும் வளர்ந்தது.

1970 ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் மேற்குப்

**பிரமிக்க வைப்பது**
**ராஜகுமாரன்**

பாகிஸ்தானைச் சேர்ந்த எந்த ஒரு கட்சியாலும் அதிகளவு பெரும்பான்மை வாக்குகளைப் பெற முடியவில்லை. கிழக்குப் பாகிஸ்தானில் முஜிபுர் ரஹ்மானின் அவாமி லீக் மிகப் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று பாகிஸ்தான் ஆட்சியை அமைக்கும் நிலையை அடைந்தது.

மேற்குப் பாகிஸ்தானிய அரசியல் வாதிகள் எவரும் கிழக்குப் பாகிஸ்தானைச் சேர்ந்த ஒருவர் பிரதம மந்திரியாக வருவதற்கு ஒப்புதல் அளிக்க முன்வரவில்லை. ஜனநாயக முறைப்படியான முடிவினை ஏற்காமல் தட்டிக்கழித்தமையினால் கிழக்கில் முஜிபுர் ரஹ்மானின் அவாமி லீக் கட்சியினர் பெரும் கிளர்ச்சிகளில் இறங்கினர்.

மேற்குப் பாகிஸ்தான் தலைவராக விளங்கிய ஸுல்பிகார் அலி பூட்டோ சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றுக்காக முஜிபுர் ரஹ்மானை கராச்சி நகருக்கு வரவழைத்து அவரைச் சிறையிலடைத்தார்.

தங்கள் தலைவரைச் சிறையிலடைத்ததைக் கேள்வியுற்ற கிழக்குப் பாகிஸ்தானிய மக்கள் கொதித்தெழுந்தனர். சட்டம் ஒழுங்கெல்லாம் சீர் குலைந்து போயிற்று. மேற்குப் பாகிஸ்தான் கிழக்குப் பாகிஸ்தானியரை அடக்கி ஒடுக்குவதற்காகப் பெரும் படையைக் கிழக்குக்கு அனுப்பி வைத்தது.

சட்டம், ஒழுங்கினை நிலைநாட்டுவதற்கென அனுப்பி வைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட படையினர் கிழக்குப் பாகிஸ்தானியர்களைக் கொடுமைப்படுத்தினர். இதனைத் தொடர்ந்து கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து பல்லாயிரக்கணக்கில் குடிபெயர்ந்த அகதி மக்கள் இந்தியாவின் மேற்கு வங்காளத்துக்குள் நுழைந்தன.

நாளுக்கு நாள் கிழக்கிலிருந்து இந்தியாவுக்குள் ஊடுருவும் அகதிகள் தொகை அதிகரிக்கவே, நிலைமையைச் சீர் செய்யும் சாக்கில் இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி இந்தியப் படையைக் கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் நலனைப் பேணும் பொருட்டு அனுப்பி வைத்தார். இந்தியப் படைகள் கிழக்குப் பாகிஸ்தான் விடுதலைப் படைகளுடன் இணைந்து மேற்குப் பாகிஸ்தான் படைகளுடன் சண்டையிட்டனர்.

1971ம் ஆண்டின் இறுதியில் பாகிஸ்தான் படைகள் தோல்விகண்டன. பாகிஸ்தான் இராணுவத்தை வழிநடத்திய லெப் ஜெனரல் நியாஸி தலைநகர் டாக்காவில் சரணடைந்தார்.

1972ம் ஆண்டு ஷேக் முஜிபுர் ரஹ்மான் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். கிழக்குப் பாகிஸ்தான் 'பங்களாதேஷ்' என்ற பெயரில் சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. புதிய அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டு முஜிபுர் ரஹ்மான் சர்வாதிகாரமுள்ள ஜனாதிபதியாகப் பதவி ஏற்றார்.

ஷேக் முஜிபுர் ரஹ்மானின் ஆட்சிக் காலத்தில் பங்களாதேஷில் பரவலாக இடம்பெற்ற ஊழல்களால் அந்தச் சுதந்திர வீரர் உயிர் துறக்க நேர்ந்தது. இராணுவத்தினர் புரட்சி செய்து முஜிபுர் ரஹ்மானையும் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் பலரையும் சுட்டுக் கொன்றனர்.

நொஸ்ரடாமஸ், இச் சம்பவம் நடைபெறுவதற்கு நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னரே தனது 4வது தொகுதியின் 52வது நான்கு வரிப் பாடல்களில் பின்வருமாறு கூறியுள்ளார்:

**"முற்றுகையிடப்பட்ட பட்டணத்தில்**
**ஆண்களும்**
**பெண்களும் சுவரோடு**
**மோதவைக்கப்படுவர்.**
**எதிரிகளின் தலைவர் சரணாகதி**
**அடைவார்.**
**படைகளுக்கு எதிரான காற்றுப் பலமாக**
**வீசும்**
**சின்னாபின்னப்பட்டுப் புழுதியாகவும்**
**சாம்பராகவும் துரத்தியடிக்கப்படுவர்."**

(பிரமிப்புகள் தொடரும்)

## காதிலை பூ கந்தசாமி

### நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

நானும் ஒரு ஜேர்னலிஸ்ட். எத்தின நாள்த்தான் சுத்திச் சுத்தி ஒரே முஞ்சிகளிட்டப் பேட்டி எடுக்கிறதெண்டு யோசிச்சுக் கொண்டு கால் போன போக்கில போனன். அப்பதான் ஒரு வித்தியாசமான ஆள் கண்ணில எத்துப்பட்டார். ஆள் இருந்த இடமும் வித்தியாசம். களனிப் பாலத்துக்குக் கீழ பதுங்கியிருந்தார்.

உவர்தான் பேட்டிக்குச் சரியான ஆசாமியெண்டிட்டு ஆள மேல வரச் சொன்னன்.

"மாட்டன், நான் இங்கயே இருக்கிறன் விடு" எண்டிட்டுது மனிசன்.

"அடேயப்பா! நான் ஒண்டும் பண்ணப் போறதில்லை, சும்மா ஜேர்னலிஸ்ட் எண்ட பேருக்கு நாலு கேள்வியக் கேட்டு விடையையும் நானே சொல்லி உன்ர பெயரில போட்டிட்டுப் போறன்" எண்டு கெஞ்சிக் கூத்தாடின பிறகு,

"நான் ராணுவமுமில்லை, பொலிஸுமில்லை, அரசியல்வாதியுமில்லை, போராளியும் இல்லை. போராளியின்ர பெயரில பொலிட்டிக்ஸ் நடத்திற பெருச்சாளியுமில்லை" எண்டு நூற்றியெட்டுப் புறொமிஸ் வாங்கிக்கொண்டு தான் ஆள் வெளியால வந்துது.

"அண்ணை உங்கட பெயரென்ன" எண்டு வழக்கமான றெடிமேட் கேள்வியக் கேட்டன். ஆளின்ர முதலாவது பதிலே என்னைத் தூக்கிவாரிப் போட்டுது. கையில கிடந்த டேப்ரெக்கோடர ஒருக்கா கீழ விழுத்தி எடுத்துப்போட்டு, திரும்பவும் கேட்டன், அதே கேள்விய.

"என்ர பெயர் சமாதானம்."

ஆள ஏற இறங்க ஒருக்கா உச்சி முதல் உள்ளங்கால் வரை பாத்தன். வலுவா மெலிஞ்சுபோய், வாடிய பயிரைக் கண்டு வாடிய வள்ளலாரை விட வாடிப்போய் இருந்தார்.

"ஏனண்ணை! உண்மையாவே நீங்கள் தான் சமாதானமோ? அப்ப ஏனண்ணை உந்தப் பாலத்துக்கடியில போய்ப் பதுங்கியிருக்கிறியள்" எண்டன்.

"எனக்கு உள்ளதுக்குள்ள பாதுகாப்பான இடம் இதுதான் . வெளியால தலை காட்ட ஏலேல்லை. வடக்கு, கிழக்கு, தெற்கு எந்தப் பக்கமும் கால் வைக்க ஏலாமல் கிடக்கு. எப்ப வெடி விழுமெண்டு பயந்துபோய் பாலத்துக்கு அடியில பதுங்கிக் கிடக்கிறன்."

"என்ன கதையிது? உங்களையெல்லோ, நாடு முழுவதும் செங்கம்பளம் விரிச்சு வைச்சு, "வாராயோ, வாராயோ" எண்டு வேண்டி நிக்குது. நீங்கள் ஏதோ, யமனைக் கண்ட மார்க்கண்டேயன் மாதிரி மருண்டு போய் நிக்கிறியள் பாலத்தைக் கட்டிப் பிடிச்சபடி" எண்டு கேட்டன்.

"ஐயோ தம்பி, உந்தப் புலுடாவ நீரும் நம்பிட்டீரே? யார் தம்பி உள்ளபடி உண்மையா நான் வரவேணுமெண்டு இப்ப நினைக்கிறான். எல்லாரும் என்ர பெயரைச் சொல்லித் தங்கட காரியத்தை ஒப்பேத்திப் போட்டாப் போதுமெண்டெல்லே பாக்கிறாங்கள்" எண்டார் ஒரு பெருமுச்சோட.

"ஏனப்பிடிச் சொல்லுறியள். அரசாங்கமே சமாதானத்துக்குத்தான் தன்னை அர்ப்பணிச்சிருக்குதெண்டுது. போராடிறவையும் தாங்கள் சமாதானத்துக்காகத்தான் போராடுறமெண்டினம். அவையோட ஒத்தூதிறவையும் சமாதானத்துக்காகத்தான் ஊதினமெண்டினம். இவைய விட எதிர்க் கட்சிக்காறரும் தாங்கள் தான் முதலில சமாதானத்தைப் பற்றிப் பேசினவை, திரும்ப வந்தாலும் சமாதானம்தான் பேசுவினமெண்டினம். நீங்களென்னடாவெண்டால், இப்பிடிச் சொல்லுறியளே" எண்டன்.

அவர் ஒரு இளக்காரச் சிரிப்போட சொன்னார், "சண்டை பிடிச்சாலும் சிலவேளை சமாதானம் வரலாம். ஆனால் சமாதானம் எண்டு சொல்லிக்கொண்டு, சமாதானத்துக்குப் புதைகுழி தோண்டிற வேலைகளால சமாதானம் வரவே வராது" எண்டிட்டார் ஒரேயடியா.

"அப்பிடிச் சொல்லிப்போடாதேங்கோ. நீங்கள் வரவேணுமெண்டுதானே இந்தப் பாடு பட்டு, யுத்த நிறுத்தம், புரிந்துணர்வு ஒப்பந்தம், பேச்சுவார்த்தை எண்டெல்லாம் தடல் புடலா நடந்தேறினது. கடைசிக் கட்டத்தில நீங்கள் போய் உப்புடி மதகுக்குள்ள ஒளிஞ்சால் முறையோ" எண்டன்.

"யுத்த நிறுத்தம் வந்துது, ஆனால் யுத்தத்துக்கான தயாரிப்புகள் நிண்டதா? எத்தின சவம் இந்தச் சமாதான காலத்தில விழுந்திட்டுது? அடுத்த யுத்தம் வந்தா இன்னும் மோசமா நடக்குமெண்டுதான் இப்ப நிலவரம் இருக்கு. புரிந்துணர்வு ஒப்பந்தம் வந்துது. புரிந்துணர்வு வந்துதா? அரசாங்கம் ஏமாத்துதெண்ட சந்தேகம் அவைக்கும், அவை ஒப்பந்தத்தைப் பாவிச்சு யுத்தத்துக்குத் தயாராகினமெண்ட சந்தேகம் இவைக்கும் வலுத்ததுதான் மிச்சம். பேச்சுவார்த்தை என்னாயிட்டுது, பேச்சுமுச்சில்லாமல் போயிட்டுது. என்னண்டப்பா சமாதானம் வரும்" எண்டு கேட்டார் மனிசன். கேள்வி கேட்டே பழகிப்போன எனக்குப் பதில் எப்பிடி வரும்? திரும்பவும் ஒரு கேள்விதான் வந்திச்சுது.

"ஆனால்ப் பாருங்கோ, சமாதானம் வரவேணுமெண்டுதான உந்த என்.ஜி.ஓக்கள் எல்லாம் புத்தம் புது லக்சறி ஜீப்புகள வாங்கி விட்டுக்கொண்டு ஒண்டோட ஒண்டு உரசுப்படாத குறையா வீதிவழிய ஓடித் திரியினம்" எண்டன்.

"சமாதானம்தான் இப்ப உவை தரவளிக்கு நல்ல வியாபாரச் சரக்கு. தங்கக் கரண்டி வாங்கிக் கஞ்சி அள்ளி ஊத்திப் போட்டுக் கணக்கு முடிச்சால் தானம் சனத்துக்கு தனம் தங்களுக்கு. இவைதான் சமாதான யாபாரிகள்" எண்டு நக்கலாய்ச் சிரிச்சார்.

கடைசியாக் கேட்டன்,

"சரி! பத்திரிகைகள் சமாதானத்துக்குக் குரல் குடுக்காதெண்டிறியளே?"

அவர் பாத்த பார்வையே ஏதோ கரப்பான் பூச்சியப் பாத்த மாதிரி இருந்துது.

"பத்திரிகைகளா? ஒருத்தன் சூடுபட்டுக் கிடந்தால் ஆளக் காப்பாத்திறத விட்டிட்டு, படமெடுத்துச் செய்தி போட்டால் நல்லா விலைபோகுமெண்டு நினைக்கிறவையளெல்லே நீங்கள், சமாதானம் உங்களுக்கு வெகுதூரம்" எண்டிட்டார். இனியென்ன ஆளோட பேச்செண்டிட்டு

"சரி! பின்ன பாலத்துக்குக் கீழ போய்ப் படும், நானா ஏதும், சமாதானம் இந்தா பட்லை வரை வந்திட்டுதெண்டு கட்டுரை எழுதிப் போட்டுட்டு, கொலம் அளந்து காசை வாங்கிக் கொண்டு போறன்" எண்டிட்டு வந்திட்டன். அடுத்த முறை கட்டுரை வாசிக்க ரெடியாய் இருங்கோ.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

## இந்தவாரம் உங்கள் பலன்

06.06.2003 தொடங்கி 12.07.2003 வரை

### சோதிட மாமணி தில்லை

**கிரக நிலை**

*மிதுனம்*- சூரியன், சனி, வெள்ளி, *கர்க்கடகம்*- வியாழன், புதன்,
*விருட்சிகம்*- கேது, *கும்பம்* - செவ்வாய், *இடபம்* - இராகு
சந்திரன் தனு, மகரம், கும்பம், மீனம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்



**மேடம் :**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) செய்தொழில் நன்மை, குடும்ப சுகம், மனமகிழ்ச்சி, பொருள் வரவு, உறவினர் உதவி, வெளியிட வாழ்க்கை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:-03.



**இடபம் :**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) காரியானுகூலம், தொழில் விருத்தி, உயர்ந்த நிலை, பிரயாண மிகுதி, உத்தியோக கஷ்டம், பிரயாசை மிகுதி, மாணவர் கல்வி நன்மை, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 04



**மிதுனம் :**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) மனக்குறை நீங்கும், தொழில் உயர்ச்சி, பெரியோர் உதவி, கடன் தொல்லை, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் கெடுபிடி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:-06.



**கர்க்கடகம் :**
(புனர்பூசத்து நாலங்கால், பூசம், ஆயிலியம்.) தொழில் விருத்தி, பணச் செலவு, உறவினர் உதவி, பெரியோர் சகவாசம், உத்தியோக பலிதம், புதிய பதவி கிடைத்தல், மாணவர் கல்வி மேன்மை, புதிய கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 04



**சிங்கம் :**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் கஷ்டம், பலவித சிரமம், வெளியிட வாழ்க்கை, பிள்ளைகளால் கவலை, உத்தியோக நன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி சிறப்பு, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.



**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) மனக்கிலேசம், தொழில் மந்தம், பிரயாண மிகுதி, வீண் கஷ்டம், உத்தியோக சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம், வெளியிடக் கல்வி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி,
அதிர்ஷ்ட இலக்கம்:- 03



**துலாம் :**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் உயர்ச்சி, காரியானுகூலம், உறவினர் பகை, அன்னியர் சகவாசம், உத்தியோக மேன்மை, பதவி மாற்றம், மாணவர் கல்வி சிறப்பு, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.



**விருட்சிகம் :**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) இனசன நன்மை, மனமகிழ்ச்சி, தொழில் விருத்தி, பலவித பேறு, பெரியோர் உதவி, உத்தியோக நன்மை, வெளியிடப் பிரயாணம், மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 05



**தனு :**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) மனக்குறையதிகம், காரியத் தடை, பெரியோர் உதவி, செய்தொழில் கஷ்டம், உத்தியோக சிரமம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி,
அதிர்ஷ்ட இலக்கம்:- 06



**மகரம் :**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை) தொழில் நன்மை, பணவரவு, வீண் செலவு, குடும்ப மகிழ்ச்சி, உத்தியோக தொல்லை, மேலதிகாரிகளின் உதவி, மாணவர் கல்வி மந்தம், முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.



**கும்பம் :**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி (முன் முக்கால்) இனசன நன்மை, மனக் கவலை, உறவினர் தொல்லை, பணவரவு மந்தம், உத்தியோகத்தில் மனக்கவலை, மாணவர்கள் கல்வியில் மாற்றம், வெளியிடக் கல்வி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி,
அதிர்ஷ்ட இலக்கம்:- 03



**மீனம் :**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) முயற்சி மேன்மை, உறவினரால் கவலை, பணச் செலவு, கடன் தொல்லை, உத்தியோக சிரமம், வீண்குறை கேட்டல், மாணவர்கல்வி கஷ்டம், உற்சாகமின்மை, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.



ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

2326657




# தூரத்து வெட்டு




அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வனிதா நகைகள் மின்னிப் பேசுகின்றன.

[illegible]


3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

2436331


இப்போதெல்லாம் மேலை நாடுகளில் மருத்துவர்கள் நேரத்திற்கு வைத்தியசாலைக்கு வராவிட்டாலும் கூட வீட்டிலிருந்தே சத்திரசிகிச்சை செய்யும் அளவுக்குத் தொழில்நுட்பம் முன்னேறிவிட்டது. மருத்துவர் ஓரிடத்திலும் நோயாளி மற்றொரு இடத்திலும் இருக்க கணனி தொடர்பாடல் மற்றும் ரோபோ இயந்திரங்களின் உதவியோடு சத்திரசிகிச்சைகள் நடத்தப்படுகின்றன. 2001ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ந் திகதி பிரான்ஸில் இருந்த ஒரு நோயாளிக்கு அமெரிக்காவில் இருந்த வைத்தியர் மூலம் சத்திரசிகிச்சை நடத்தப்பட்டது. நோயாளிக்கும் மருத்துவருக்கும் இடையிலான தூரம் 6222 கிலோ மீட்டர், வெற்றிகரமாகச் சத்திரசிகிச்சை செய்து முடிக்கப்பட்டது. உலகிலேயே அதிக அளவு தூரத்தில் இருந்தவாறு மேற்கொள்ளப்பட்ட அறுவைச்சிகிச்சை இதுதான். (இப்படி மருத்துவர்களை ரொம்ப தூரத்தில் வைத்து சத்திரசிகிச்சை செய்வதால் உள்ள பிரதான இலாபம் நோயாளியின் வயிற்றுக்குள் கத்தரியை வைத்துத் தைக்கமாட்டார்கள் என்பதுதான்.)

# சுமை



இதுவும் ஒரு வகை விளையாட்டுத்தான். தோளில் ஒருவரைச் சுமந்துகொண்டு அரை அளவில் இருக்கும் தண்ணீரில் வேகமாக ஓட வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இது ஓர் பிரபல்யமான தண்ணீர் விளையாட்டு. (FASTEST WORLDWIFE - CARRYING CHAMPIONSHIP RUN) இந்த விளையாட்டில் தற்போது பின்லாந்து நாட்டவர்கள் உலக சாதனை நிகழ்த்தி முன்னணியில் இருக்கிறார்கள். (கடந்த நாட்களில் எமது நாட்டின் தென் பகுதியின் பிரதான வீதிகளிலேயே இந்தப் போட்டிகளை நடத்தியிருக்கலாம்.)

# ஹை ஹை ஹீல்...



தான் உயரமான பெண் என்று காண்பிக்க ஹீல்ஸ் வைத்த பாதணி அணிவது சர்வசாதாரணமான விஷயம்தான். அதற்காக இப்படி 2 அடி உயரத்தில் ஹீல்ஸ் வைத்து யாரால்தான் நடக்க முடியும். ஆனாலும் பாருங்கள், இப்படியும் அணியத்தான் செய்கிறார்கள்.

# கடிக்கிறான்







குத்துச்சண்டை விளையாட்டில் யார் யாருடைய காதைக் கடித்தாலும் மைக்டைசன் ஹொலிபீல்ட்டின் காதைக் கடித்த சம்பவம்தான் நம் கண் முன்னால் வந்து மறையும். இதுதான் குத்துச்சண்டை உலகில் முன்னோடியான காது கடிப்புச் சம்பவம். அதன் பின்னர் பல முன்னணி குத்துச்சண்டைப் போட்டிகளில் இப்படியாக ஆங்காங்கே கடித்துக் குதறும் சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அடிபட்டுத் தோல்வி நெருங்கும் நேரத்திலோ அல்லது வெற்றிக் களிப்பிலோ காதைக் கடிப்பது குத்துச்சண்டையில் ஒரு பெஷனாக மாறிவருகின்றது என்று அமெரிக்க விளையாட்டு சஞ்சிகை ஒன்று அண்மையில் விமர்சித்திருந்தது. நீங்கள் இங்கே காணும் காட்சி லேட்டஸ்ட் காது கடிப்பு.

லொஸ்ஏஞ்ஜல்ஸில் நடைபெற்ற அதிபார குத்துச் சண்டைப் போட்டி ஒன்றின்போது லெனொக்ஸ் லெவிஸ் என்ற வீரர் போட்டியின் 6வது சுற்றில் உக்ரேனிய வீரர் விட்டாலி கிலிஸ்கோ என்பவரிடம் அடிவாங்கிய ஆத்திரத்தில் அந்த வீரரின் காதைக் கடித்துக் குதறினார். கீழே விழுந்து காதைக் கடிப் பதையும் கடுமையான கோபத்தோடு இருவரும் மோதிக்கொள்வதையும் காண்கிறீர்கள்.

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி சதுஷா** **29.06.2003**

லண்டனில் வசிக்கும் சிறுபாலன்-பிரபாலனி (கீதா) தம்பதியரின் செல்வப் புதல்வி சதுஷா தனது முதலாவது பிறந்த தினத்தை 29.06.2003 அன்று லண்டன் Eastham-இல் உள்ள தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். செல்வப் புதல்வியை இலங்கையில் [illegible] அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பா, அத்தை மிது தம்பதிகள் (இத்தாலி), அருள் (இத்தாலி), சிவராம் அம்மப்பா, அம்மம்மா, [illegible] தம்பதிகள், [illegible] சின்ன அம்மப்பா [illegible] தம்பதிகள், பிரபாகரன் செட்டித்தெரு, [illegible] (இத்தாலி), செந்தில்நாதன் தம்பதிகள் (இந்தியா), அத்தை [illegible], மச்சான், மச்சாளர்மார்கள், சிறுபாலன் தம்பதிகள், [illegible] மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் சதுஷாவை இறைவன் அருள் பெற்றுச் சிறப்போடு பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல் : எம்.ராமநாதன் மகேஸ்வரி, RAANI JEWELLERS, CHLAW.

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



**அகர்ஷா** **06.07.2003**

சிம்புரைச் சேர்ந்த பவனேந்திரன் சுதர்ஜினி தம்பதியரின் தவப் புதல்வியாய் பாரினில் உதித்த பவநிலா அகர்ஷா தனது முதலாவது பிறந்த நாளை ஆடித்திங்கள் 13ம் நாள் சூரிச் மாநிலத்தில் கோலாகலமாக விழாக்காணுகிறார். இவரை அன்போடு அப்பா, அம்மா, அண்ணா அகாஷ்கர், சூரிச் வாழ் பெரியப்பா, பெரியம்மா, ஆசை அண்ணாமார் அனுஷன், தனுஷன், இலண்டன் வாழ் சின்னத்தாத்தா, சித்தி, அன்ரி, மாமாமார், இலங்கை வாழ் அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அக்காமார், அத்தைமார், மாமாமார், மச்சான்மார், மச்சாள்மாரோடு சுற்றத்தாரும் நண்பர்களும் சகல செல்வங்களும் பெற்று அகிலத்திலோர் அம்புலியாய் பத்திர காளித்தாயின் அருள் பெற்று தீர்க்காயுள் நிறை கொண்டு நீடூழி வாழியென உளம் கொண்டு வாழ்த்துகின்றனர் வாழ்கவென்று.



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 6A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஜூலை 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.